
# ஸ்ரீ உபதேச அம்ருதம்

(Sri Upadesamrta)




மூலம்


## ஸ்ரீல ரூப கோஸ்வாமி

விளக்கம்

யுக ஆச்சார்யார்

ஸ்ரீமத் பக்தி வேதாந்த நாராயண மகாராஜா

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே



விளக்கம்

யுக ஆச்சார்யார்

ஸ்ரீமத் பக்தி வேதாந்த நாராயண மகாராஜா

# ஸ்ரீ உபதேச அமிர்தம்

## *(Sri Upadesamrta)*

மூல நூல் ஆசிரியர்:
**ஸ்ரீல ரூப கோஸ்வாமி**

ஒளி விளக்கம்:
யுக ஆச்சார்யர்
**ஸ்ரீ ஸ்ரீமத் பக்தி வேதாந்த நாராயண மகாராஜா**

இரண்டாம் பதிப்பு
Version 2.3 - Jun 27, 2024
வெளியீடு: ஸ்ரீகிருஷ்ண ஜென்மாஷ்டமி (Aug 26, 2024)

Gokul Publications

**ஸ்ரீ கௌரங்கா ஸ்ரீராதா மதன் மோகன் ஆலயம்**
(கன்னியாகுமரி)

ஜாதியில்லை, நிறமில்லை, மதமில்லை.
ஒரே இறைவன், ஒரே மந்திரம்

**ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண**
**கிருஷ்ண கிருஷ்ண ஹரே  ஹரே**
**ஹரே ராம ஹரே ராம**
**ராம ராம ஹரே ஹரே**

Our acknowledgements and appreciations go to all the devotees who helped in making and printing this book.

ஒளி விளக்கம்:
**Yuga Acharya Srila Narayana Goswami Maharaja**

வெளியீடு: Gokul Publications
Gokul Bhavan, 2/5 Mission Compound
Kottaram - 629703, Kanyakumari,
Tamil Nadu, South India

மொழி பெயர்ப்பு: Bhagavati Kanti Dasa
சரிபார்த்தல்: ஸ்ரீமதி ராதிகா தேவி தாஸி

அச்சிடுதல்: அஜய் கிருஷ்ண தாஸா

தொடர்பு: bkdasa@gmail.com
gokulbhajan.com
youtube.com/c/bkdasa
purebhakti.com

Phone: +91 959 796 9492
+91 750 222 2794
+91 960 066 8797

இந்த புத்தகத்தை பிரசுரிக்க ஸ்ரீல குருதேவரின் வழியில் தீட்சை எடுத்த கீழ்கண்ட பக்தர்களும் பக்தைகளும் பொருளுதவி செய்துள்ளனர்:

ஆனந்த கிருஷ்ண தாஸா
பிரேம பிரிய தாஸி
சியாம ராணி தாஸி
அஜய் கிருஷ்ண தாஸா
பிருந்தாவன தாஸி
கிருஷ்ண பிரிய தாஸி
சியாம சுந்தர தாஸா
ஜெய ரமண தாஸா

© Gaudiya Vedanta Publications – Some rights reserved.
Books and Content licensed under CC BY-ND 3.0
Permissions: purebhakti.com/pluslicense |
gvp.contactus@gmail.com

# பொருளடக்கம்

முன்னுரை....4
முகவுரை....6

சுலோகம் ஒன்று....17
பக்திக்கு எதிரான ஆறு விதமான உந்துதல்களை விலக்க வேண்டும்....17
சுலோகம் இரண்டு....37
பக்தியின் ஆறு தடைகள்....37
சுலோகம் மூன்று....50
பக்திக்கு உகந்த ஆறு விரதங்கள்....50
சுலோகம் நான்கு....58
பக்தியை வளர வைக்கும் கூட்டுக்கள்....58
சுலோகம் ஐந்து....62
மூன்று தரமான பக்தர்களும் அவர்களுக்கு சேவையும்....62
சுலோகம் ஆறு....71
வைஷ்ணவர்களை பூத உலகக் கண்ணால் பார்க்கக் கூடாது....71
சுலோகம் ஏழு....76
ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களையும் லீலைகளையும் பஜனை செய்தல்....76
சுலோகம் எட்டு....82
பஜனை முறையும் அதை எங்கே செய்ய வேண்டுமென்ற விதிகளும்....82
சுலோகம் ஒன்பது....91
எது எல்லாவற்றிலும் மிகச் சிறந்த புண்ணிய ஸ்தலம்?...91
சுலோகம் பத்து....95
ஸ்ரீ கிருஷ்ணரின் உச்சமான அன்புக்குரியவர் யார்?....95
சுலோகம் பதினொன்று....101
ஸ்ரீ ராதா குண்டத்தின் மகிமைகள்....101

வினாக்கள்....111

# முன்னுரை

ஸ்ரீஉபதேசாம்ருதத்தின் முதலாவது ஹிந்தி மொழிபெயர்ப்பு 1984 ஆம் ஆண்டு குருதேவரான ஓம் விஷ்ணுபாத பரமஹம்ஸ பரிவிராஜகாசார்ய அஷ்டோத்தர சத ஸ்ரீ ஸ்ரீமத் பக்தி வேதாந்த நாராயண மகாராஜாவால் பிரசுரிக்கப்பட்டது. அதன் முதல் ஆங்கில மொழி பெயர்ப்பு 1997 ஆம் ஆண்டு வெளியானது. இப்போது, ஸ்ரீல குருதேவரின் கருணையினால் இந்த தமிழ் மொழி பெயர்ப்பு உங்கள் முன் அளிக்கப் பட்டுள்ளது.

ஸ்ரீசைதன்ய மகாபிரபுவினால் முதலாவது உபதேசிக்கப்பட்டு, அதன்பின் ஸ்ரீல ரூப கோஸ்வாமி நமக்கு அளித்த அமிர்தமான அறிவுரைகளே இந்த ஸ்ரீஉபதேசாம்ருதம். இது, கிருஷ்ண பக்தியை உலகெங்கும் பரப்பி பெரும் புகழ் பெற்ற நித்ய லீல பிரவிஷ்ட ஓம் விஷ்ணுபாத அஷ்டோத்தர சத ஸ்ரீ ஸ்ரீமத் A.C பக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதரினால் முன்னால் பிரசுரிக்கப்பட்டது. "The Nectar of Instruction" என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அந்தப் பொக்கிஷம் வைஷ்ணவ சம்பிரதாயத்துக்குக் கிடைக்கப்பட்ட மிகப்பெரும் வரப்பிரசாதமாகும். அதற்காக இந்த உலகம் அவருக்கு என்றென்றும் கடமைப் பட்டுள்ளது.

ஸ்ரீகிருஷ்ணரின் அருள் பிரசாதத்துடன் அவர் புரிந்த சாதனைகள் சொல்லவொண்ணாதவை. அவருடைய மிக மிக நெருங்கிய நண்பர் தான் எங்கள் குருதேவர். இந்த சிறு புத்தகம், ஸ்ரீல பிரபுபாதரின் மூல மொழி பெயர்ப்பை நிறைவு செய்ய (complementary) உதவும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

ஸ்ரீல ரூப கோஸ்வாமி கருணையுடன் நமக்கு அளித்த ஸ்ரீஉபதேசாம்ருதத்தின் பதினொன்று சுலோகங்களில் ஒரு பக்தி சாதகனுக்கு வேண்டிய அத்தனை அறிவுரைகளும் அளிக்கப்பட்டுள்ளன. இந்த நூலின் இன்னொரு மகிமை என்னவென்றால், இதில் ஸ்ரீராதா ரமண தாஸ கோஸ்வாமியின் உபதேச பிரகாஸீகா விளக்கமும், ஸ்ரீசச்சிதானந்த பக்தி விநோத தாக்குராவின் பீயூஷ வர்ஷிணி விளக்கமும், ஸ்ரீபக்தி சித்தாந்த சரஸ்வதி கோஸ்வாமி பிரபு பாதருடைய விளக்கவுரையும் சேர்க்கப்பட்டுள்ளன.

இதைத் தமிழில் மொழி பெயர்க்கும் பெரும் பாக்கியத்தை அளித்த ஸ்ரீல குருதேவரின் கமலப் பாத தூளிகளை எங்கள் சிரம்

மேற்கொண்டு, ஶ்ரீராதா கிருஷ்ண பக்த ஜனங்களின் கமலப் பாதங்களை வணங்குகிறோம். இந்த மொழி பெயர்ப்பில் ஏதேனும் குறையிருந்தால் எங்களை மன்னித்தருளுமாறு பக்த கோடிகளை வேண்டிக் கொள்கிறோம்.

வைஷ்ணவர்களின் அடியேனுக்கு அடியவன்,
பகவதி காந்தி தாஸா
சியாமளி தேவி தாஸி

ஶ்ரீ கிருஷ்ண ஜென்மாஷ்டமி,
26 ஆகஸ்ட், 2024
USA

# முகவுரை

## (ஆங்கிலப் பதிப்பிலிருந்து)

ஸ்ரீஉபதேசாம்ருதம் என்ற இந்த நூல், ஸ்ரீகௌடிய வைஷ்ணவ சம்பிரதாயத்தில் மிகவும் உயர்ந்த ஸ்தானத்தில் வைத்துப் போற்றப் படுகிறது. உள்ளே ஆழ்ந்த பிரேமையையும், வெளியில் ஸ்ரீமதி ராதிகாவின் நிறத்தையும் கொண்டு தோன்றி, இதுவரையிலும் எவராலும் வழங்க முடியாத மிகவும் உயர்ந்ததும் அளவில்லாத பிரகாசமுமுடைய கிருஷ்ண பிரேமையை அனைவருக்கும் வாரி வாரி வழங்க வந்தவரே ஸ்ரீசைதன்ய மகாபிரபு. ஸ்ரீசைதன்ய மகாபிரபு வழங்கிய சமுத்திரம் போன்ற அனைத்து உபதேசங்களையும் ஸ்ரீல ரூப கோஸ்வாமி கடைந்து, அதிலிருந்து அவர் எடுத்த சாறு தான் ஸ்ரீஉபதேசாம்ருதம் ஆகும். பக்தி மார்க்கத்தைக் கடைப் பிடிக்கும் சாதகனுக்கு இந்த நூலில் கொடுக்கப் பட்டவை மிக மிக முக்கியமானவைகளாகும். இதில் கொடுக்கப்பட்டிருக்கும் உபதேசங்களைக் கடைப் பிடிக்கவில்லையென்றால், மிகவும் உயர்ந்ததும், அதே சமயம் அதி நுணுக்கங்களையும் கொண்ட, ராகானுக பக்தி மார்க்கத்தில் நுழைவது மிகக்கடினம் என்று கூறுவதற்குப் பதிலாக, அது முடியவே முடியாது என்றே கூறி விடலாம்.

பிரேம அவதாரமான ஸ்ரீசைதன்ய மகாபிரபு, தன் நித்தியமான ஆன்மீக உலகுக்குத் திரும்பிச் செல்லுவதற்கு சற்று முன்னால், அவரது தெய்வீகமான விப்ரலம்பா என்ற பிரிவுணர்வால் எப்போதும் மிகவும் உந்தப்பட்டுக் காணப்பட்டார். இவற்றை நாம் அவரது நெருங்கிய சேவகனாக எப்போதும் கூடவே இருந்த கோவிந்த தாஸர் எழுதிய நாள் குறிப்பேடுகளிலிருந்து அறிகிறோம். ஸ்ரீசைதன்ய மகாபிரபு இவ்வாறு பிரிவால் வாடியிருக்கும் போதெல்லாம் ஸ்ரீசொரூப தாமோதராவும் ஸ்ரீராய ராமானந்தரும் அவரது உணர்ச்சி நிலைகளை உணர்ந்து, அவற்றிற்குத் தக்கவாறு பற்பல பாடல்களைப் பாடி அமைதிப் படுத்த முயல்வார்கள். ஒரு சமயம் அவர் தன் பக்தர்களுடன் கடற்கரை ஓரத்தில் அமர்ந்து கொண்டே ஸ்ரீகிருஷ்ணரின் லீலைகளைப் பற்றி பக்தர்களுக்கு விவரித்துக் கொண்டிருந்தார். அப்போது அவர் அங்கேயுள்ள பசுமையான மரங்கள், கடலோரத்தின் நீல நிறமான கோடுகள் மற்றும் உயர்ந்த சேரி மணல் குவியல்களனைத்தும் சேர்ந்து, அவை அவருக்கு கோவர்த்தன மலையையும், அழகான பூந்தோட்டங்களையும் குஞ்சாக் காடுகளையும் தன் தீரத்தில் கொண்ட யமுனை நதியையும் ஞாபகப் படுத்தின. அவ்வளவு தான்! ஸ்ரீகிருஷ்ணரிடமிருந்து பிரிந்திருக்கும் துயரம் பீறிட்டு வெளி

வந்தது. ஏங்கி ஏங்கி அழ ஆரம்பித்தார். பின்னர் சிறிது நேரம் கழித்து அவரது உணர்ச்சி வசம் கொஞ்சம் குறைந்து சாந்தப் பட்ட பின்னர், அங்கே கூடியிருந்த பக்தர்களுக்கு மிகவும் இனிமையான மெல்லிய குரலில் உபதேசம் அருளினார். அந்த உபதேசங்களே இந்த ஸ்ரீஉபேதசாம்ருதத்தின் சுலோகங்களாகும்.

பக்தி மார்க்கத்தில் நுழைய விரும்பும் ஒரு சாதகன், ஆன்மீக வாழ்க்கைக்கு உதவாதவற்றையெல்லாம் முதலிலேயே விட்டுவிட வேண்டியது மிகவும் அவசியம். அவன் தன் கட்டுக்கடங்காத மனம், வேண்டாத வாக்கு, கோபம், நாக்கு, வயிறு மற்றும் புணர் இந்திரியங்களின் உந்துதல், அளவுக்கு மிஞ்சி உண்ணுதல், தேவையற்ற முயற்சிகள், வீண் வம்புப் பேச்சுக்கள், பக்தி மார்க்க விதிமுறைகளைச் சரியாகக் கடைப்பிடிக்காமலிருத்தல், கெட்ட சேர்க்கைகள், மாயாவாதம் போன்ற பிரயோஜனமற்ற கொள்கைகளில் மனதைச் செலுத்துதல் (அல்லது செலுத்த ஆசைப்படுதல்) - இவை அனைத்தையும் விட வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக, பக்தியை மேன்மேலும் வளர வைக்க உதவும் ஆர்வம், தீர்க்கம், பொறுமை, மற்றும் பக்தியைச் சார்ந்த நற்குணங்கள் அனைத்தையும் கொண்டு, சுத்த பக்தர்கள் விதித்த முறைகளைக் கடைப் பிடிக்க வேண்டும்.

இவ்வாறு ஓரளவு முன்னேறிய பின், அந்த சாதகன் ஆறு விதமான பக்த சங்கங்களில் ஈடுபட்டு, மூன்று விதமான வைஷ்ணவர்களுக்கும் தகுந்த மதிப்பை அளிக்க வேண்டும். கடைசியில் அந்த சாதகன் விரஜ பூமியில் மனதாலும் உடலாலும் வாழ்ந்து, ஸ்ரீகிருஷ்ணரிடம் மிகவும் ஆழ்ந்த பிரேமை கொண்டு விரஜ-ரஸ பிரேமையில் எப்போதும் திளைத்திருக்கும் பக்தர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, தன் நாக்கு, மனம் அனைத்தையும் ஸ்ரீகிருஷ்ணரின் நாமங்கள், ரூபம், குணங்கள் மற்றும் அவரது லீலைகளில் மட்டுமே தொடர்ந்து ஈடுபடுத்த வேண்டும். ஸ்ரீகிருஷ்ணருக்கு ஸ்ரீமதி ராதிகாவிடம் எந்த அளவுக்குப் பிரியமோ, அதே அளவுக்கு அவருக்கு ஸ்ரீமதி ராதிகாவின் ஸ்ரீராதா குண்டத்திலும் உண்டு. எனவே ஒரு கிருஷ்ண பக்தி சாதகன் பிரேம பக்தியின் சிகரமான 'மகா-பாவா' என்ற உத்தமமான நிலையின் மூல உறைவிடமான ஸ்ரீமதி ராதிகாவிடமும் ஸ்ரீமதி ராதிகாவின் குண்டத்திடமும் சரணடைய வேண்டும். எல்லா உபதேசங்களிலும் சாரமான இந்த ஸ்ரீஉபதேசாம்ருதத்தை ஸ்ரீசைதன்ய மகாபிரபு நமக்காக பெரிய பொக்கிஷமாக அளித்துள்ளார்.

# ஸ்ரீ உபதேசாம்ருதத்தின் மகத்தான ஆசிரியர் ஸ்ரீ ரூப கோஸ்வாமி

ஸ்ரீஉபதேசாம்ருதத்தின் ஆசிரியரான ஸ்ரீல ரூப கோஸ்வாமியைப் பற்றி எவர் தான் அறிய மாட்டார்? அவர் பாரத்வாஜ பிராமண கோத்திரத்தில் தென்னிந்தியாவிலுள்ள கர்நாடக மாநிலத்தில் உதித்தார். அவரது கோத்திரம் யஜுர் வேதத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றது. ஒரு விஷேஷமான சூழ் நிலையால், அவரது கொள்ளுத் தாத்தாவான ஸ்ரீபத்மநாபர், அவரது மூதாதையர்களின் வீட்டை விட்டுவிட்டு வங்காளத்தில் பாகீரதி நதியின் ஓரத்திலுள்ள நைகாத்தி என்ற கிராமத்தில் குடியேறினார். ஸ்ரீபத்மநாபரின் பேரனுக்கு மூன்று ஆண் குழந்தைகள். அமரா, சந்தோஷா, வல்லபா என்பது அவர்களுக்கு முதன் முதலில் அளிக்கப் பட்ட பெயர்கள். இவர்களே பின்னர் முறையே புகழ் பெற்ற ஸ்ரீசனாதன கோஸ்வாமி, ஸ்ரீரூப கோஸ்வாமி, ஸ்ரீஅனுபமா ஆவார்கள். அவர்களுடைய அசாதாரணமான கல்வி, உயர்ந்த தகுதி, உத்தமமான குணங்கள் அனைத்தையும் அச்சமயம் வங்காளத்தை ஆண்டு வந்த ஹுசேன்ஷா என்ற முகமதிய மன்னன் கண்டு ஆச்சரியமடைந்து, ஸ்ரீரூப கோஸ்வாமிக்கும் ஸ்ரீசனாதன கோஸ்வாமிக்கும் சாகர மல்லிகா, தபீர காஸா என்று அவர்களுக்குப் புதுப் பெயர்களையும் சூட்டி, அவர்களை முதன் மந்திரியாகவும் சொந்த செயலாளராகவும் அமர்த்திக் கொண்டார்.

ஆனால் வெகு சில காலங்களிலேயே அவர்களுக்குத் தங்கள் உண்மையான எஜமானனான, கலியுக வரதர் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவிடம் தொடர்பு கிடைத்து விட்டது. பின்னர் சீக்கிரமே தங்கள் அனைத்து செல்வங்களையும், பெரும் பதவிகளையும், உலக சம்பந்தங்கள் அனைத்தையும் துறந்து, ஸ்ரீராதா கிருஷ்ணரின் உள் விருப்பத்தைப் பூர்த்தி செய்து முழுவதுமாக தங்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டி, மகத்தான துறவிகளானார்கள். பின்னர் சைதன்ய மகாபிரபுவின் கட்டளையில் அவர்கள் விரஜ பூமிக்குச் சென்று அங்கே அழிந்திருந்த புண்ணியத்தலங்கள் அனைத்தையும் துலக்கியது மட்டுமின்றி, முறையான விக்கிரக வழிபாட்டு முறைகளையும் அவர்கள் ஏற்படுத்தினார்கள். முறையான பக்தி சாஸ்திரங்களைப் படைத்ததுடன், பக்தி மார்க்கத்துக்குத் தேவையான நல்லொழுக்க விதி முறைகள் அனைத்தையும் வகுத்தனர்.

மேலும், பிருந்தாவனத்தில் புகழ்பெற்ற ஸ்ரீகோவிந்த விக்கிரகத்தைத் திரும்பவும் துலக்கி, மிகப் பெரிய கோயிலையும் கட்டி, மகத்தான வழிபாடுகளை வகுத்த பெருமைகள் அனைத்தும் ஸ்ரீரூப கோஸ்வாமியை மட்டுமே சாரும். அவர் 1489 ஆம் வருடம் தோன்றி 1564 ஆம் ஆண்டில் மறைந்தார். ஸ்ரீமத் பாகவதத்துக்கு

விளக்கவுரையாக ஸ்ரீஜீவ கோஸ்வாமி எழுதிய 'லகு வைஷ்ணவ தோஷாணீ' - யில் அவர் படைத்த கீழ்வரும் சாஸ்திரங்கள் குறிக்கப் பட்டுள்ளன. அவை: (1) ஸ்ரீ ஹம்ஸதூதா, (2) ஸ்ரீ உத்தவ சந்தேஸா, (3) ஸ்ரீ கிருஷ்ண ஜன்ம திதி விதி, (4) ஸ்ரீ பிருகத் கிருஷ்ண கணோதேஸ தீபிகா, (5) ஸ்ரீ லகு கிருஷ்ண கணோதேஸ தீபிகா, (6) ஸ்ரீ ஸ்தவ மாலா, (7) ஸ்ரீ விதக்த மாதவ நாட்டகா, (8) ஸ்ரீ லலிதா மாதவ நாட்டகா, (9) ஸ்ரீ தான கேலி கௌமுடி, (10) ஸ்ரீ பக்தி ரஸாம்ருத சிந்து, (11) ஸ்ரீ உஜ்வல நீலமணி, (12) ஸ்ரீ பிரயுக்தாக்ய சந்திரிகா, (13) ஸ்ரீ மதுரா மகாத்மியா, (14) ஸ்ரீ பத்யாவளி, (15) ஸ்ரீ நாட்டக சந்திரிகா, (16) ஸ்ரீ லகு பாகவதாம்ருதா, (17) ஸ்ரீ சாமான்ய விருத்தாவளி லக் ஷணா, (18) ஸ்ரீ உபதேசாம்ருதம்.

## ஸ்ரீராதா ரமண தாஸ கோஸ்வாமி

(உபதேச பிரகாஸீகா விளக்கத்தின் ஆசிரியர்)

ஸ்ரீராதா ரமண தாஸ கோஸ்வாமி என்று பெயர் பெற்ற வைஷ்ணவர், ஸ்ரீஉபதேசாம்ருதத்திற்கு சமஸ்கிருதத்தில் விளக்கவுரை எழுதினார். இது சுருக்கமான ஆனால் தேவையான சிறந்த விளக்கவுரையாகும். முன்னால் ஸ்ரீகோபால பட்ட கோஸ்வாமி நிறுவிய ஸ்ரீராதா ரமண விக்கிரகத்துக்குப் பரம்பரையாக சேவை செய்து வரும் விருந்தாவன கோஸ்வாமிகளின் வம்சத்தில் உதித்தவர் அவர். அவரது தகப்பனாரின் பெயர் ஸ்ரீகோவர்த்தன லால கோஸ்வாமி. அவரது தாத்தாவின் பெயர் ஸ்ரீஜீவன லால கோஸ்வாமியாகும். ஸ்ரீஜீவன லால கோஸ்வாமிதான் ஸ்ரீராதா ரமண தாஸாவின் தீட்ச குருவும் சிக்ச குருவுமாகும். ஸ்ரீராதா ரமண தாஸர் சமஸ்கிருதத்திலும் இந்தியிலும் பெரிய வித்துவானாக இருந்தது மட்டுமின்றி சிறந்த கவிஞராகவும் இருந்தார். அவர் ஸ்ரீமத் பாகவதத்துக்கு விளக்கவுரையாக எழுதிய தீபிகாதீப்பனீ என்ற நூல் பற்பல பேரறிஞர்களின் மதிப்பிற்குரியது. அதே போல் அவரது உபதேச பிரகாஸீகாவும் ஏராளமான வைஷ்ணவர்களால் மிகவும் போற்றப்படுகிறது.

# ஸ்ரீ சச்சிதானந்த  பக்தி விநோத  தாக்குரா

(பீயூஷ வர்ஷிணி விருத்தி விளக்கத்தின் ஆசிரியர்)

அளவின்றி இந்திரிய சுகங்களுக்கு அடிமையாகி, சுத்த பக்தி தற்காலிகமாக மறைந்திருந்த இந்த நவீன காலத்தில், பக்தி விநோத தாக்கூரா  நூற்றுக் கணக்கான பக்தி நூல்களை எழுதி சுத்த பக்தியை திரும்பவும் நிலை நாட்டினார். அவர் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் மிகவும் நெருங்கிய நித்திய பக்தர். அவர் ஸ்ரீசைதன்ய மகாபிரபு கற்பித்த பிரேம பக்தி தர்மங்களை பல வழிகளில் உபதேசித்ததால் அவரை ஏழாவது கோஸ்வாமி என்று கூறுவார்கள். மேலும் அவர் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் புனித நாமங்கள் (ஸ்ரீகௌர நாமா), அவரது புனித தலங்கள் (ஸ்ரீகௌர தாமா), மகாபிரபுவின் உள்ளாசைகள் (ஸ்ரீகௌர காமா), மற்றும் மகாபிரபுவின் லீலைகள் (ஸ்ரீகௌர லீலா) அனைத்தையும் வெளிக் கொண்டு வந்ததால் அவரை மகாபிரபுவின் லீலைகளை எழுத வந்த வியாசரின் அவதாரம் என்றே கருதுகின்றனர்.

அவர் மேற்கு வங்காளத்தில் ஸ்ரீசைதன்ய மகாபிரபு தோன்றிய ஸ்ரீமாயாபூரின் பக்கத்திலுள்ள வீரநகரம் என்ற கிராமத்தில் 1838 -ஆம் வருடம் செப்டம்பர் மாதம்  2 -ஆம் நாள், கல்வியில் மிகச் சிறந்து விளங்கிய ஒரு குடும்பத்தில் தோன்றினார். அவரது இளமைப் பெயர் கேதர நாத தட்டா என்பதாகும். அவர் மிகவும் புத்திசாலியாகவும் அறிஞராகவும் இருந்தார். அவர் குடும்ப வாழ்க்கையை மேற்கொண்டு, ஆங்கில ஆட்சியின் கீழ் ஒரு பெரும் அரசாங்க உத்தியோகத்திலும்  இருந்தார். ஆனால் அதே சமயம் அவர் ஸ்ரீகௌர சுந்தரரின் அந்தரங்க ஆசைகளைப் பூர்த்தி செய்ய, உப நிஷத்துக்கள், பிரம்ம சூத்திரம், ஸ்ரீமத் பாகவதம், பகவத் கீதை, மற்றும் கோஸ்வாமிகள் இயற்றிய விளக்கவுரைகள் இவற்றையெல்லாம் மொழிபெயர்த்தும், தனது சொந்த நூல்களை இயற்றியும், மற்றும் வார அல்லது மாதங்கள் தோறும் வெளியாகும் ஆன்மீகப் பத்திரிகைகளில் எழுதியும் பெரும் சேவைகள் புரிந்தார். அது மட்டுமல்லாமல் "நாம கதா" என்ற பெயரில் ஹரி நாம சங்கீர்த்தனங்களை ஊர் ஊராகவும்  நகர் நகராகவும் சென்று நடத்தினார். மேலும் அழிந்து போய் மறக்கப் பட்ட பற்பல புண்ணிய தலங்களையும் துலக்கினார்.

தன் கடைசிக் காலத்தில் தனது செல்வம், குடும்பம் அனைத்தையும் துறந்து விட்டு புனிதமான பாகீரதி நதி தீரத்தில் நவத்வீப்பின் எல்கைகளுக்குள் இருந்த ஸ்ரீசுவானந்த சுக்கட குஞ்சா என்ற தோட்டத்தில் நிரந்தரமாக வாழ்ந்து வந்தார்.  அங்கே அவர் தனக்கு எதையுமே சொந்தம் என்று கொள்ளாமல்  பக்தி சாதனையில் சிகரமான ராகானுக பஜனையைத் தொடர்ந்து நடத்தி வழிபாடு செய்தார். அவர் இந்த உலகுக்கு வரவில்லையென்றால் மகா

பிரபுவின் பிறப்பிடம், மற்றும் அவர் லீலைகள் புரிந்த புண்ணியத்தலங்கள் மற்றும் அவரது உபதேசங்கள் - அனைத்துமே மறைந்து போயிருக்கும்! இன்று உலகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் ஹரி நாம சங்கீர்த்தனம் நடைபெற்று ஆனந்தத்துடன் ஸ்ரீகௌர கிருஷ்ண பக்தியின் மிகவும் உயரமாக அலைகள் உலகெங்கும் அடிக்கின்றன. மேற்கத்திய இளைஞர்களும் கூட இந்தப் பக்தி ரசத்தை அருந்தி ஆனந்தமாக ஆடிப் பாடி மகிழ்கின்றனர். இந்தப் பக்தி வெள்ளத்தைப் பரவசமாக உலகெங்கும் பாய வைத்த மகிமை பக்தி விநோத தாக்குராவையே சேரும்.

அவர் சுமார் நூறு நூல்களை சமஸ்கிருதம், வங்காளம், இந்தி, ஆங்கிலம், ஒரியா மற்றும் பிற மொழிகளிலும் இயற்றியிருக்கிறார். அவற்றில் கீழ் வருபவைகள் குறிப்பிடத்தக்கவை: (1) பிரம்ம சூத்திரம், (2) பகவத் கீதை, (3) முக்கிய உப நிஷத்துக்கள், (4) ஸ்ரீமத் பாகவதம் மற்றும் (5) ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம் இவைகளுக்கு விளக்கவுரைகள், அவரது சொந்த நூல்களான (6) ஜைவ தர்மம், (7) ஸ்ரீசைதன்ய சிக்ஷாம்ருதம், (8) ஸ்ரீசைதன்ய மகாபிரபு சிக்ஷா, (9) தட்ட கௌஸ்துபா, (10) ஸ்ரீகிருஷ்ண சம்ஹிதம், (11) தத்துவ விவேகம், (12) ஸ்ரீபஜன ரஹஸ்யம், (13) தஸ மூல சிக்ஷா, (14) சரணாகதி, (15) கீதா மாலா, (16) கல்யாண கல்பதாரு, (17) ஹரி நாம சிந்தாமணி, (18) பிரேம பிரதீபா, (19) ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் வாழ்க்கையும் உபதேசங்களும்.. - இவ்வாறு அநேகமான நூல்களை இயற்றினார். 1914 -ஆம் வருடம் ஜுன் மாதம் 23 -ஆம் தேதி அவர் மறைந்தார்.

## ஸ்ரீ பக்தி சித்தாந்த சரஸ்வதி கோஸ்வாமி பிரபு பாதர்

(விளக்கவுரை விளக்கவுரையின் ஆசிரியர்)

ஸ்ரீ ஸ்ரீமத் பக்தி சித்தாந்த சரஸ்வதி கோஸ்வாமி பிரபு பாதர் 1874 - ஆம் வருடம் பெப்ருவரி மாதம் மூன்றாம் நாள் வெள்ளிக்கிழமை மாகா மாதத்தில் வரும் கிருஷ்ண பஞ்சமியில் தோன்றினார். ஸ்ரீமன் மகாபிரபுவின் நித்திய பக்தரும் மிகவும் புகழும் வாய்ந்த ஸ்ரீபக்தி விநோத தாக்கூர் தான் இவரது தகப்பனாரும் சிக்ச குருவும் ஆவார். அவரது இளமைப் பெயர் ஸ்ரீவிமலா பிரசாதா என்பதாகும். தன் சிறு வயதிலிருந்தே அவர் மிகவும் அசாதாரணமான அறிஞராகவும் ஆன்மீகத் தத்துவங்களில் மேதையாகவும் நன்னடத்தையில் சிறந்தவராகவும் விளங்கினார். எல்லாவிதமான அறிவுகளிலும் அவர் நிகரின்றி விளங்கியதால் தன் பதினைந்தாம் வயதிலேயே உயர்ந்த அந்தஸ்திலிருந்த வைஷ்ணவர்களிடமிருந்து "ஸ்ரீசித்தாந்த

சரஸ்வதி" என்ற பட்டத்தைப் பெற்றார். ஸ்ரீசித்தாந்த சரஸ்வதி என்றால் நிலை நாட்டப் பட்ட அனைத்து உண்மை ஞானங்களின் முழு வடிவம் என்று பொருள்.

அவர் 1918 -ஆம் ஆண்டில் துறவறம் பூண்டு, பரிவிராஜகா சாரியா ஸ்ரீபக்தி சிந்தாந்த சரஸ்வதி என்ற பெயரில் அழைக்கப் பட்டார். வழிபடத்தக்கவரான ஸ்ரீமத் கௌர கிஷோர தாஸ பாபாஜி மகாராஜிடம் அவர் தீட்சை எடுத்துக் கொண்டார். ஸ்ரீமன் மகாபிரபுவின் பிறப்பிடமான ஸ்ரீமாயாபூரில் ஸ்ரீசைதன்ய மடம் என்ற மடத்தையும் முதலாவதாக ஏற்படுத்தினார். பின்னர், வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா, சென்னை, மும்பை, டெல்லி, உத்தர பிரதேசம் மற்றும் இந்தியாவின் பல இடங்களிலும், மேற்கத்திய நாடுகளிலுமாக சமார் 64 மடங்களை நிறுவினார். அங்கெல்லாம் அவர் ஸ்ரீமன் மகாபிரபு உபதேசித்த பிரேம மய பக்தியை கல்வி அறிவுள்ளவர்களுக்கும் இளைஞர்களுக்கும் போதித்தார். தனது பரிசுத்தமான குணங்களாலும், உபதேசங்களாலும் அவர்களது இதயங்களைக் கவர்ந்து, அவர்களுக்கு உயர்வான திரி தண்டி சன்னியாசமும் அளித்து, உள் நாட்டிலும் வெளி நாடுகள் எங்கிலும் சென்று போதிக்குமாறு அனுப்பினார். அவர்களை பற்பல மொழிகளில் பத்திரிகைகளில் எழுதவும் ஊக்கமளித்தார்.

மேலும் அவர் தெய்வ வர்ணாஸ்ரமா என்ற வைஷ்ணவ சம்பிரதாய முறையையும் ஏற்படுத்தினார். இந்தியா முழுவதும் அலைந்து சுத்த பக்தியைப் பற்றி மிகவும் ஈடுபாட்டுடன் போதித்தது மட்டுமின்றி, மற்றவர்களையும் போதிக்குமாறு தூண்டினார். தன் சொந்தமான நூல்களை இயற்றியது மட்டுமின்றி, உபநிஷத்துக்கள், புராணங்கள், பிரம்ம சூத்திரம், ஸ்ரீமத் பாகவதம், ஸ்ரீமத் பகவத் கீதை, நான்கு சம்பிரதாயங்களிலுள்ள கோஸ்வாமிகள் எழுதிய தீர்க்க நூல்கள் அனைத்தையும் விளக்கி பத்திரிகைகளில் எழுதிப் பிரசுரித்தார். இவ்வாறு ஸ்ரீகௌடிய சம்பிரதாயத்தின் ஆன்மீகப் பெட்டகத்தைத் திறந்து வெளியிட்டார்! இதனால் இந்த உலகம் அவருக்கு என்றென்றும் கடன் பட்டுள்ளது.

எனது மிக உயர்ந்த வழிபாட்டுக்குகந்த ஸ்ரீ குருதேவரான ஸ்ரீஸ்ரீமத் பக்தி பிரஞ்ஞான கேசவ கோஸ்வாமி மகாராஜா, அவரது சீடராகும். ஸ்ரீஸ்ரீமத் பக்தி பிரஞ்ஞான கேசவ கோஸ்வாமி மகாராஜா பரமஹம்ஸ வைஷ்ணவர்களுக்கெல்லாம் மணி மகுடம் போன்றவர். என் குரு தேவரான அவர், ஸ்ரீகௌடிய சம்பிரதாயத்தின் ஆச்சாரியாராகவும் அதன் பாதுகாவலராகவும் இருப்பது மட்டுமின்றி, இந்தியாவில் அநேக மடங்களுக்கு அவர் தான் பொறுப்பாளியாக இருந்தார். அவர் தனது சொந்த நூல்களை இயற்றி வெளியிட்டது மட்டுமின்றி, பக்தி விநோத தாக்குராவின் பற்பல நூல்களையும் மறு பிரசுரங்கள் செய்தார். அவரது தனிப்பட்ட கிருபையினாலும் கருணையினாலும் பேரளவான

நூல்கள் தொடர்ந்து ஸ்ரீகௌடிய வேதாந்த சமிதியிலிருந்து வெளி வந்து கொண்டேயிருக்கின்றன.

கடைசியாக, தற்போதைய கௌடிய வேதாந்த சமிதியின் ஆச்சாரியராக இருக்கும் பரிவிராஜகாசாரியர் ஸ்ரீஸ்ரீமத் பக்தி வேதாந்த வாமன மகாராஜ் அவர்களுக்கும் நான் நன்றிக் கடன் பட்டுள்ளேன். அவரது தனிப்பட்ட விசேசமான ஊக்கத்தாலும் உற்சாகத்தாலும் மட்டுமே இந்த ஸ்ரீஉபதேசாம்ருதத்தின் ஹிந்தி மொழி பெயர்ப்பு வெளியில் வருகிறது. அவருக்கு நான் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளேன். இதை அவர் நமது ஸ்ரீகுருதேவரின் தாமரைக் கைகளில் சேர்ப்பித்து அவரது உள்ளாசையைத் திருப்திப் படுத்த வேண்டுகிறேன். இதுவே நான் அவரது பாதங்களில் சமர்ப்பிக்கும் வேண்டுதல்.

பக்தியைப் பெறுவதற்கான ஆவலுடனும் நம்பிக்கையுடனும் இந்த நூலை ஒரு சாதகன் படித்தால் அது ஸ்ரீசைதன்ய மகாபிரபு போதித்த பிரேம தர்மத்தைப் பெற தகுதியை அளிக்கும் என்பது என் முழு நம்பிக்கை. மிகவும் போற்றத் தக்க பக்தர்கள் இந்த நூலால் மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள் என்று நம்புகிறேன்.

ஸ்ரீஸ்ரீ குரு கௌரங்கா ராதா விநோத பிஹாரியிடம் அவர்களுடைய தாராளமான கிருபையை நம்மேல் பொழியுமாறு வேண்டிக் கொள்கிறேன். அவர்களது தாமரைப் பதங்களில் என்னுடைய தாழ்மையான வந்தனங்களைச் செலுத்துகிறேன் (ஸ்ரீல ரகு நாத கோஸ்வாமியின் ஸ்ரீ முக்த சரித்திரத்திலிருந்து):

*ஆததானஸ் திருணம் தந்தைர்*
*இடம் யாஸே புனஹ புனஹ*
*ஸ்ரீமத் ரூப பதாம் போஜ*
*தூலிஹி ஷியாம் ஜன்ம ஜன்மனி*

"ஒரு வைக்கோல் துரும்பை என் பற்களினிடையில் வைத்துப் பிடித்துக் கொண்டு, என் அனைத்துப் பிறவிகளிலும் ஸ்ரீல ரூப கோஸ்வாமியின் பாதக் கமலத்தின் ஒரு தூசியைப் பெற நான் திரும்பத் திரும்ப மன்றாடி யாசிக்கிறேன்."

வைஷ்ணவர்களின் அடியேனுக்கு அடியவன்,
திரிதண்டி பிக்ஷு ஸ்ரீபக்தி வேதாந்த நாராயணா.

புனிதமான அக்ஷய திருதியை, 1984
ஸ்ரீ கேசவாஜி கௌடிய மடம்
மதுரா, உத்தரப் பிரதேசம், இந்தியா

# சுலோகம் ஒன்று

## பக்திக்கு எதிரான ஆறு விதமான உந்துதல்களை விலக்க வேண்டும்.

வாச்சோ வேகம் மனஸ க்ரோத வேகம்
ஜிஹ்வா வேகம் உதரோ பஸ்த வேகம்
ஏத்தான் வேகான் யோ விஷஹேத்த தீராஹ
ஸர்வாம் அபீமாம் ப்ருத்வீம் ஸ ஸிஸ்யாத்

### மொழி பெயர்ப்பு

தீராஹ - உலக இன்பங்கள், முக்தி, மற்றும் யோக சித்திகள் போன்ற அனைத்து ஆசைகளையும் அறவே நீக்கிய தன்னடக்கமுள்ள புத்திமான்; யஹ - எவன்; விஷஹேத்த - அடக்க முடியும்; ஏத்தான் - இவை எல்லாம்; வேகான் - அளவு கடந்த உணர்ச்சி வசம்; வாச்சோ வேகம் - பேசுவதற்காகத் துடித்தல்; மனஸ - மனதின் துடிப்பு; க்ரோத வேகம் - கோபப் படுதல்; ஜிஹ்வா வேகம் - அடங்காத நாக்கு; உதர உபஸ்த வேகம் - வயிறு, மற்றும் புணர் உறுப்புகளின் உந்துதல் வேகங்கள்; ஸஹ - அவன்; ஸிஸ்யாத் - உபதேசம் பண்ண முடியும்; இமாம் - இது; ஸர்வாம் - எல்லா; ப்ருத்வீம் - உலகம்; அபி - கூட

### பொருள்

எந்த ஒரு தன்னடக்கமுள்ள புத்திமான், பேசுவதற்காக எழும்பும் ஆசையையும், அலைபாயும் மனத்தையும், கிளம்பும் போபத்தையும், ஆவேசப்படும் நாவையும், வற்புறுத்தும் வயிற்றையும், சுகிக்கத் துடிக்கும் புணர் இந்திரியங்களையும் கட்டுப் படுத்துவானோ, அவன் இந்த உலகத்துக்கே ஆசிரியனாகி உபதேசம் செய்ய முடியும். அதாவது இவ்வுலகத்தில் வாழ்பவர்கள் அனைவரும் அந்த தன்னடக்கமுள்ள மகானிடம் சீடர்களாகி விடுவார்கள்.

### மங்களா சரணம்

முதலாவதாக நான் எனது அடுக்கடுக்கான வணக்கங்களை சிறப்பான வழிபாட்டுக்குரிய என் குருதேவரான நித்ய லீலா

பிரவிஷ்ட ஓம் விஷ்ணு பாத அஷ்தோத்தர சத ஶ்ரீஶ்ரீமத் பக்தி பிரஞ்ஞான கேசவ கோஸ்வாமி மகாராஜாவுக்கும், இதற்கு விளக்கவுரை விளக்கம் அளித்த என் பரம குருவான ஶ்ரீஶ்ரீமத் பக்தி சித்தாந்த சரஸ்வதி கோஸ்வாமி பிரபுபாதருக்கும், இதற்கு பியூஷ-வர்ஷிணி விளக்கம் அளித்த என் பராத்பர குருதேவரான ஶ்ரீஶ்ரீமத் பக்தி விநோத தாக்குராவுக்கும், இதற்கு உபதேச பிரகாஷிகா தீக்கா எழுதியவரும், ஶ்ரீராதா ரமண விக்கிரகத்தின் அடியவரான ஶ்ரீராதா ரமண தாஸ கோஸ்வாமிக்கும், அரியதற்கும் அரிதான சிருங்கார ரஸ மயமான பக்தி லயத்தை இந்த ஶ்ரீஉபதேசாம்ருதம் மூலம்

மிகப் பெரும் பொக்கிஷத்தை அளித்த ஶ்ரீரூப கோஸ்வாமிக்கும், ஶ்ரீமதி ராதாவின் நிறத்தையும் அந்தரங்கமான பக்தி பாவங்களால் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டு, ஶ்ரீரூப கோஸ்வாமிக்குக் குருவாக வந்த ஶ்ரீசைதன்ய மகாபிரபுவுக்கும் அவர்களது மலர் பாதங்களில் சமர்ப்பிக்கிறேன். இவர்கள் அனைவரின் பாத கமலங்களில் திரும்பத் திரும்ப நான் விழுந்து நமஸ்கரித்து இந்த உபதேச பிரகாஷிகா தீக்காவை மொழி பெயர்க்க ஆரம்பிக்கிறேன்.

## உபதேச பிரகாஷிகா தீக்கா

(மூலம்: ஶ்ரீராதா ரமண தாஸ கோஸ்வாமி)

ஶ்ரீராதா ரமணனுக்கு எல்லாம் வெற்றி உண்டாகட்டும்! தனக்குச் சரி நிகரான அவதாரமான ஶ்ரீபலதேவ பிரபு அவதூதராக வந்த ஶ்ரீநித்யானந்த பிரபு, மகா விஷ்ணுவின் அவதாரமான ஶ்ரீஅத்வைத ஆச்சாரியார், தனது வீரியமான ஶ்ரீகதாதரர், மற்றும் பக்த கூட்டத்துடன் வரும் ஶ்ரீவாஸா, இப்படி அனைவருடனும் பவனி வந்த ஶ்ரீசைதன்ய மகாபிரபுவுக்கு என்னுடைய சாஷ்டாங்க நமஸ்காரங்களை நான் செலுத்துகிறேன். உலகத்திலுள்ள அனைத்து சக்திகளுக்கும் ஆதாரமான ஶ்ரீசைதன்ய மகாபிரபுவின் பாதக் கமலங்களில் நான் சரணடைகிறேன். மேலும், சிருங்கார ரஸத்தைத் தன் பொக்கிஷமாகக் கொண்ட ஶ்ரீரூப கோஸ்வாமிக்கு என் மிகவும் மரியாதையான வணக்கங்களைச் சமர்ப்பிக்கின்றேன். 'உன்னதோஜ்வல பிரேம ரஸம்' என்று அழைக்கப்படும் சிருங்கார ரஸ பக்தியை விவரிப்பதையே அவர் தன் வாழ்க்கையின் ஒரே குறிக்கோளாகக் கொண்டிருந்தார். ஶ்ரீராதா கிருஷ்ண பக்தியின் உன்னத உச்சமான பிரகாசமே சிருங்கார ரஸ பக்தியாகும். ஶ்ரீரூப கோஸ்வாமி எப்போதும் ஶ்ரீராதா கோவிந்தருக்கு பணிவிடை செய்வதில் மட்டுமே தன்னை முழுவதுமாக செலுத்தியிருந்தார். இந்த விதமான பிரேம ரஸத்தை எவ்வாறு பெறலாம் என்று உலகத்து மக்கள் அனைவருக்கும் உபதேசித்து அவர்களைப் புனிதப் படுத்தினார். மேலும், உலக சக்தியான மாயையில் சிக்கி ஆதரவற்று இழிவுபட்ட மக்களிடம் கருணை கொண்ட ஶ்ரீகோபாலபட்ட கோஸ்வாமிக்கும் எனது நமஸ்காரங்களைச் செலுத்துகிறேன்.

கலியுலக அவதாரமாகத் தோன்றி, ஸ்ரீஹரி நாமத்தையும் பகவத் பிரேமையையும் வாரி வாரி வழங்கி, இந்தப் பூலோகத்திலிருக்கும் ஜீவன்களுக்குப் பரலோகத்திற்கு செல்ல வழி வகுத்த ஸ்ரீசைதன்ய மகாபிரபுவுக்கு என் வணக்கங்களை திரும்பவும் சமர்ப்பிக்கிறேன். ஸ்ரீகௌர பக்தியை அளவில்லா ஜீவன்களுக்கு வழங்கியவரும் ஸ்ரீகோபால பட்ட கோஸ்வாமியின் சீடரும், ஸ்ரீராதா ரமணனின் அடியவனும் ஆகிய ஸ்ரீகோபி நாத தாஸாவுக்கும் எனது வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், எனது தாத்தாவும் குருதேவருமான ஸ்ரீஜீவன லாலாவுக்கும் அடியேன் வந்தனத்தைச் செலுத்துகிறேன். இவர்கள் அனைவருக்கும் என் வந்தனங்களைச் செலுத்தி, ஸ்ரீரூப கோஸ்வாமி எழுதிய ஸ்ரீஉபதேஸாம்ருதத்தை சாதகர்களின் பயனுக்காக மொழி பெயர்க்க ஆரம்பிக்கிறேன்.

ஸ்ரீபக்தி ரஸாம்ருத ஸிந்துவில் ஸ்ரீரூப கோஸ்வாமி உத்தம பக்தியை விவரித்துள்ளார். ஸ்ரீகிருஷ்ணரை மட்டுமே எப்போதும் நினைத்து, ஞானம், கர்மாக்களில் எந்த விதமான விருப்பமும் இல்லாமல், ஸ்ரீகிருஷ்ணரை மகிழ்விப்பதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு, அதற்காக மட்டுமே செயலாற்றுவதே உத்தம பக்தியாகும். அதில் முக்திக்கோ, இறைவனிடம் சேர வேண்டும் என்ற ஞான மார்க்கத்திற்கோ கொஞ்சம் கூட இடம் கிடையாது. ஸ்ரீகிருஷ்ணரை மகிழ்விப்பதைத் தவிர வேறு எதற்கும் விருப்பமே வரக் கூடாது. இப்படிப்பட்ட உன்னதமான பக்தி நிலை, காமமும் கோபமும் கொள்பவரிடம் எவ்வாறு வர முடியும்? ஒரு போதும் இயலாது. இதைப் பற்றி பத்ம புராணத்தில் கூறப்பட்டுள்ளது என்னவென்றால்:

*சோகாமர்ஷாதிபிர் பாவைர்*
*ஆக்ராந்தம் யஸ்ய மானஸம்*
*கதம் தத்ர முகுந்தஸ்ய*
*ஸ்பூர்த்தி ஸம்பாவனா பவேத்*

"அழுகை, கோபம் போன்ற குணங்கள் குடி கொண்டிருப்பவரிடம் எப்படி ஸ்ரீமுகுந்தன் (ஸ்ரீகிருஷ்ணர்) தோன்ற முடியும்?"

இதன் விளக்கம் என்னவென்றால், காமம், கோபம், பேராசைகளுடன் சார்ந்த (மூல சுலோகத்தில் கூறப்பட்டுள்ள) ஆறு விதமான குற்றங்கள் ஒருவனிடம் இருந்தால் அது அவனை எல்லா உலக இன்பங்களையும் அனுபவிக்க வேண்டுமென்ற ஆசையில் இழுத்து ஆழ்த்தி விடும். இத்தகைய மாசு அடைந்த இதயத்தில் ஒருபோதும் தூய பக்தி தோன்றவே முடியாது. எனவே தான் இந்த சுலோகத்தில், அப்படிப்பட்ட தீய உணர்வுகளை மிதித்துத் தள்ளினால் மட்டுமே பக்தியில் முன்னேற முடியும் என்று குறிப்பிடப்

பட்டுள்ளது. எந்த ஒரு சாதகன் இந்த ஆறு விதமான குற்றங்களையும் அடக்குகிறானோ, அவன் இந்த உலகத்துக்கே உபதேசம் செய்யலாம். இதன் முடிவான விளக்கம் என்னவென்றால், எந்த ஒரு சாதகனால் தன் அனைத்து இந்திரியங்களையும் கட்டுப்படுத்த முடிகிறதோ, அவனால் மட்டும் தான் தன் சுத்தமான உத்தம பக்தியால் இந்த உலகத்தில் உள்ள அனைத்து ஜீவாத்மாக்களையும் புனிதப் படுத்த இயலும். அந்த சாதகனிடம் எல்லோரும் சீடர்களாக ஆகி விடுவார்கள்.

மேலும், ஶ்ரீமத் பாகவதத்தில் (11. 14. 24) கீழ்க்கண்ட சுலோகம் ஒன்று வருகிறது:

*வாக் கத்கதா த்ரவதே யஸ்ய சித்தம்*
*ருதத்தி அபீக் ஷ்ணம் ஹஸதி க்வசிச்ச*
*விலஜ்ஜ உத்காயதி ந்ருத் யதே ச*
*மத் பக்தி யுக்தோ புவனம் புனாதி*

"என் அருமை உத்தவா, என் மேல் கொண்ட பிரேம பக்தியால் வருகின்ற ஆன்மீகப் பூரிப்பால், எவரது இதயம் உருகிக் கொப்பளித்து உணர்ச்சியுடன் வெளி வருமோ, அவனால் ஒரு கணம் கூட ஆனந்தக் கண்ணீருடன் அழாமல் இருக்க முடியாது. சில சமயம் அவன் கொக்கரித்துச் சிரிப்பான். சில சமயம் சத்தமாகப் பாடுவான். எந்த விதமான வெட்கமும் அவனுக்குக் கிடையாது. அவன் ஆடுவான், பாடுவான். இப்படிப்பட்டப் பிரேம பக்தன், தன்னை மட்டுமல்ல, இந்த உலகத்தையேப் புனிதப் படுத்தி விடுவான்."

இங்கே முக்கியமாக அறிய வேண்டியது என்னவென்றால், இந்த சுலோகத்தில் குறிப்பிடப் பட்டுள்ள ஆறு விதமான உந்துதல்களை ஒருவன் வென்று விட்டால் அது அவனை பக்தி உலகத்தில் நுழைய மட்டும் தான் தகுதியுள்ளவனாக ஆக்குகிறது. இவை சாதன பக்தி யிலுள்ள அங்கங்களே அல்ல. ஆனால் இவற்றால் பக்தி உலகத்தின் உள்ளே அவனால் நுழைய இயலும். ஶ்ரீகிருஷ்ணரின் சொரூப சக்தியின் ஒரு பரிணாமமே பக்தியானதால், ஒருவனுக்கு பக்தி தோன்றும் போது, இந்த ஆறு விதமான உந்துதல்களும் தானாகவே மறைந்து விடும்!

**பீயூஷ வர்ஷிணி விருத்தி**

(மூலம்: ஶ்ரீ பக்தி விநோத தாக்குரா)

ஶ்ரீகோத்ரும சந்த்ராய நமஹ!
ஶ்ரீகோத்ரும தேசத்தின் சந்திரனாக விளங்கும் ஶ்ரீசைதன்ய மகாபிரபுவுக்கு எனது சாஷ்டாங்கமான வணக்கங்கள்.

*யத் க்ருபா ஸாகரோத் பூதம், உபதேஸாம்ருதம் புவி*
*ஸ்ரீ ரூபேன ஸமாநீதம், கௌர சந்த்ரம் பஜாமிதம்*

"கருணைக் கடலான ஸ்ரீகௌர சந்திரரை நான் வணங்குகிறேன். அந்தக் கருணைக் கடலிலிருந்து வெளி வந்த ஒரு சிறு ஊற்றை ஸ்ரீரூப கோஸ்வாமி சேகரித்து அதை ஸ்ரீஉபதேஸாம்ருதமாக இந்த உலகுக்குக் கொடுத்துள்ளார்."

*நத்வா க்ரந்த ப்ரணேதாரம்*
*தீக்கா காரம் ப்ரணாம்ய ச*
*மயா விரச்யதே வ்ருத்திஹி*
*பியூஷ பரிவேசனீ*

"ஸ்ரீ உபதேஸாம்ருதத்தின் ஆசிரியரான ஸ்ரீலரூப கோஸ்வாமிக்கும், அதற்கு விளக்கம் அளித்த ஸ்ரீராதா ரமண தாஸ கோஸ்வாமிக்கும், எனது பணிவான வணக்கங்களைச் செலுத்தி இந்த அமிர்தமான உபதேசத்துக்கு நான் விளக்கவுரையை ஆரம்பிக்கிறேன்."

*அன்யாபிலாஷிதா ஸூன்யம்*
*ஞான கர்மாதி அனாவ்ருதம்*
*ஆனு கூல்யேன க்ருஷ்ணானு*
*ஸீலனம் பக்திர் உத்தமா*

...(பக்தி ரஸாம்ருத சிந்து 1.1.11)

உத்தம பக்தி, அல்லது சுத்த பக்தி என்பது என்ன? தன் உடல், மனம், பேச்சு அனைத்தையுமே முழுவதும் ஸ்ரீகிருஷ்ணருக்கு மட்டுமாக அர்ப்பணித்து, எந்த விதமான தடங்கலும் இல்லாமல் தொடர்ந்து இடைவிடாமல் அவருக்கு விதவிதமாக பக்தி பரவசங்களுடன் சேவை செய்வதே ஆகும். அதில் ஞானமோ, அதன் இலக்கான பிரம்ம முக்திக்கோ; கர்மமோ, அதன் இலக்கான சொர்க்க போகங்களுக்கோ கொஞ்சம் கூட இடமில்லை. ஸ்ரீகிருஷ்ணருக்கு எப்போதும் மகிழ்ச்சியைக் கொடுப்பதைத் தவிர வேறு எந்த விதமான ஆசைகளும் அறவே இல்லாமலிருப்பதே சுத்தமான பக்தி. சுத்த பக்தன் இந்த சுலோகத்தில் கூறப்பட்டவைகளை மட்டும் அனுசரித்து, அதற்குப் புறம்பாகவுள்ள அனைத்தையும் நீக்கி விலக்கி விட்டு, ஸ்ரீகிருஷ்ணரின் மகிழ்ச்சிக்காக மட்டுமே எப்போதும் செயலாற்றுவான்.

'பகவத் அனுசீலனம்' என்ற இந்த அனுசரணமே ஒரு பக்தனை பஜனையில் ஈடுபட வைக்கிறது. ஸ்ரீகிருஷ்ணரை மகிழ்விப்பதை மட்டுமே அனுசரிப்பதும், மற்றவைகளை தவிர்ப்பதும் சுத்த பக்தியின் நேரடியான குணங்கள் அல்ல. மாறாக, அவை ஒரு பக்தன் ஸ்ரீகிருஷ்ணரிடமுள்ள முழு நம்பிக்கையினால் உண்டாகும் சரணாகதியினால் வருவதேயாகும். இந்த சரணாகதியே பக்திக்கு

வேண்டிய தகுதியை அளிக்கிறது." இதை "வைஷ்ணவ தந்திரம்" என்ற நூலில் (பக்தி சந்தர்ப்பம் - அனுசேடா 236-லும் இதைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது) கீழ்க்காணும் சுலோகத்தில் காணலாம்.

*ஆனு கூல்யஸ்ய ஸங்கல்பஹ*
*ப்ராத்திகூல்யஸ்ய வர்ஜனம்*
*ரக் ஷிஷ்யதீதி விஸ்வாஸோ*
*கோப்த்ருவே வரணம் ததா*
*ஆத்ம நிக் ஷேப கார்பண்யே*
*ஷத் விதா ஸரணாகதி ஹி*

"பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடம் சரணாகதி அடையும் போது ஆறு விதமான அடையாளங்கள் வழியாக அதை அறியலாம்.

**(1) ஆனு கூல்யஸ்ய ஸங்கல்ப:** முழுவதுமாக சரணாகதியடைந்த பக்தன், பிரேம பக்திக்கு சாதகமானவைகளை மட்டுமே நாட வேண்டும்.

**(2) ப்ராத்தி கூல்ய விவர்ஜன:** பிரேம பக்திக்கு சாதகமில்லாதவைகள் அனைத்தையும் அறவே நீக்கி விலக்கி விட வேண்டும்.

**(3) ரக் ஷிஷ்யதீதி விஸ்வாஸ:** ஸ்ரீகிருஷ்ணர் மட்டுமே தன்னைக் காப்பவர். அவரைத் தவிர வேறு எந்த ஒரு காப்பவரும் கிடையாது. வேறு எந்த விதமான செயல்களாலும் அவரிடமிருந்து பாதுகாப்பு கிடைக்காது என்று நம்ப வேண்டும்.

**(4) கோப்த்ருவே வரண:** சரணாகதியடைந்த பக்தர்களுக்கு, ஸ்ரீகிருஷ்ணர் மட்டுமே அவர்களது பாதுகாவலரும் ஆதரிப்பவருமாகும் என்பதில் சிறிதேனும் சந்தேகமே இருக்கக் கூடாது.

**(5) ஆத்ம நிக் ஷேப:** தன்னால் சுதந்திரமாக எதையுமே செய்ய இயலாது, ஸ்ரீகிருஷ்ணரின் விருப்பமில்லாமல் எவரும் எதையும் செய்ய முடியாது என்ற மனப்பான்மையுடன் தன்னையே முழுவதுமாக ஸ்ரீகிருஷ்ணரிடம் சமர்ப்பித்து விட வேண்டும். 'வேறு எந்தக் கதியுமேயில்லை' என்றே சரணாகதியடைந்த பக்தர்கள் இருப்பார்கள்.

**(6) கார்பண்ய**: "நான் மிகவும் தாழ்ந்தவன், இழிந்தவன்" என்று எண்ணுபவன் சிறந்த பக்தன். மாசற்ற மகா பக்தன், இந்த மிகவும் தெளிவான, சூது வாதற்ற கொள்கையை எப்போதும் தீவிரமாகக் கொண்டிருப்பான்."

மேலே குறிப்பிடப்பட்ட ஆறு விதமான அடையாளங்களையும் சரணாகதியடைந்த ஒரு பக்தனிடம் நாம் காணலாம். ஸ்ரீஉபதேஸாம்ருதத்தின் இந்த முதல் சுலோகத்தில், பக்திக்கு சாதகமில்லாதவை அனைத்தையும் அறவே ஒதுக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. தன் பேச்சு, மனம், கோபம், நாக்கு, வயிறு, புணர் இந்திரியங்கள் அனைத்தையும் ஒருவனால் கட்டுப்படுத்த முடிந்தால் அவனால் இந்த உலகத்துக்கேக் குருவாகி உபதேசிக்க முடியும்.

பத்ம புராணத்தில் கீழ் வருமாறு கூறப்பட்டுள்ளது.

*சோகாமர்ஷாதிபிர் பாவைர்*
*ஆக்ராந்தம் யஸ்ய மானஸம்*
*கதம் தத்ர முகுந்தஸ்ய*
*ஸ்பூர்த்தி ஸம்பாவனா பவேத்*

'அழுகை, கோபம் போன்ற குணங்கள் குடி கொண்டிருப்பவரிடம் எப்படி ஸ்ரீமுகுந்தன் (ஸ்ரீகிருஷ்ணர்) தோன்ற முடியும்?"

இந்த சுலோகம் விளக்குவது என்னவென்றால், ஒருவனிடம் காமம், குரோதம், பேராசை, மன மயக்கம், குடி போதை, எரிச்சல் இவையெல்லாம் எப்போதும் தோன்றி, அவை அவனை உலக சம்பந்த ஆசைகளில் இந்திரியங்கள் அனைத்தையும் கவர்ந்திழுத்து விடும். இவை கீழ்கண்ட ஆறு விதங்களில் வெளிப்படுகின்றன.

(1) மற்றவர்களுக்குத் துயரத்தைக் கொடுக்கும் வகையில் பேசத் துடித்தல்,
(2) மனதை அது செல்லுமிடமெல்லாம் அலை பாய விட்டு, அது உருவாக்கும் ஆசைகளில் சிக்குதல்,
(3) கோபப்படுதல், அல்லது மற்றவர்களை கடும் சொற்களால் சாடுதல்,
(4) இனிப்பு, புளிப்பு, கசப்பு, கார்ப்பு, உப்பு, துவர்ப்பு போன்ற அறு சுவைகளை அடங்காத ஆவேசத்துடன் ருசிக்கத் துடித்தல்,
(5) வயிற்றுக்கு அடிமையாகி அளவுக்கு மிஞ்சி பெருந்தீனி தின்னுதல்,
(6) புணர் இந்திரியங்களின் அடக்க முடியாத உந்துதலால் ஆண் பெண் உறவு கொள்ளுதல்.

இந்த உந்துதல்களுக்கு ஒருவன் அடிமையானால், அவனிடம் சுத்த பக்தி வரவே முடியாது. அப்படிப் பட்ட ஒருவன் பக்தி பஜனை வழிக்கு வர விருப்பப் பட்டால், அவனுக்கே ஸ்ரீரூப கோஸ்வாமி இந்த முதல் சுலோகத்தை இயற்றியிருக்கிறார்!

ஆனால் இந்த ஆறு விதமான உந்துதல்களைக் கட்டுப் படுத்த முயல்வது பக்தி மார்க்கத்திலுள்ள அங்கம் ஆகாது. மாறாக, பக்திக் கோயிலினுள் நுழைவதற்கு மட்டுமே அது தகுதியைக் கொடுத்து உதவுகிறது. பேரின்ப நுகர்ச்சிகளை அடைய விரும்பும் கர்ம யோகிக்கும், மற்றும் அறிவை விருத்தி செய்வதைக் குறிக்கோளாகக் கொண்ட ஞான மார்க்கத்தைக் கடைப்பிடிபவர்களுக்காகவும் மட்டுமே இந்த ஆறு விதமான உந்துதல்களைக் கட்டுப் படுத்த வேண்டும் என்று உபதேசிக்கிறது. இந்த உபதேசங்கள் சுத்த பக்தர்களுக்குப் பொருந்தாது. பகவானின் நாமங்களையும் லீலைகளையும் கேட்டும், ஜபம் செய்தும், அவரது நாமங்களை எப்போதும் தியானித்தும், அவரது ரூபங்கள், கல்யாண குணங்கள் மற்றும் அவர் நிகழ்த்தும் இனிய லீலைகளில் திளைத்துமே பக்தன் எப்போதும் இருப்பான் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இதுவே உண்மையான பக்தி என்று அவை பறை சாற்றுகின்றன.

ஒரு பக்தன், பக்தியின் ஆரம்ப நிலையில் புகும் போது, இந்த ஆறு விதமான உந்துதல்கள் அவனுக்கு விதவிதமான முட்டுக் கட்டைகளை உண்டாக்கும். அந்தச் சமயங்களில், அவன் முழுவதுமாக பகவானிடம் சரணாகதியடைந்து, பத்து விதங்களான நாம அபராதங்களைத் தவிர்த்து, பகவானின் நாமங்களை இடை விடாமல் உச்சரித்தால் அவனால் இந்த ஆறு விதமான உந்துதல்களை, பகவானின் திரு நாமங்களின் வலிமையால் வென்று விடலாம். அதற்கு மாசற்ற சாதுக்களின் சங்கம் மிகவும் அவசியமாகும். பத்ம புராணத்தில் கீழ்கண்ட சுலோகம் வருகிறது:

*ஸ்ருத்வாபி நாம மாஹாத்மியம்*
*யஹ் ப்ரீதி ரஹிதோ தமஹ*
*அஹம் மமாதி பரமோ*
*நாம்னி ஸோஅபி அபராதா க்ருத்*

"ஒருவன் பகவானின் அதிசயங்களும் பேராச்சரியங்களும் நிறைந்த லீலைகளைக் கேட்ட பிறகும், 'நான் இந்த பூத உடல்' என்ற எண்ணத்துடனும், இந்த உலகப் பொருட்கள் 'என்னுடையவை' என்ற மனப்பான்மையுடனும், பகவானின் நாமத்தை உச்சரிக்க விருப்பமில்லாமலும் இருந்தால், அவன் பகவானின் நாமத்தை அபச்சாரம் பண்ணியவனாக ஆகி விடுகிறான்."

பக்தர்கள் எப்போதும் வரட்டு விதிமுறைகளைத் தவிர்த்து, யுக்த வைராக்கியத்தால் உண்மையான துறவையேக் கடைப் பிடிப்பார்கள். எனவே இந்திரியங்களை எவ்வாறு கட்டுப் படுத்த வேண்டும் என்ற விதி முறைகள் அவர்களுக்குப் பொருந்தாது. பக்தியின் வலிமையினால் மனமும் இந்திரியங்களும் தானாகவே

அடங்கி விடுவதால், அவர்களுக்கு உலக இன்பங்களைச் சுகிக்க வேண்டும் என்ற தாகமே வருவதில்லை. அவர்களது கண்கள், காதுகள் மற்றும் அனைத்து இந்திரியங்களும் தானாகவே சாந்தப்பட்டு விடுகின்றன!

எவனொருவன் இந்த ஆறு விதமான உந்துதல்களை வென்று விட்டானோ, அவன் இந்த உலகத்தையே வென்று விடுகிறான். அதே சமயம், இவ்வாறு இந்திரியங்களைக் கட்டுப் படுத்தக் கூறி உபதேசிக்கும் இந்த சுலோகம், சாதாரண கிருகஸ்த பக்தனுக்காகக் கூறப் பட்டதே. ஏனென்றால் அவன் அடுத்த படியாக குடும்ப வாழ்க்கையையும் துறப்பதற்குத் தயாராக, இந்த ஆறு விதமான உந்துதல்களை மட்டுமின்றி எல்லா விதமான வேண்டாத உந்துதல்களையும் ஒழிக்க வேண்டும்.

**விளக்கவுரை**

(மூலம்: பக்தி சித்தாந்த சரஸ்வதி கோஸ்வாமி பிரபுபாதா)

எல்லையில்லா இரக்கமுள்ள ஸ்ரீசசி புத்திரனான கௌர ஹரி (ஸ்ரீசைதன்யா மகாபிரபு), கீழே விழுந்து கிடக்கும் ஜீவன்களைப் புனிதப் படுத்துபவர். கலியின் கொடூர ஆக்கிரமிப்பால், இந்தக் கலியுலகத்தில், ஸ்ரீகிருஷ்ணருக்குப் பக்தியுடன் சேவை செய்ய விருப்பமில்லாத ஜீவன்களின் மேல் கருணை கொண்டு, அவர் ஸ்ரீசிக்ஷாஷ்டகத்தை இயற்றினார். அதில் வரும் சுலோகங்களில், சம்பந்தம் (பரம் பொருளான இறைவன், ஜீவாத்மா மற்றும் உலக பஞ்ச பூதங்களுக்கும் இடையில் பிணைந்த தொடர்புகளைப் பற்றிய தத்துவம்), அபிதேயம் (உத்தம இலக்கான பரம் பொருளை எவ்வாறு அடையலாம், அதற்கு எந்த விதமான பக்தி சாதனங்களைப் புரிய வேண்டும் என்பதைப் பற்றிய தத்துவம்), பிரயோஜனம் (பக்தி சாதனத்தின் உத்தம குறிக்கோளான "கிருஷ்ண பிரேமை") என்ற மூன்று வகையான தத்துவ உண்மைகளை, எல்லா உயிர் வாழும் மக்களுக்காக அவர் சுருக்கமாகக் கூறியுள்ளார்.

ஸ்ரீசைதன்ய மகாபிரபு ஜகன்னாத் பூரியிலும் கங்கைக்கரையோரமுள்ள பிரயாக் என்ற இடத்திலும் தங்கியிருந்த போது அவரது மிகவும் பிரியமான ஸ்ரீரூப கோஸ்வாமி, மிக மிக அந்தரங்கமான பக்தி ரகசியங்களை, ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் தாமரை போன்ற அதரங்களிலிருந்து கேட்டார். மேலும், அவர் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவிடமிருந்து இந்த உபதேசங்களை மட்டுமாகக் கேட்கவில்லை. பக்தி ரகசியங்கள் நிரம்பி, கிருஷ்ணப் பிரேமை எப்போதுமே கொப்பளித்துக் கொண்டிருக்கும் தன் இதயத்தையே அவர் ஸ்ரீரூப கோஸ்வாமிடம் முதலீடு செய்தார். இவ்வாறு, தான் பெற்ற அரியதற்கரிதான பக்தி உபதேசங்களை இலகுவாக அறிந்து கொள்ள ஸ்ரீரூப கோஸ்வாமி "ஸ்ரீ பக்தி

ரஸாம்ருத சிந்து", "உஜ்வல நீலமணி", "லலிதா மாதவா", "விதக்த மாதவா", "ஸ்தவ மாலா", என்று பற்பல நூல்களை சமஸ்கிருத மொழியில் இயற்றினார். இந்த மிக அபூர்வமான புனித நூல்கள் தங்கச் சுரங்கங்கள் போல் விலை மதிக்க முடியாத "கிருஷ்ண பிரேமை" என்ற மாணிக்கக் கற்களைக் கொண்டவை. அவற்றுள் ஸ்ரீஉபதேஸாம்ருதமும் ஒரு விலைமதிக்க முடியாத மாணிக்கக் கல்லாகும். ஸ்ரீகௌரங்க மகாபிரபுவின் பக்தர்களுக்கு இது ஒரு மகத்தான கழுத்தணி. ஸ்ரீ சைதன்ய மகாபிரபுவிடமிருந்து சேகரித்த எல்லா உபதேசங்களிலுமுள்ள சாரத்தை அவர் உண்மையான பக்தி சாதகனுக்கு ஒரு விலை மதிக்க முடியாத பரிசாக வழங்கியுள்ளார்.

ஸ்ரீஉபதேஸாம்ருதத்தில் இரண்டு விதமான உபதேசங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதலாவது, பக்திக்குப் புறம்பான, அதாவது, பக்தியை வளர விடாதவைகளை விலக்குதல்; இரண்டாவது, பக்தியை வளர்க்க உதவுவதை அனுசரித்தல். இந்த இரண்டு விதங்களான உபதேசங்களை ஒரு சாதகன் கடைப்பிடிக்கவில்லை யென்றால் அவனது இதயத்தில் "பாவ-பக்தி" உண்டாவதற்கு வாய்ப்பே இல்லை. பின்னர் வரும் "பிரேம பக்தி" யைப் பற்றியோ ஒருபோதும் நினைத்துக் கூட பார்க்க முடியாது! தற்சமயம் எத்தனையோ பேர், தங்களுக்கு உகந்தது போல் கட்டுக் கதைகளாக பக்தித் தத்துவங்களை உண்டு பண்ணி வெளிப்பகட்டான மதங்களை ஸ்தாபிக்கின்றனர். அவைகள் புனிதமான வேதங்களுக்கு முரண்படுவது மட்டுமின்றி பக்திக்கும் எதிரானவைகளே. அது மட்டுமல்லாமல், தப்பான தத்துவங்களான ஸஹஸ்யம் என்ற பகட்டான கோட்பாட்டையும், மாயாவாதம் என்ற சூன்ய தத்துவத்தையுமே அவை உண்டாக்குகின்றன. இந்தப் பகட்டு மதங்களைப் பின்பற்றுவர்கள் இந்த உபதேஸாம்ருதத்தைக் கேட்டால், இறந்து போன துஷ்ட ஆவிகளுக்குத் தண்டனை அளிக்கும் யமராஜனே இந்த உபதேஸாம்ருதமாக வந்ததைப் போல் பயந்து நடுங்குவார்கள்.

ஆனால் இந்த ஸ்ரீஉபதேஸாம்ருதத்தைப் பிரியமுடனும் நம்பிக்கையுடனும் படித்தறிந்து தன் வாழ்க்கையில் கடைப்பிடித்தால், அவர்கள் பக்தி என்பது என்னவென்பதை சந்தேகமில்லாமல் உணர்வது மட்டுமின்றி "பாவ பக்தி" யையும் பெற்று, அதன் பின் அரிதற்கும் அரிதான "பிரேம பக்தி" யையும் பெறுவார்கள். எனவே, ஸ்ரீவிருஷபானு மகாராஜாவின் புதல்வியான ஸ்ரீமதி ராதாராணியின் பிராண நாதனான ஸ்ரீகிருஷ்ணரின் நிரந்தர அடிமை ஊழியனான நான், ஸ்ரீரூப கோஸ்வாமியின் பரம்பரையிலுள்ள அத்தனை குரு தேவர்களின் பாத தூளிகளையும் என் சிரசில் கொண்டு, இந்த ஸ்ரீஉபதேஸாம்ருதத்துக்கு விளக்கவுரை எழுத ஆரம்பிக்கிறேன். இதை நான் எழுதக் காரணம், ஸ்ரீரூப கோஸ்வாமி எழுதிய ஸ்ரீபக்தி ரஸாம்ருத சிந்து போன்ற நூல்களால் ஜீவாத்மாக்களைப் பக்தியில் மூழ்க வைப்பதே!

ரூபானுக வைஷ்ணவ ஆச்சார்யர்களான ஸ்ரீகௌர கிஷோர தாஸ பாபாஜி, ஸ்ரீபக்தி விநோத தாக்கூரா போன்ற மகா பெரும் வைஷ்ணவர்கள் ஸ்ரீரூப கோஸ்வாமியைப் பின் பற்றியவர்கள்.

இந்த உலகில் வாழும் ஜீவன்கள், மூன்று விதங்களில் தங்களை ஈடுபடுத்தி உலக இன்பங்களை அனுபவிக்கின்றனர். அவை: வாக்கு, மனம், உடல் என்ற மூன்றாகும். பெரும் சக்தி வாய்ந்த இந்த மூன்றிலும் ஒருவன் சிக்கி விட்டால், அதன் இழுப்பிலிருந்து தப்பி வெளியே வருவது மிக மிகக் கடினம். அவர்கள் தங்கள் ஆன்மீக நிலையை அறவே மறந்து, சம்சார பெருவெள்ளத்தில் மாட்டிக் கொண்டு திரும்பத் திரும்பப் பிறந்தும் இறந்தும் அல்லல் படுகின்றனர். ஆனால் தன் இந்திரியங்களை அடக்கி ஆளும் ஜீவன்கள், உலக இன்பங்களால் இழுக்கப் படுவதில்லை. இந்தப் பூலோகத்தையே எட்டி எறிவதில் அவர்கள் சிறந்த வல்லுனர்கள்.

இந்த சுலோகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, "பேசத் துடித்தல்" என்பது, மாயாவாதமான நிர்விஷேஷ வாதத்தைக் கடைப் பிடிப்பவர்களின் சிந்தனைகளையும் குறிக்கும். அவை பக்திக்கு முழு வகையிலும் எதிரானவை. மேலும், அது பலனை எதிர்பார்த்து, உலக சம்பந்தமான கடமைகளைச் செய்பவர்களின் வரட்டு வேதாந்தக் கொள்கைகளையும் குறிக்கும். அது மட்டுமின்றி, ஸ்ரீகிருஷ்ணருக்குப் பக்தி சேவை செய்வதற்குப் பதிலாக உலக இன்பங்களை ருசிக்கும் மனப் பான்மையுடன் பேசும் எல்லா விதமான பேச்சுக்களையும் அது குறிக்கும். ஆனால் ஸ்ரீகிருஷ்ணரின் சேவைகளில் சம்பந்தமான பேச்சுக்கள் இதில் உட்பட்டதேயல்ல. மாறாக, அவ்வாறு கிருஷ்ண சேவைக்காக எழும் பேச்சுக்கள் அனைத்தையும் அடக்கமான பேச்சுகளாக கருத வேண்டும். சில சமயங்களில் சிலர் மௌன விரதங்கள் இருப்பதுண்டு. ஆனால் அவர்கள் எழுத்து மூலமாக அவரது ஆசைகளை வெளியிடுவார்கள். இதையும் பேசத் துடித்தலிலேயே சேர்க்க வேண்டும்.

மனத்தின் உந்துதல்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். (1) அவிரோத பிரீதி - தடுக்க இயலாத ஆசைகள்; (2) விரோத யுக்த குரோதம் - தடங்கல் நேரும் போது கோபப் படுதல். இனி அவிரோத பிரீதியை மூன்று விதங்களாகப் பிரிக்கலாம்: (1) மாயா வாதத்தின் மேல் நம்பிக்கை வைத்தல், (2) பலனை எதிர்பார்த்து செய்யும் செயல்கள், (3) ஸ்ரீகிருஷ்ணருக்கான பக்தி சேவைகளைத் தவிர்க்கும் தன்னலமான ஆசைகள். ஞானிகள், கர்மிகள் மற்றும் பிற ஆசைகளைக் கொண்டவர்களின் மனங்களில் இன்னமும் வெளிப் படையாகத் தோன்றாமல் இந்த உந்துதல்கள் இருக்கின்றன. அவர்கள் எதிர்பார்த்த பலன் கிடைக்காமல் போனாலோ, அல்லது அவர்களுக்கு எதிராக ஏதாவது தடைகள் தோன்றினாலோ, அவர்களது கடும் முயற்சி வீண் போய் எதிர்பார்த்த

முக்தி கிடைக்காமல் போனாலோ, அவர்களுக்கு உடனே கோபம் வருகிறது. ஸ்ரீகிருஷ்ணரின் அமிர்த மயமான லீலைகளை நாம் மனதில் தியானிப்பது மனதின் உந்துதலல்ல. மாறாக, அவை நம் மனதை அமைதிப் படுத்தி ஆழ்ந்த பக்தியை வளர்க்கின்றன.

நமது உடம்பிலும் இதுபோல் மூன்று விதங்களான உந்துதல்கள் உள்ளன. நாவின் வேகம், வயிற்றின் வேகம் மற்றும் புணர் இந்திரியங்களின் வேகம் - இவை மூன்றுமே அவைகள். ஆறு விதமான சுவைகளையும், மாமிசம், மீன், முட்டை, மது பானங்கள், அளவுக்கு மிஞ்சி நெய், பால், ரபாடி (பால் கட்டியிலிருந்து செய்யப்பட்ட இனிப்புப் பண்டம்), பாலாடை இப்படி அனைத்தையும் சாப்பிட்டு ருசிப்பதற்காக நாக்கு ஏங்கித் துடிக்கிறது. ஆனால் சாதுக்களோ, அளவு மிஞ்சிய சுவையுடனோ, மிகுந்த கசப்புடனோ, மற்றும் மிளகாய் போன்ற காரமான மசால்கள் சேர்ந்த உணவுகளை ஒதுக்கி விடுவார்கள். மேலும், வெற்றிலைப் பாக்கு, மசாலா வெற்றிலை (பான்), சிகரெட், மரிஜுவானா, ஹெம்ப், ஓபியம் மற்றும் வெறியூட்டும் போதைப் பொருள்கள் அனைத்தையும் நினைக்கக் கூட மாட்டார்கள், வெங்காயம், பூண்டு இவைகளும் கூட நாக்கை ஏங்க வைக்கும் பொருட்களே. பக்தி சாதகன் எந்தக் காரணம் கொண்டும் இவற்றில் ஈடுபாடு கொள்ளக் கூடாது.

பகவானுக்குப் படைக்கப் பட்ட பிரசாதத்தையோ அல்லது அவரது பக்தர்கள் சாப்பிட்டு மீதி வைத்த பிரசாதத்தையோ மட்டுமே பக்தி சாதகன் ஒருவன் மிகவும் மரியாதை அளித்து அதைப் புசிக்க வேண்டும். அந்த மகா பிரசாதம் மிக மிக சுவையாக இருந்தாலும் அதை புசிக்கும் போது அதை நாவின் வேகத்துடன் சேர்க்கக் கூடாது. மாறாக, மகா பிரசாதத்தை மரியாதை அளித்து சாப்பிடும் போது, அவன் நாவின் வேகத்தை கட்டுப் படுத்தவே செய்கிறான். ஆனால் பிரசாதம் என்ற பெயரில் அதை சூதுடன் ஒருவன் தன் நாக்கைத் திருப்திப் படுத்த வேண்டி புசித்தானானால், அதை நாவடக்கத்தில் சேர்க்க முடியாது. குறிப்பாக, மிகப் பெரிய செல்வந்தர்களின் வீடுகளில், ரபாடி, பாலாடை இனிப்புக்கள் இப்படி மிகவும் உயர் தரமான சுவையுள்ள பண்டங்களைத் தேவர்களுக்குப் படைத்து விட்டு அவைகளைச் சாப்பிடும் போது, அது முற்றும் துறந்த (நிஸ்கிஞ்சன) வைஷ்ணவர்களுக்கு மிகவும் கேட்டையே உண்டு பண்ணும். அவ்வாறு ஒருவன் தன் நாவைத் திருப்திப் படுத்தும் போது அது குற்றம் கூறத் துடிக்கும் மனப் பான்மையையும், கெட்டவர்களின் சிநேகத்தையும் கொடுத்து விடும்! ஸ்ரீசைதன்ய சரிதாம்ருதத்தில் (அந்திய லீலா 6. 227, 236) கீழ்க்கண்ட சுலோகம் வருகிறது.

*ஜிஹ்வார லாலஸே ஜெயி இதி உதி தாய*
*ஸிஸ்னோதர பராயண கிருஷ்ண நாஹி பாய*

*பால ந காயிபே ஆர பால நா பரிபே*

"தன் நாக்குக்கு அடிமையாகி, அதைத் திருப்திப் படுத்துவதற்காக அடங்கா ஆவலுடன் இங்குமங்குமாக ஓடி அலைந்து, சுவையாக வயிறார உண்டுக் களிப்பதையே குறிக் கோளாகக் கொண்டுள்ள எந்த ஒருவனிடமும் ஸ்ரீகிருஷ்ணர் வரவே மாட்டார். பக்தி சாதகன் ஒரு போதும் மிக உயர்ந்த தரமான, ஆடம்பரமான துணிகளை அணியவும் கூடாது, மிக ருசியான உணவுகளை உண்ணவும் கூடாது."

பக்தி சாதகன் இவற்றைத் தவிர்ப்பது மிகவும் அவசியம். மேலும், பெரும்பாலும் பெருந் தீனிக்காரர்கள் அனைவருமே விதவிதமான நோய்களில் சிக்கியிருப்பார்கள். அளவுக்கு மிஞ்சி உண்டால் அது ஏராளமான கஷ்டங்களையேக் கொண்டு வருகிறது. நாவுக்கு அடிமையாகி அளவு கடந்து உண்ணும் போது அது புணர் இந்திரியங்களையும் தூண்டி விட்டு ஒருவனை ஒழுக்கங் கெட்டவனாகவே ஆக்கி விடும். ஆனால் ஒருவன் பகவானின் பிரசாதத்தை முறையுடன் உண்டு, ஸ்ரீகிருஷ்ணருக்கு விதி முறைகள், பிரகாரம் சேவைகள் புரிந்து, ஏகாதசி போன்ற விரதங்களைக் கடைப் பிடித்து வாழ்வானானால், அவன் தன் வயிற்றின் உந்துதல்களை மிகவும் எளிதில் தணித்து விடுவான்.

புணர் இந்திரியங்களின் உந்துதல்களை இரண்டு விதங்களாகப் பிரிக்கலாம்: (1) சாஸ்திரங்களுக்கு உட்பட்டவை, (2) சாஸ்திரங்களுக்கு எதிரானவை. ஒருவன் வயதுக்கு வந்து, பின்னர் சாஸ்திர முறைப்படித் திருமணம் செய்து, ஒரு குடும்பத்தினனாகி, குழந்தைகளைப் பெறுவதற்காக, தகுந்த வரன் முறைகளைக் கடைப் பிடித்து வாழ்க்கை நடத்தினால் அவன் தன் புணர் இந்திரியங்களைக் கட்டுப் படுத்தியவனாகிறான். சாஸ்திரத்தில் இது "முறையான சிற்றின்பம்" என்று குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால் சாஸ்திரங்களுக்கு மாறான கெட்ட வகையான சிற்றின்பங்களும் உள்ளன. உலக, மற்றும் சமூகத்திற்கு எதிரான இழிந்த வகைகளில் வேறொருவரின் மனைவியை ஆசைப்படுதல், எட்டு விதமான புணர் இன்பங்களை அனுபவிக்கத் துடித்தல், செயற்கையான முறைகளில் சிற்றின்பம் பெறுதல், இவையனைத்தும் சாஸ்திரங்களுக்குப் புறம்பானவை. குடும்பத்தினனும், துறந்த வாழ்க்கை வாழ்கின்ற பக்தி சாதகனும் தனது நாக்கு, வயிறு மற்றும் புணர் இந்திரியங்களின் தூண்டல்களில் ஒரு போதும் சிக்கிக் கொள்ளக் கூடாது.

ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் கூடவே எப்போதும் திரிந்த ஸ்ரீஜகதானந்த பண்டிதர் தனது "பிரேம விவர்த்தா (7.3.1-4)" என்ற நூலில் கீழ் வரும் ஸ்லோகத்தை எழுதியுள்ளார்.

*வைராகி பாயீ கிராம்ய கதா நா சுனிபே கானே*
*கிராம்ய வார்த்தா நா கஹிபே ஜபே மிலிபே ஆனே*
*ஸ்வப்னே ஓ நா கர பாயீ ஸ்த்ரீ ஸம்பாஷண*
*க்ரஹே ஸ்த்ரீ சாடியா பாயீ ஆஸியாச்ச வன*

*யாதி சாஹ பிரணய ராகிதே கௌரங்கேர ஸனே*
*சோட்ட ஹரிதாஸேர கதா தாக்கே ஜேன மனே*
*பால நா காயிபே ஆர பால நா பரிபே*
*ஹ்ருதயத்தே ராதா கிருஷ்ண ஸர்வதா செவிபே*

"ஓ, பிச்சை எடுத்து வாழும் வைஷ்ணவரே, ஓ சகோதரனே! நீவிர் எவரொருவரைச் சந்தித்தாலும், அவரிடம் உலக விஷயங்களைப் பற்றிப் பேசாதீர். கனவில் கூட ஒரு பெண்ணிடம் நெருக்கமாகப் பேசாதீர். ஓ சகோதரனே, நீ உன் மனைவியையும் குழந்தைகளையும், வீட்டு வாழ்க்கையையும் விட்டுவிட்டு வனத்தில் போய் வாழ வேண்டும். நீ, ஸ்ரீசசி நந்தனனான கௌர ஹரியின் தாமரைப் பாதங்களின் மேல் பக்தியை வளர்க்க வேண்டுமென்று எண்ணினால், சோட்ட ஹரி தாஸுக்கு நடந்த சம்பவத்தை நீ மனதில் எப்போதும் நினைத்துக் கொள்ள வேண்டும். உனக்கு பகவானிடத்தில் பக்தி வர வேண்டுமானால், நீ ருசியான உணவுகளை உண்ணக் கூடாது. ஆடம்பரமான துணி மணிகளை அணியக் கூடாது. இவ்வாறே நீ எப்போதும் உன் இதயத்தில் ஸ்ரீராதா கிருஷ்ணரை பக்தியுடன் சேவை செய்து கொண்டிருக்க வேண்டும்."

ஒருவன் எப்போது தன் மனம், உடல், வாக்கு இவைகள் மூலமாக வரும் ஆறு விதங்களான உந்துதல்களைக் கட்டுப் படுத்தினானோ அப்போது மட்டுமே அவன் "கோஸ்வாமி" என்ற பட்டத்துக்குத் தகுதியாகிறான். கோஸ்வாமி என்றால் இந்திரியங்கள் அனைத்தையும் அடக்கியவர் என்று பொருள். மாறாக, எவனொருவன் இந்த ஆறு விதமான உந்துதல்களுக்கு அடிமையாகி, தன் இந்திரியங்களுக்கு அடிமைப்பட்டு அவைகளுக்கு சேவை செய்து வந்தால் அவனை "கோ-தாசன்" என்றே அழைக்க வேண்டும். அவனை "கோஸ்வாமி" என்று அழைக்கவே முடியாது.

எவனொருவன் தன் இந்திரியங்களுக்கு அடிமையாகி "கோ-தாசன்" ஆக வாழ்கின்றானோ, அவன் உண்மையிலேயே மாயையின் அடிமைகளே! இவர்கள் ஸ்ரீகிருஷ்ணரின் சேவகனாக வேண்டி விருப்பப்பட்டால், முதலில் அவர்கள் உண்மையான கோஸ்வாமிகளின் காலடிகளைப் பின்பற்றி நடக்க வேண்டும். இதைத் தவிர வேறெந்த வழியுமே கிடையாது. தன் இந்திரியங்களை அடக்க முடியாத எவனும் ஸ்ரீஹரியின் பக்தனாக முடியாது. ஸ்ரீமத் பாகவதத்தில் (7- 5 - 30) ஸ்ரீ பிரகலாத மகாராஜா

கீழ் வருவதைக் கூறுகிறார்:

*மதிர்ன க்ருஷ்ணே பரத்தஹ ஸ்வதோ வா*
*மிதோ அபிபத்யேத ஹ்ருக வ்ரதானாம்*
*அதாந்த கோபிர் விஸதாம் தமிஸ்ரம்*
*புனஹ புனஸ் சர்வித சர்வணானம்*

"ஓ தந்தையே! உலக இன்பத்தைப் புசிக்க விரும்புவர்கள் தானியங்கள் நீக்கப் பெற்ற வெறும் சக்கையையேப் போட்டுப் புடைத்து தானியம் எடுக்க முயல்கின்றனர். அவர்கள் சுவையை எல்லாம் எடுத்து துப்பியதையே எடுத்து திரும்பத் திரும்ப சுவைக்கின்றனர். தங்கள் இந்திரியங்களை அடக்க முடியாமல் அவர்கள் உலக பிறப்பு இறப்புகள் கொண்ட நரகத்தை நோக்கியேச் செல்கின்றனர். ஏற்கெனவே ருசித்து தூர எறிந்த சக்கையை இன்பம் இன்பம் என்று திரும்பத் திரும்ப சுவைக்கின்றனர். இவ்வாறு உலக இன்பங்களை சுகிக்கத் துடிப்பவர்களின் புத்தியை ஒரு போதும் அவர்களாலோ, அல்லது அவர்களைப் போன்ற மற்றவர்களின் உபதேசங்களின் மூலமாகவோ பகவான் ஸ்ரீகிருஷ்ணரிடம் ஒருபோதும் திருப்பவே முடியாது."

# சுலோகம் இரண்டு

## பக்தியின் ஆறு தடைகள்

அத்யாஹாரஹ ப்ரயாஸஸ் ச
ப்ரஜல்போ நியமாக்ரஹாஹ்
ஜன ஸங்கஸ் ச லௌல்யம் ச
ஷத்பிர் பக்திர் வினஸ்யதி

### மொழி பெயர்ப்பு

அத்யாஹாரஹ - அளவுக்கு மிஞ்சி உண்ணுதல் அல்லது தேவைக்கு மிஞ்சி பொருள் சம்பாதித்தல்; ப்ரயாஸஹ - பக்திக்கு புறம்பான முயற்சிகள்; ச - மற்றும்; ப்ரஜல்பஹ - தேவையற்ற வீண் பேச்சு பேசுதல்; நியமாக்ரஹாஹ - தனக்கு விதித்த கடமைகளை செய்யாமையும் மற்றவர்களுக்கு விதித்த கடமைகளை செய்தலும்; ச - மற்றும்; ஜன ஸங்கஹ - உலக இன்பங்களை நாடும் மனிதர்கள், பெண்களுடன் தகாத தொடர்புள்ளவர்கள், மாயாவாதிகள் மற்றும் நாத்திகர்களுடன் தொடர்பு வைத்தல்; ச - மற்றும்; லௌல்யம்- பேராசை அல்லது அநாவசியமான நம்பிக்கைகளைப் பின்பற்றி அமைதியற்று வாழுதல்; ஷத்பிஹி - ஆறு தவறுகள்; பக்திஹி - சுத்த பக்தி; வினஸ்யதி - அழிந்து போகிறது.

### பொருள்:

ஆறு விதங்களான குற்றங்கள் பக்தியை அறவே அழித்து விடும். அவை: (1) அளவுக்கு மிஞ்சி உண்பது, தேவைக்கு மேல் சம்பாதிப்பது, (2) பக்திக்கு எதிரான செயல்கள், (3) பிரயோஜனமில்லாத வீண் பேச்சுக்கள், (4) முக்கியமான விதிமுறைகளைக் கடைப் பிடிக்காமலிருத்தல், விதி முறைகளில் தேவையின்றி வெறியார்வம் கொள்ளுதல் (fanaticism), (5) பக்திக்கு எதிரானவர்களிடம் சேருதல், (6) பிரயோஜனமில்லாத கொள்கைகளில் மனதைச் செலுத்தி அலை பாய்தல், அவற்றில் வெறியாக பேராசை கொள்ளுதல்.

### உபதேச பிரகாஷிகா தீக்கா

பக்தி முறைகளை ஒரு சாதகன் முதன் முதலில் துவங்கும் போது, அவனது இதயத்தில் உலக சம்பந்தமான ஆசைகள் தான் மிகுந்து இருக்கும். எனவே அவர்களுக்கு முதலாவது சுலோகத்தில் கூறப்பட்டுள்ள ஆறு விதமான உந்துதல்களை அடக்குவது மிகவும் கடினமாகவே இருக்கும். அதன் காரணமாக, ஆரம்ப நிலையில் பக்திக்கு தீங்கினை விழைவிக்கும் பல விதமான அனர்த்தங்களும் அந்த சாதகனின் இதயத்தில் இருக்கும். அப்படிப் பட்ட சாதகனுக்கு, தீங்குகளை விளைவிக்கும் அந்த அனர்த்தங்கள் என்னவென்பதை அவனுக்குக் கூறி உதவி செய்வதே இந்த சுலோகத்தின் நோக்கமாகும். அளவுக்கு மிஞ்சி உண்பது, தேவைக்கு மேல் செல்வங்களையும் பொருட்களையும் சேர்ப்பது - இவைகளைக் குறிப்பதே இந்த சுலோகத்தில் வரும் "அத்யாஹார" என்ற சொல்.

ப்ரயாஸ என்றால் உலக சம்பந்தமான பொருட்களை அடைய வேண்டி சிரத்தை கொள்வதும், பக்திக்கு சாதகமில்லாத செயல்களை செய்வதுமாகும். விரஜல்ப என்றால் மற்றவர்களைப் பற்றி வீணாகக் குற்றம் கூறிப் பேசுதல். இப்படிப் பிரயோஜனமற்ற வம்புப் பேச்சுக்களால் நேரம் தான் வீணாக்கப் படுகிறது. நியமாக்ரஹ என்ற சொல்லை இரண்டு விதங்களாகப் பொருள் கொள்ளலாம்: (1) நியம + ஆக்ரஹ - விதிமுறைகளைக் கடைப் பிடிப்பதில் பேரார்வம் (2) நியம + அக்ரஹ - விதிமுறைகளைக் கடைப் பிடிக்கத் தவறுதல். முதல் அர்த்தத்தை எடுத்துக் கொண்டால், உத்தம பலனாக ஸ்ரீகிருஷ்ணருக்கு சேவை செய்ய வேண்டும் என்பதில் பிரயாசைப் படாமல், அற்பமான பலன்களை அளிப்பதும், இன்ப சுகங்களை அனுபவிக்க உதவும் சுவர்க்க லோகங்களை அடைய உதவுவதுமான விதி முறைகளை அனுசரிப்பதைக் குறிக்கிறது. இரண்டாவது அர்த்தத்தை எடுத்துக் கொண்டால் அது பக்தியை வளர்க்கும் விதி முறைகளுக்கு எதிரான பிரயாசங்களைக் குறிக்கிறது. ஜன-ஸங்க என்றால் சுத்த பக்தர்களிடமுள்ள தொடர்புகளை விட்டுவிட்டு, மற்றவர்களிடம் தொடர்பு கொள்ளுதல் என்று அர்த்தம். ஸ்ரீமத் பாகவதத்தில் தேவஹூதிக்கும் கர்தப முனிவருக்கும் இடையே நடந்த ஒரு சிறு உரையாடல் வழியாக, எவ்வாறு நாம் உலகப் பற்றுள்ளவர் களிடமிருந்து விலக வேண்டும் என்பதை அறியலாம்.

*ஸங்கோ யஹ் ஸம்ஸ்ருதெர் ஹெதுர்*
*அஸட்ஸு விஹிதோ அதியா*
*ஸ ஏவ ஸாதுஷு க்ருதோ*
*நிஹ்சங்கத் வாய கல்பதே*

"ஓ தேவா! ஒருவன் கொண்டுள்ள தொடர்பே அவனுக்கு உலகத்து மாயையில் சிக்குதலையோ, அல்லது மோட்சத்தையோ அளிக்கக்

கூடியது. தன் அறியாமையினால் ஒருவன் பக்தியை விட்டு விட்டு உலக சம்பந்தமான ஆசைகளில் மூழ்கியிருப்பவர்களிடம் தொடர்பு வைத்தால், அது அவனை உலக சம்பந்தங்களில் கடுமையாகச் சிக்க வைத்து வடும். ஆனால் அவன் சுத்த பக்தர்களிடம் தொடர்பு வைத்தால் அந்த சேர்க்கை அவனைப் பரிசுத்தப் படுத்தி பகவானின் பாதக் கமலங்களில் கொண்டு சேர்த்து விடும்."

மேலும் கபில தேவ பகவான் கீழ்வரும் உபதேசத்தை தேவஹுதிக்கு அளிக்கிறார்:

ஸங்கம் ந குர்யாத் ப்ரமதாஸு ஜாது
யோகஸ்ய பாரம் பரம் ஆரு ருக் ஷு ஹு
மத் ஸேவயா ப்ரதிலப்தாத்ம லாபோ
வதந்தி யா நிரய துவாரம் அஸ்ய
(ஸ்ரீ மத் பாகவதம் 3. 31. 39)

"எவனொருவன் பக்தியோகத்தின் பரம சிகரமான 'கிருஷ்ண பிரேமை' என்ற பழத்தை அடைய விரும்புகிறானோ அவன் ஒருபோதும் பெண்களிடம் தகாத உறவுகள் வைத்துக் கொள்ளக் கூடாது. உலக மாயையிலிருந்து விடுபட்டு, ஸ்ரீகிருஷ்ணரின் பாதக் கமலங்களை அடைய விரும்பினால், அவன் ஒருபோதும் பெண்களிடம் தகாத உறவு வைக்கக் கூடாதென்றும், அப்படி வைப்பவனுக்கு நரகத்தின் வாயில் விரிந்து திறந்திருக்கிறதென்றும் மிகவும் உயர்ந்த நிலையை அடைந்த முனிவர்கள் கூறுகிறார்கள்."

தேஷ்வ் அஸந்தேஷு மூதேஷு
கண்டிதாத் மஸ்வ் அஸாதுஷு
சங்கம் ந குர்யாச் சோச்யேஷு
யோஷித க்ரீடா ம்ருகேஷு ச
... (ஸ்ரீமத் பாகவதம் 3. 31. 34)

"முட்டாள்கள், உணர்ச்சிகளுக்கு அடிமையாகி ஆடுகிறவர்கள், உலகப் பற்றுள்ளவர்கள், 'நாம் இந்த உடல்' என்ற எண்ணம் கொண்டவர்கள், எப்போதும் வருத்தப் படுகின்றவர்கள், பெண்களின் கைகளில் கட்டுண்டு நாய்கள் போல் நடனமாடுகிறவர்கள் - இவர்கள் எவருடனும் ஒருவன் ஒருபோதும் தொடர்பு வைத்துக் கொள்ளலாகாது."

இவ்வாறு உலக சம்பந்தமான தொடர்புகளின் குறைகளை சாஸ்திரங்கள் நமக்கு விளக்கி, அவற்றிலிருந்து விலக வேண்டுமென்று வலியுறுத்துகின்றன. "லௌல்ய" என்றால் உகந்த பொருட்களின் மேல் நம் மனம் உணர்ச்சி வயப்பட்டு ஆசைப் படுதலையும், பல விதமான மனிதர்களுடன் கொண்ட தொடர்பால்

அவர்களின் பல விதமான கருத்துக்களைக் கேட்டு மனம் குழம்பி நிரந்தர புத்தியில்லாமல் தத்தளிப்பதையும் குறிக்கிறது. அந்த மனம், விலை மாது போல் சில சமயம் கர்ம யோகத்தையும், சில சமயம் யோக ஆசனங்களிலும், மற்றும் சில சமயங்ளில் ஞான யோகத்திலும், இன்னும் சிலசமயம் பக்தி யோகத்திலும் இப்படியாக மாறி மாறிச் செல்லும். இப்படியாக ஒருவனது ஒருங்கான பக்தியை அவை அழித்து விடும்.

## பீயூஷ வர்ஷிணி விருத்தி

அத்யாஹார, பிரயாஸ, விரஜல்ப, நியமாக்ருஹ, ஜன சங்கா, லௌல்ய என்ற இந்த ஆறு விதங்களான அனர்த்தங்கள் பக்திக்கு நேராக எதிரானவைகள்.

(1) "அத்யாஹார" என்பது ஒரு கூட்டுச் சொல். அது "அதி" என்ற சொல்லும் "ஆஹாரா" என்ற இன்னொரு சொல்லும் சேர்ந்தவை. "அதி" என்றால் மிக அளவான அல்லது அளவு கடந்த என்று பொருள். "ஆஹாரா" என்றால் ஒருவன் தனக்கு இன்பம் பெறுவதற்காகப் பிடித்துக் கொள்ளுதல் அல்லது நுகர்தல் என்று அர்த்தம். எனவே, அளவு கடந்து இந்திரியங்கள் மூலமாக சுகம் பெறுவதையும், தன் தேவைக்கும் அதிகமாகப் பொருள் சேர்ப்பதையும் "அத்யாஹார" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. குடும்ப வாழ்க்கையிலிருந்து துறந்து வாழும் பக்தர்கள் ஒருபோதும் உலக சம்பந்தப் பட்ட பொருள்களைச் சேர்க்கலாகாது. குடும்ப வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் வைஷ்ணவர் தன் தேவைக்கு வேண்டியவைகளை மட்டும் சேகரித்து வைத்துக் கொள்ளலாம். ஆனால் அதற்கு மேல் சேர்த்தால் அது "அத்யாஹார" ஆகி விடும். எனவே பகவானுக்கு பஜனை செய்ய விரும்பும் எந்த ஒரு பக்தனும், சாதாரண உலகப் பற்றுள்ளவர்கள் தங்கள் இன்பங்களுக்காகச் சேகரித்து வைப்பது போல் ஒருபோதும் செய்யலாகாது.

(2) "பிரயாஸ" என்ற சொல் பக்திக்கு எதிரான எல்லா விதமான செயல்களையும், தனது இந்திரிய சுகங்களுக்காகச் செய்யும் அனைத்து செயல்களையும் குறிக்கும்.

(3) பிரோஜனமில்லாத, காலத்தைக் கழித்து வீணாக்கும் வீண் பேச்சுக்கள் அனைத்தும் "விரஜல்ப" என்று அழைக்கப்படும்.

(4) "நியமாக்ரஹ" என்ற சொல்லுக்கு இரண்டு அர்த்தங்கள் உள்ளன. முதலாவது அர்த்தம்: ஒரு சாதகன் படிப்படியாக மேல் நிலையான தகுதியைப் பெறும் போது, அவன் இன்னமும் கீழ் நிலைக்குள்ள விதி முறையில் தேவையின்றி பேரார்வம் செலுத்துதல். இரண்டாவது அர்த்தம்: பக்தியை வளர்ப்பதற்கான விதி முறைகளைக் கடைப் பிடிக்காமல், அதில் முழுமையான

நம்பிக்கையும் இல்லாமல் இருத்தல்.

(5) "ஜன சங்கா" என்றால் பகவானின் பக்தர்களைத் தவிர மற்றவர்களிடம் தொடர்பு கொண்டு அவர்களிடம் பழகுவதைக் குறிக்கின்றது.

(6) "லௌல்யம்" என்றால் நிலையற்றுத் தடுமாறுவதையும், பேராசையையும் குறிக்கும். ஒரு விதமாகப் பார்த்தால் இது, கண்ட கண்ட மதக் கொள்கைகளையும் கருத்துக்களையும், உறுதியும் தெளிவுமில்லாத கோட்பாடுகளையும் கேட்டு, மனம் தத்தளிப்பதைக் குறிக்கிறது. இன்னொரு விதமாகப் பார்த்தால், இது பிரயோஜனமில்லாத இந்திரிய சுகங்களைக் குறிக்கிறது. விரஜல்பத்தினால் ஒருவன் சாதுக்களைப் பற்றிக் கிண்டலாகப் பேசிக் களிக்கிறான். லௌல்யத்தினால் ஒருவன் நிரந்திரமில்லாத தெளிவற்ற கோட்பாடுகளில் மூழ்கித் திளைப்பதற்கு ஆர்வப் படுகிறான். இவை இரண்டுமே நாம அபராதத்தில் தான் சென்று முடியும். எனவே ஒருவன் மிகவும் கவனம் கொண்டு, இவைகளைக் கைவிட வேண்டும்.

## விளக்கவுரை

ஞானிகளின் மிக முக்கியமான செயல், அளவில்லாமல் அறிவைச் சேகரிப்பதே. கர்ம யோகிகளின் முக்கியமான செயல் பின்னர் மேல் உலகங்களில் இன்பத்தைப் பெற வேண்டி அதற்கான புண்ணியங்களைச் செய்தலாகும். இந்திரிய சுகங்களை அனுபவிப்பவர்கள் அளவின்றி பொருட்களைச் சேகரிக்கிறார்கள். இவை அனைத்தும் அத்யாஹாரமேயாகும். மேலும், ஞானத்தை வளர்ப்பதற்காக ஞானிகளும், மனைவி, வீடு, மக்கள், செல்வம் என்று எல்லாவற்றையும் அடைய விரும்பும் கர்மிக்களும் செய்யும் அத்தனை முயற்சிகளும் 'பிரயாஸம்' என்று அழைக்கப் படுகிறது. அறிவைச் சேகரித்து வரட்டு அறிஞனாகும் ஒருவன் கடைசியாகப் பெறுவது என்ன? பிரயோஜனம் எதுவுமில்லாத வரட்டு வேதாந்தமே! புகழுக்கும் புண்ணியத்துக்காகவும் ஆசைகொண்டு, ஏராளமான கர்மிக்கள் செய்யும் புண்ணியங்களுக்கு என்ன பலன்? பகட்டான சமயச் சடங்கு முறைகளும் போக இன்பமும் மட்டுமே! இந்திரியங்களைக் கவர்ந்து இன்பமடைய வைக்கும் இனிமையான பேச்சுக்களைப் பேசுபவர்களும் இதில் சார்கிறார்கள். இவையனைத்துமே 'விரஜல்பம்' என்று அழைக்கப் படுகின்றன.

முக்தி பெறுவதற்காக ஞான சாஸ்திரங்களைப் படித்து அதன் விதி முறைகளைக் கடைப் பிடிப்பதே 'ஆக்ரஹம்' அல்லது வெறியான பிடிப்பு என்று அழைக்கப் படுகிறது. வரட்டு வேதாங்களிலுள்ள விதிமுறைகளில் ஈர்க்கப்பட்டு, இவ்வுலகத்திலும் மற்ற உலகங்களிலும் சுகங்களை அனுபவிப்பதற்காக அவற்றை அனுசரிப்பதையே "நியம ஆக்ரஹா" என்று அழைக்கிறோம். மேலும், ஒருவனது தகுதிக்கும் அந்தஸ்துக்கும் ஒத்தவாறு, உடனடி இன்பங்கள் கிடைப்பதற்காக எல்லா விதமான மக்களுக்கும் உகந்ததாக விதிக்கப்பட்ட வழி முறைகளுக்கும் கூட 'நியம ஆக்ரஹம்' என்றே பெயர். இதுபோல், பக்தியை வளரவைக்கும் விதிமுறைகளைப் பின்பற்றாமல் அவற்றிற்குப் புறம்பாக இருப்பதும் 'நியம அக்ரஹம' ஆகும். அப்படிப் பட்டவர்கள் தங்கள் சிறுபிள்ளைத்தனமான வெறுக்கத் தக்கதான மூட நம்பிக்கைகளையும் கூட ராக மார்க்கத்திலுள்ள உன்னத பக்தியென்று பறை சாற்றுவார்கள். அப்படிப் பட்டவர்களைப் பற்றி ஹரி பக்தி விலாசத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்ருதி ஸ்மிருதி புராணாதி
பஞ்சராத்ர விதிம் வினா
ஐகாந்திகீ ஹரேர் பக்திர்
உத்பாதாயைவ கல்பதே

"ஒரு சாதகன் பகவான் ஸ்ரீஹரியிடம் முழுமையாக தனிப் பட்ட விதமான பக்தி கொண்டிருந்தாலும் கூட, அவன் ஸ்ருதி, ஸ்மிருதி,

புராணங்கள் மற்றும் நாரத பஞ்சராத்ரா போன்ற சாஸ்திரங்களில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளைப் பின்பற்றவில்லை யென்றால் அது அனர்த்தங்களையே உண்டு பண்ணும்."

கல்யாண கல்பதாரு என்ற நூலில், ஸ்ரீபக்தி விநோத தாக்கூரா கீழ்க் கண்டவாறு தனது மனதிடம் புலம்பிக் கூறுகிறார்:

"என் மனமே! நீ என்ன காரியம் பண்ணியிருக்கிறாய்? நீ உன் விவரம் தெரியா நிலையினால் புனிதமான வைஷ்ணவ சம்பிரதாயத்தைக் குறுகிய மனப்பான்மையுடையதென்று தப்பாகக் குறை கூறி நீ உன்னையே ஏமாற்றினாய்! புனிதமான கோட்பாடுகளைக் கொண்ட அந்த சம்பிரதாயத்தை நீ ஏமாற்றுக்காரர்கள் என்று குற்றம் கூறி மறுத்து விலக்கினாய்! நீ வைஷ்ணவ திலகத்தையும் துளசி மாலையையும் தவிர்த்தாய்! நாம ஜபம் செய்யும் பஜனை மாலையை தூர எறிந்தாய்! 'இந்தத் திலகத்தை இடுவதில் என்ன பயன்? எதற்காக இந்த ஜெப மாலை? என் மனதில் தான் நான் ஜபம் பண்ணுவேனே. ஒருவன் உண்ணும் உணவுக்கும் பஜனை செய்வதற்கும் சம்பந்தமே கிடையாது. மாமிசம், மீன், முட்டை இவைகளை விட்டுத் தான் ஆக வேண்டும் என்று எண்ணாதே. மேலும், மது, காபி, டீ இவற்றை அருந்துவதையும், பான் (வெற்றிலை பாக்கு), புகையிலை, மரிஜுவானா, கெம்ப், ஓபியம் போன்ற போதைப் பொருட்களையும் ஏன் விட வேண்டும்?' என்று நீ எண்ணுகிறாய். மேலும், தீக்சை எடுக்க வேண்டிய அவசியத்தையும் தள்ளி ஒதுக்கி வைத்து விட்டாய். நீ ஆண்டவனின் ஒரு அவதாரம் என்றும் கூட பறை சாற்றுகிறாய்! வெவ்வேறு விதங்களில் உன்னுடைய சொந்தக் கருத்தையே வேதமென்று மிகுந்த பலமுடன் உபதேசிக்க ஆரம்பித்து விட்டாய்!

"முன்னர் தோன்றிய மகாபெரும் ஆச்சாரியார்களைப் பற்றிக் கிண்டலாகப் பேசி, அவர்களது கொள்கைகளையும் புனிதமான பக்தியையும் ஏளனம் செய்து, 'அவர்கள் எல்லாவற்றையும் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்' என்று கூறுகிறாய். ஏதோ சில தந்திரமானவர்கள் திலகத்தையும் துளசி மாலையையும் அணிந்து மற்றவர்களை ஏமாற்றியிருக்கிறார்கள் என்கிறாய். எனவே எவரொருவர் திலகத்தையும் துளசி மாலையையும் அணிந்திருக்கிறார்களோ, அவர்களை ஏமாற்றுக்காரர்கள் என்று கூறி அவர்களுடன் தொடர்பே கொள்ளாமல் விலகுகிறாய். ஆனால் என் சகோதரனான மனமே! தயவு செய்து நீ எண்ணிப் பார். நீ இதனால் என்ன இலாபத்தை அடைந்துள்ளாய்? நீ தங்கத்தை எறிந்து விட்டு சாம்பலை எடுத்துள்ளாய்! உனது இவ்வுலகமும் மறுவுலகமும் முற்றிலுமாக அழிந்து விட்டது. எல்லோரையும் நீ ஏமாற்றுக்காரனென்றும் பாசாங்கு செய்பவனென்றும் வஞ்சகனென்றும் கூறுகிறாய். ஆனால் உனக்குப் பகவானிடம்

பக்தி ஏதாவது உள்ளதா? நீ இந்த உடலை விடும் போது உனக்கு என்ன கதி கிடைக்கும்?

''ஓ மனமே! நான் உனக்கு என்ன சொல்ல? நீ எப்போதும் 'பிரேமை, பிரேமை'' என்று வாய் கிழியப் பேசுகிறாய். ஆனால் அதனால் உனக்கு என்ன கிடைக்கிறது? பிரேமை என்பது ஒரு விலைமதிக்க முடியாத மிக மிக அபூர்வமான ஒரு மாணிக்கக் கல். மிக மிகக் கடினமான சாதகங்களைக் கடைப் பிடித்தால் மட்டுமே அது கிடைக்கும். நீ மோசடியான பயிற்சிகளினால், கண்ணீர் விடுதல், உடம்பு நடுங்குதல், மயிர் கூச்செரிதல் மற்றும் கீர்த்தனை ஆன்மீக நிகழ்ச்சிகளில் மயங்கி விழுதல் இப்படி அனைத்தையும் கச்சிதமாகச் செய்து விட்டு, மறு கணமே உன்னுடைய உண்மையான வியாபாரமான செல்வம் சேர்த்தல், பெண்கள், மற்றும் புகழ் கிடைக்க வேண்டிய அனைத்தையும் செய்கிறாய். உண்மையான பிரேமையை அடைய செய்ய வேண்டிய சுத்தமான பக்தி சாதகங்களில் கொஞ்சம் கூட உனக்கு நாட்டமில்லையென்றால் பின்னர் எங்கிருந்து பகவானிடம் பிரேமை (பகவத்-பிரேமா) வரும்? முதலாவதாக இறைவனின் நாமத்தின் மேல் சுமத்தும் பத்து விதமான அபசாரங்களையும் விலக்கி பகவானின் நாமங்களை இடைவிடாமல் எப்போதும் நீ ஜபிக்க வேண்டும். நீ பகவான் ஸ்ரீஹரியின் கதைகளை வைஷ்ணவர்களின் மத்தியில் இருந்து கேட்க வேண்டும். அதன் பின்னர் தான் ஸ்ரீநாம பிரபுவின் கருணையினால் சுத்தமான பிரேமை தானாக உன் இதயத்தில் உண்டாகும்.

''நீ ஒருபோதும் ஒழுங்காகப் பஜனை செய்வதில்லை, சுத்த பக்தர்களுடன் நீ ஒருபோதும் சங்கீர்த்தனம் செய்ததில்லை! நீ தனிமையில் அமர்ந்து உனது இந்திரியங்களையெல்லாம் அடக்கி முழுவதுமாகப் பகவானை மட்டும் தியானம் செய்திருக்கிறாயா? நீ மரத்தில் ஏறுவதற்கு முன்னமே கையில் பழம் கிடைக்கும் என்று பறிக்கிறாய்! உன் கையில் ஒன்றும் கிடைக்கவில்லை. மிகவும் புனிதமான 'கிருஷ்ண பிரேமை' மிகவும் அரிதானது. மற்றவர்களையும் நீ ஏமாற்றி, நீயும் ஏமாறுகிறாய். முதலில் நீ தகுந்த சாதகங்களை முறையாகவும் சரியாகவும் செய். அதன் பின் பிரேமை தானாக வந்து சேரும்.

''ஓ சகோதரனே! காமமும் பிரேமையும் வெளியில் ஒன்று போல் தோன்றினாலும், அவைகள் வேறானவைகள். காமம் என்பது துருப்பிடித்த இரும்பு போலானது. பிரேமையோ சுத்தமான தங்கத்தைப் போன்றது. நீ காமத்தை (துருப்பிடித்த இரும்பைப்) பிடித்துக் கொண்டு அதை சுத்தமான தங்கம் (பிரேமை) என்று எண்ணிக் கொண்டிருக்கிறாய். யாராவது இப்படி காமம் போன்ற தகாத முறைகளினால் பிரேமையை அடைய முடியுமா?

"ஓ, முட்டாளான என் மனமே! நீ காமமே பிரேமை என்று நினைத்து மயங்கியுள்ளாய். உடல், சதை மற்றும் எலும்புகளுக்காகவே காமம் உண்டாகிறது. அந்தக் காமமே எப்போதும் இந்திரியங்களின் பின்னால் வேகமாக ஓடுகிறது. ஆனால் மாசற்ற அன்பு மட்டும் தான் எல்லா ஜீவன்களின் இயற்கையான குணம். அந்த பிரேமையே முழுவதுமானதும் இயற்கையிலேயே ஆன்மீக வடிவமுமானது. அந்தப் பிரேமையின் ஒரே குறிக்கோள் ஸ்ரீஹரி மட்டுமே - துணி மணிகளால் அலங்கரிக்கப் பட்ட எலும்பும் சதையுமான பொம்மைக்கல்ல! ஜீவன்களிடம் தற்போது அந்தப் பிரேமை காமத்தினால் மூடப் பட்டுள்ளது. எனவே நீ காமத்தை விட்டெறிந்து விட்டு உனது பரிசுத்தமான அன்பை வெளியே கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

"முதலாவதாக, எண்ணிக்கையற்ற முந்திய பிறவிகளில் சேர்த்து வைத்த ஆன்மீக புண்ணியங்களால் (சுக்ருதி) ஒருவனுக்கு சுத்த நம்பிக்கை (சிரத்தை) வருகிறது. அதன் பின்னர், ஹரி கதைகளைக் கேட்டும், சுத்த பக்தர்களுடன் ஹரிநாம சங்கீர்த்தனம் செய்தும் அந்த சிரத்தை மேலும் வளர்ந்து "நிஷ்டை" என்ற உறுதிப் பிடிப்பை அடையும். அதன் பின்னர் "ருசி" என்ற ஆன்மீக ரசிப்பையும் அடைகிறது. அதன் பின்னர் "ஆஸக்தி" என்ற ஆழ்ந்த பிடிப்பு வருகிறது. ஆஸக்தியிலிருந்து பின்னர் "பாவா" வெளிப் படுகிறது. பாவாவிலிருந்து பின்னர் "பிரேமை" வெளிப் படுகிறது. இந்த வரிசைகளில் தான் ஒவ்வொரு நிலைகளையும் தாண்டி, பின்னர் கடைசியாக பிரேமை உண்டாகிறது. இவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாக அனைத்து நிலைகளையும் கடந்த பின்னரே ஒருவன் பிரேமையை அடைய முடியும். வேறெந்த முறையாலும் அதைப் பெறவே முடியாது.

"ஓ கொடியதான மனமே! இப்படி நீ பக்தி சாதகங்களை படிப்படியாக மேற்கொள்ள ஏன் பயப்படுகிறாய்? உன் போலிப் பிரேமையினால் நீ எதையும் அடைய மாட்டாய். இப்படி நீ போலித்தனமாக நடித்து, நீ தற்காலிகமான சொற்ப இன்பத்தை மட்டுமே பெறுகிறாய். ஆனால் அதுவும் கடைசியில் உன்னைத் துயரத்திலேயே கொண்டு சேர்க்கும். நீ இதை நன்கு சிந்தித்து அறிந்து எல்லா விதமான அருவருக்கத்தக்க அனர்த்தங்களையும் விட்டு விட்டு சுத்தமான பக்தி சாதனத்தை மேற்கொள்ள வேண்டும். உனக்கு வரும் நல்ல காலம் இதைப் பொறுத்தே அமைந்துள்ளது."

சூன்யமான நிர்வாணம் அல்லது பிரம்ம மோட்சத்தைக் குறிக்கோளாகக் கொண்ட ஞானிகளிடம் தொடர்பு, பிரதி பலன்களின் மேல் பேராசை கொண்டு உழைக்கும் கருமிகளுடன் தொடர்பு, இந்திரிய சுகங்களையே பரம சுகம் என்று எண்ணி உலக சுகங்களை சுகிக்கத் துடிப்பவர்களிடமுள்ள தொடர்பு - இவை அனைத்தையும் "ஜன சங்கம்" என்று இந்த சுலோகத்தில்

குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த உறவுகள் முதலில் மகிழ்ச்சியைக் கொடுப்பதாகத் தோன்றினாலும் கடைசியில் அவை வேதனைகளையேக் கொடுக்கும். ஆனால் ஒருவன் பகவானின் பரிசுத்தமான பக்தர்களின் கூட்டாளியாக ஆகும் போது, தானாகவே இந்த வேண்டாத தொடர்புகள் துண்டிக்கப் பட்டு பின்னர் மறைந்து விடும்.

"லௌல்யா" என்ற சொல்லுக்குப் போராசை அல்லது மன அமைதியின்மை என்று பொருள். மனம் விதவிதமான விஷயங்களிலும் பொருட்களிடமும் பாய்ந்து அவற்றை ருசிப்பதற்காக ஓடுவதையே இங்கு மன அமைதியின்மை என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இவ்வாறு, மனம் உலக இன்பங்களைச் சுவைக்கவோ, பிரம்ம மோட்சம் பெறவோ வேண்டி நாடி ஓடுகிறது. சில சமயம் அது எட்டு விதமான யோகப் பயிற்சிகளை (அஷ்டாங்க யோகம்) பயில வேண்டுமென்று அங்கே ஓடுகிறது. சில சமயம் தியான யோகத்தைச் செய்ய வேண்டுமென்று அந்தத் திசையில் ஓடுகிறது. சில சமயம் யாகங்கள் செய்ய வேண்டுமென்று அங்கே ஓடுகிறது. இன்னும் சில சமயங்களில் நிர்வாண சூனிய பிரம்மத்தை அடைய வேண்டுமென்று அந்தத் திசையில் ஓடுகிறது. இதுவே "லௌல்யா" என்பதாகும்.

எனவே ஒருவன் ஆறு விதமான குற்றங்களான "அத்யாஹார", "பிரயாஸ", "விரஜல்ப", "நியமாக்ரஹ", "ஜன சங்க", மற்றும் "லௌல்ய" - இவை அனைத்தையும் உதறி விட்டு விட்டு சுத்தமான பக்தி சாதனத்தைக் கடைப் பிடிக்க வேண்டும். அதை ஒருவன் செய்யாவிடில், கிருஷ்ண பக்தி ஒன்றுதான் ஜீவன்களின் உத்தமமான பொக்கிஷம் என்பதை அறியவே முடியாது! அது மட்டுமல்ல, அது அவனை பக்தி மார்க்கத்தில் நுழையவே முடியாமல் ஆக்கி விடும்!

# சுலோகம் மூன்று

## பக்திக்கு உகந்த ஆறு விரதங்கள்

உத்ஸாஹான் நிஸ்சயாத் தைர்யாத்
தத் தத் கர்ம ப்ரவர்த்தனாத்
ஸங்க தியாகாத் சதோ வ்ருத்தெஹ்
ஷத்பிர் பக்திஹி ப்ரசித்யதி

### மொழி பெயர்ப்பு

உத்ஸாஹாத் - பக்தியை வளர்க்கும் விதிமுறைகளைக் கடைப் பிடிப்பதில் மிகுந்த உற்சாகம்; நிஸ்சயாத் - சாஸ்திரங்களிலும், சாஸ்திரங்களை நன்கு அறிந்த குருவிடமும் அசைக்க முடியாத நம்பிக்கை; தைர்யாத் - எந்த வித தடங்கல்களிலும் பக்தி சாதகங்களை மிகுந்த மனத்திறனுடன் கடைப்பிடித்து, பக்தியின் பலன் இன்னமும் கிடைக்கவில்லையென்றாலும் பொறுமையுடன் பக்தி சாதகங்களை தொடர்ந்து செய்தல்; தத் தத் கர்ம ப்ரவர்த்தனாத் - ஸ்ரீ கிருஷ்ணரின் மகிழ்ச்சிக்காக மட்டுமே, பக்தியின் அங்கங்களை (சிரவணம், கீர்த்தனம் போன்ற ஒன்பது) கடைப் பிடித்து உலக ஆசைகளை ஒதுக்குதல்; ஸங்க தியாகாத் - பெண்களுடன் தகாத உறவுகளையும், பெண்களுடன் மிகவும் ஈடுபாடு கொண்டிருப்பர்களையும், மாயா வாதிகளையும், நாத்திக மற்றும் போலியான மதங்களைக் கடைப்பிடிப்பவர்களையும் ஒதுக்கி விடுதல்; சதோ வ்ருத்தெஹ் - சுத்த பக்தனின் குணங்களையும் பழக்க வழக்கங்களையும் கடைப் பிடித்தல்; ஷத்பிஹி - இந்த ஆறு விதமான பழக்கங்கள்; பக்திஹி - சுத்த பக்தி; ப்ரசித்யதி - பலன் கிடைக்கிறது.

## பொருள்

பக்தியில் முன்னேற வேண்டுமானால் ஆறு சாதகங்கள் மிகவும் முக்கியமானவை.

(1) பக்தியை அதிகரிக்கும் செயல்களில் மிகச் சிரத்தை கொள்ளுதல்;
(2) புனிதமான வேத சாஸ்திரங்களின் படி உபதேசிக்கும் குருவின் வார்த்தைகளில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்தல்;
(3) பக்தி சாதகங்களைக் கடைப் பிடிக்கும் போது முட்டுக் கட்டைகள் வந்து சேர்ந்தாலோ அல்லது எதிர்பார்த்த பலன் கிடைப்பதில் தாமதமானாலோ கூட, மன வலிமையுடன் சாதகங்களைத் தொடர்ந்து விடாமல் கடைப்பிடித்தல்;
(4) உலக இன்பங்களை ருசிக்க வேண்டுமென்ற ஆசையை விலக்கி ஸ்ரீகிருஷ்ணரின் மகிழ்ச்சியை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு, பக்தியின் அங்கங்களான சிரவணம், கீர்த்தனம் முதலான அனைத்தையும் கடைப்பிடித்தல்;
(5) பெண்களிடம் தகாத தொடர்புகள் கொள்ளாதிருத்தல். மாயாவாதிகள், போலி மதங்களைச் சார்ந்தவர்கள், பெண்களுடன் தகாத தொடர்பு வைத்திருப்பவர்கள் போன்ற அனைவரையும் ஒதுக்கி விடுதல்;
(6) சுத்த பக்தனின் குண நலன்களையும் பழக்கங்களையும் கடைப் பிடித்தல்.

## உபதேச பிரகாஷிகா தீக்கா

இங்கே, "உத்ஸாகம்" என்பது பக்தியை வளர வைக்கும் சாதகங்களின் அங்கங்களை மிகவும் ஆவலுடன் கடைப் பிடித்தலைக் குறிக்கும். "நிச்சயா" என்பது திட நம்பிக்கையைக் குறிக்கிறது. "தைர்யா" என்றால், தங்கள் பக்தி சாதகங்களுக்கு இன்னமும் பலன் கிடைக்கவில்லை என்றாலும் கூட, மனம் தளராமல் குறைவின்றி தொடர்ந்து கடைப்பிடித்து வருதல் என்று பொருள். "தத்-தத்-கர்ம-ப்ரவர்த்தன" என்றால் பகவானை அடைவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு, தன் சொந்த சௌகரியங்களையும் உலக இன்பங்களையும் ஒதுக்கிவிடுதல் என்று அர்த்தமாகும். ஸ்ரீமத் பாகவதத்தில் (11.19.24) பகவான் ஸ்ரீகிருஷ்ணர் உத்தவரிடம் கீழ் வருமாறு கூறுகிறார்:

> ஏவம் தர்மைர் மனுஷ்யாணாம்
> உத்த வாத்ம நிவேதினாம்
> மயி சஞ்சயதே பக்திஹி
> கோ அன்யோ அர்த்தோ அஸ்யாவஸிஸ்யதே

"பக்திக்கு அனுகூலங்களான சாதகங்களைக் கடைப்பிடித்து,

ஒருவன் தன்னுடைய ஆத்மாவையே எனக்காக முழுவதுமாக அர்ப்பணித்து விடும் போது அவனது இதயத்தில் புனிதமான அன்பால் நிறைக்கப்பட்ட சுத்தமான பக்தி உண்டாகிறது. இப்படி என்னிடம் பக்தி தோன்றிய ஒருவனுக்கு வேறு என்னதான் தேவை? "

மூல சுலோகத்தில் வரும் "சதோ - விருத்தி" என்பதற்கு சுத்தமான பக்தனின் உத்தமமான நடத்தைகளைப் பின்பற்றுவது என்று பொருள்.

## பீயூஷ வர்ஷிணி விருத்தி

ஒரு பக்தனுக்கு இரண்டு விதமான தேவைகள் உள்ளன. தன் உடம்பும் உயிரும் ஒட்டியிருக்க வேண்டி, தனது உடம்பைப் பேணுதலும் பக்தியை வளர்க்க வேண்டிய சாதனங்களைப் புரிவதுமே அவைகள். இந்த சுலோகத்தின் முதல் பாதியில், பக்தியை வளர்க்க எந்த விதமான மனப்பாங்குகள் தேவை என்பதைப் பற்றிக் கூறுகிறது. இரண்டாவது பாதியில், ஒரு பக்தி சாதகன் எவ்வாறு தன் வாழ்க்கையை நடத்த வேண்டும் என்பதைப் பற்றிக் கூறுகிறது. உற்சாகம், திட நம்பிக்கை, பொறுமை, பக்தியை வளர வைப்பவைகளை மட்டுமே செய்தல், எல்லா விதமான கெட்ட தொடர்புகளையும் விட்டு விடுதல், சுத்தமான பக்தர்களின் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்தல் - இவை அனைத்தும் பக்தியில் வெற்றியையே ஒரு சாதகனுக்கு அளிக்கும்.

(1) **"உத்ஸாஹா"** - பக்தி சாதகங்களைச் சிரத்தையுடன் கடைப்பிடிப்பதை உத்ஸாஹம் என்று அழைக்கிறோம். அவ்வாறு சிரத்தை இல்லையென்றால் ஒருவனது பக்தி மறைந்து விடும். மிகவும் சிரத்தையுடன் சிறிதும் பிசகாமல் பக்தி சாதகங்களின் அங்கங்களை ஒருவன் கடைப் பிடிப்பதே உத்ஸாஹம் ஆகும்.

(2) **"நிஸ்சய"** - அசைக்க முடியாத திட நம்பிக்கை என்பது இதன் பொருள்.

(3) **"தைர்ய"** - தன் பக்தி சாதகங்களுக்கு இன்னமும் பலன் வரவில்லையென்றாலும் கூட, மிகவும் பொறுமையுடன் பக்தி சாதகங்களை சிறிதும் பிசகாமல் கடைப் பிடித்தலே "தைர்ய" என்பதாகும்.

(4) **"பக்தி-போஷக-கர்மா"** - இரண்டு விதமான செயல்கள் பக்தியை வளர்க்கின்றன: கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளைச் சரியாகக் கடைபிடித்தல், செய்யக் கூடாதவை (நிஷேத) களைத் தவிர்ப்பதுமே அவை. சிரவணம், கீர்த்தனம் முதலான பக்தியின் அங்கங்களை செயலாற்றுவதே ஒரு பக்தன் கடைப் பிடிக்க வேண்டிய விதி முறைகள். ஸ்ரீகிருஷ்ணரை மட்டுமே

மகிழ்விக்க வேண்டி தன்னுடைய சொந்த இன்ப நுகர்ச்சிகளை அறவே விட்டு விடுவதுதான் முதன்மையான நிஷேதாவாகும்.

(5) **"சங்க தியாக"** - பக்தர்களல்லாதவர்கள், பெண்கள், மற்றும் பெண்களுடன் ஈடுபாடு உள்ளவர்கள் அனைவரிடமிருந்தும் விலகியிருக்க வேண்டும்.

(6) **"சத் விருத்தி"** - சுத்தமான பக்தர்களின் உத்தமமான குணங்களையும் பழக்க வழக்கங்களையும் கடைப் பிடித்து, தன் வாழ்க்கையைப் பக்திக்கு சாதகமாக்கி வாழ வேண்டும். துறந்த வாழ்க்கை வாழும் பக்தன், முடிந்தால் மதுகாரியைப் போல் திரிந்து, இரந்து பிச்சையெடுத்து வாழ வேண்டும். மதுகாரியென்றால், தேனீ ஒவ்வொரு மலராகச் சென்று கொஞ்சம் கொஞ்சமாக தேனை சேகரிப்பதைப் போல் சன்னியாசியும் ஒவ்வொரு வீடாகச் சென்று மிகவும் கொஞ்சம் கொஞ்சமாக பிச்சைகளை சேகரித்து அவற்றை மட்டும் உண்ணுதலாகும். குடும்ப வாழ்க்கை நடத்தும் கிருஹஸ்தன் வேத சாஸ்திரங்களில் கொடுக்கப்பட்டுள்ள வர்ணாஸ்ரம விதி முறைகளைக் கடைப்பிடித்து வாழ்க்கையை நடத்த வேண்டும்.

**விளக்கவுரை**

"உத்ஸஹா" என்பதை மேலும் விளக்கலாம். ஞான மார்க்கத்தைக் கடைப்பிடித்தல், கர்ம யோகத்தின்படி செயல்களை ஆற்றுதல், ஸ்ரீகிருஷ்ணரை மகிழ்விப்பதைத் தவிர வேறு விதமான வழிபாட்டுகளை செய்தல் (தன் ஜட இன்பங்களுக்காக பிற தெய்வங்களை வழிபடுதல்), உலக சுகங்களை தங்களுக்கு வேண்டிய வகைகளில் அனுபவித்தல் - இவை அனைத்தையும் அறவே ஒதுக்கி விட்டு, உறுதியுடன் கிருஷ்ண பக்தி சாதகங்களைப் புரிதலை "உத்ஸஹா" என்று கூறலாம். "பகவத் பக்தி மட்டுமே எல்லா ஜீவன்களின் ஒரே இலட்சியம்" என்பதில் திடமான அசைக்க முடியாத நம்பிக்கையே "நிஸ்சயா" என்பதாகும். கர்மயோக மார்க்கத்திலும் ஞானயோக மார்க்கத்திலும் அலைந்து, மனதை அலைபாய விட்டுக் குழம்பி, அவர்களுடைய கொள்கை முறைகளைப் பின்பற்றினால் அது மிகுந்த வேதனைகளையே கடைசியில் கொண்டு வந்து சேர்க்கும்.

"ஜீவன்களின் உண்மையான சுய லட்சியம் பக்தி மார்க்கம் மட்டுமே" என்று திடமாக நம்பிக்கை கொள்வதே "தைர்யா" ஆகும். ஸ்ரீமத் பாகவதத்தில் (10.2.32-33), ஞானிகள் எவ்வாறு தாங்கள் முக்தர்களாகி விட்டதாகத் தப்பாக எண்ணி பகவானின் தாமரைப் பாதங்களின் மேல் அபராதம் விளைவிக்கிறார்கள் என்பதையும், மாறாகப் பிரேம பக்தர்கள் எவ்வாறு பக்தியில் உறுதியாக மேன்மேலும் உயர்கிறார்கள் என்பதைப் பற்றியும் விவரிக்கப் பட்டுள்ளது."

யே அன்யே அரவிந்தாக் ஷ விமுக்த மானினஸ்
த்வய்யி அஸ்த பாவாத் அவிசுத்த புத்தயஹ
ஆருஹ்ய க்ருச்சிரேண பரம் பதம் ததஹ
பதந்தி அதோ அநாதிருத்த யுஷ்மத் அங்கிரயஹ

"ஒ, தாமரை போன்ற கண்களைக் கொண்ட பகவானே, உமது தாமரை மலர் பாதங்களில் சரணடையாதவர்கள் இறுமாப்புடன் வீணாகத் தங்களை முக்தர்கள் என்று எண்ணிக் கொள்கிறார்கள். உம்மிடம் அவர்களுக்கு பக்தியில்லாததால் அவர்களது புத்தி சுத்தமற்றது! ஒருவேளை அவர்கள் கடுந்தவங்களால் முக்தியை அடைந்தால் கூட, உமது தாமரைப் பாதங்களை அவர்கள் உதாசீனம் செய்வதால், அவர்கள் அதிலிருந்து கீழே தான் விழுகிறார்கள்.”

ததா நதே மாதவ தாவகாஹ க்வசித்
ப்ரஸ்யந்தி மார்காத் த்வயி பத்தா சைஹ்ருதாஹ
த்வயாபிகுப்தா விசரந்தி நிர்பயா
வினாயகா நீகப மூர்தசு பிரபோ

"ஓ மாதவா! முக்தர்களாகி விட்டதாக எண்ணும் ஞானிகள் தங்களது முக்தி நிலையிலிருந்து கீழே விழலாம். ஆனால் பரிசுத்த அன்பினால் உம்மிடம் பிணைக்கப் பட்டிருக்கும் உமது பக்தர்களோ ஒருபோதும் தங்கள் பக்தியிலிருந்து கிழே விழுவதேயில்லை. மேலும் அவர்களுக்கு உமது முழு பாதுகாப்பும் இருப்பதால், அவர்கள் எந்த விதமான பயமும் கொஞ்சம் கூட இல்லாமல் அனைத்து தடங்கல்களையும் மிகவும் எளிதாகத் தாண்டுகின்றனர். அது மட்டுமல்ல, அந்த தடங்கல்களுக்கே பொறுப்பான பெரும் தேவதைகளின் தலைகளிலேயே தங்கள் கால்களை வைத்து மிதித்து அவற்றைக் கடந்து விடுவார்கள்!"
பக்தி மார்க்கத்தில், ஶ்ரீலஹரிதாஸ் தாக்கூரா, "எந்தத் தடங்கல்கள் வந்தாலும் நாம ஜெபத்தைத் தவறாமல் பண்ணுவேன்" என்று உறுதி எடுத்து அதை விடாமல் கடைப்பிடித்தது இங்கே மிகவும் குறிப்பிடத்தக்கது. இந்த விதமான உத்தமமான பக்தி சாதகங்களைப் பற்றி ஶ்ரீசைதன்ய பாகவதத்தில் (ஆதி கண்டம் 16.94) கீழ் வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

கண்ட கண்ட ஹை தேக ஜாய யதி ப்ராண
தபு ஆமி வதனே நா சாடி ஹரி நாம

"என் உடலைக் கண்டங் கண்டங்களாகக் கூட வெட்டிப் போட்டாலும், இல்லை என் உயிரே கூட பிரிந்து போனாலும், நான் ஹரி நாம ஜெபத்தை ஒருபோதும் விடவே மாட்டேன்!"

பக்தி மார்க்கத்தில் இப்படி ஒரு உறுதியுடன் இருப்பதையே "தைர்யா" என்று அழைக்கப்படுகிறது. மேலும், பகவானின் ஹரி கதைகளைக் கேட்பதும், பகவானின் நாமங்களைக் கீர்த்தனைகளாகப் பாடுவதும், பகவானின் திருநாமம், ரூபம், லீலைகள் அனைத்தையும் திடமான நம்பிக்கையுடன் எப்போதும் மனதில் தியானிப்பதும் - இவை அனைத்தும் "தத்-தத்-கர்ம-ப்ரவர்த்தனாத்" எனப்படும்.

பகவானின் பக்தர்களின் சேர்க்கை மிக மிக விரும்பத்தக்கது. கர்மிக்களுடனும், ஞானிகளுடனும், உலக இன்ப ஆசைகள் நிறைந்து இருப்பவர்களுடனும் ஒருபோதும் சேர்க்கை வைத்துக் கொள்ளக் கூடாது. அவர்கள் அனைவரும் இன்பங்களை சுகிக்கத் துடிக்கின்ற தாழ்ந்த புத்தியுடையவர்கள். அவர்களிடம் நெருங்கி, ஏதாவது ஆசைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுவதோ, புகழுக்காக அணுகுவதோ, இவற்றை ஒருபோதும் நினைத்துக் கூட பார்க்கலாகாது. அவர்களுடன் எந்த விதத்திலும் தொடர்பே வைக்கலாகாது. இவ்வாறான கெட்ட சேர்க்கைகளை வெகு தூரத்தில் தள்ளி, எப்போதும் விடாமல் ஹரிநாமத்தை ஜெபம் செய்வதிலேயே மூழ்கியிருக்கும் பக்தனைப் போல் வாழ வேண்டும்.

கர்ம யோகம், ஞான யோகம், தியான யோகம், அஷ்டாங்க யோகம் இவையெதுவுமே பக்தி யோகத்தின் படிக்கல் அல்ல. அவை எதுவும் ஸ்ரீகிருஷ்ணரை மகிழ்விப்பதேயல்ல! மேலும், ஒருவனுக்கு எல்லா விதமான நற்குணங்களும் அமைந்திருந்தும், அவனிடம் பக்தியில்லையென்றால் அந்த நற்குணங்களும் கூட குறைகளாகவே மாறி விடும்! ஆனால் ஒரு பக்தனிடமோ அனைத்து விதமான நற்குணங்களும் தானாகவே வந்து குடியேறும். எனவே பக்தி மார்க்கத்தில் எப்போதுமே பரிசுத்தமான குணங்களே இருக்கும்.

சுருக்கமாகக் கூறப்போனால், ஸ்ரீகிருஷ்ணருக்கு சேவை செய்வதில் அளவற்ற விருப்பமுடனும், செய்யும் சேவைகளில் முழு நம்பிக்கையுடனும், அனைத்து சேவைகளும் உண்மையிலேயே ஸ்ரீகிருஷ்ணருக்கு மட்டுமாகத்தான் செய்யப்படுகிறதா என்பதில் கவனமுடனும், ஸ்ரீகிருஷ்ணரின் பக்தர்களல்லாதோரின் தொடர்புகளையும் ஒதுக்கி, ஸ்ரீகிருஷ்ண பக்தர்களின் அடிச்சுவடுகளைப் பின் பற்றுதலே பக்தி சாதகத்தின் ஆறு விதமான அங்கங்களாகும்.

# சுலோகம் நான்கு

## பக்தியை வளர வைக்கும் கூட்டுக்கள்

ததாதி ப்ரதிக்ருகணாதி
குக்யம் ஆக்யாதி ப்ருச்சதி
புங்க்தே போஜயதே சைவ
ஷத் விதம் ப்ரீதி லக் ஷணம்

### மொழி பெயர்ப்பு

ததாதி - சுத்த பக்தர்களுக்குத் தேவையானவைகளை அளித்தல்; ப்ரதிக்ருகணாதி - சுத்த பக்தர்கள் உண்டு மீதிமுள்ளவைகளை ஏற்று உண்ணுதல்; குக்யம் ஆக்யாதி - ரகசியமான ஆன்மீக அனுபவங்களை சுத்த பக்தர்களிடம் மட்டுமே கூறி உரையாடல்; ப்ருச்சதி - பக்தர்களின் அந்தரங்க ஆன்மீக அனுபவங்களைப் பற்றிக் கேட்டு அறிதல்; புங்க்தே - பக்தர்கள் உண்டு மீதி வைத்த பிரசாதத்தை பேராவலுடனும் மிகுந்த பிரியத்தடனும் உண்டு மகிழ்தல்; ச - மேலும்; போஜயதே - பிரியத்துடன் பிரசாதத்தை பக்தர்களுக்கு பரிமாறுதல்; ச - மேலும்; சத் விதம் ஏவ - இந்த ஆறு விதமானவைகள்; ப்ரீதி லக் ஷணம் - நல் விதமான பக்தர்களுடன் கொண்டுள்ள சேர்க்கைக்கு அடையாளங்கள்.

### பொருள்

சுத்த பக்தர்களுக்குத் தேவையானவைகளை வேண்டியவாறு அளித்தல், அவர்கள் உண்டு மீதியுள்ள பிரசாதத்தை ஏற்றுக் கொள்ளுதல், பஜனையின் அந்தரங்க அனுபவங்களை சுத்த பக்தர்களிடம் பகிர்ந்து உறவாடல், அவர்களின் அந்தரங்க அனுபவங்களையும் கேட்டு அறிந்து கொள்ளுதல், பக்தர்கள் உண்டு மீதியான பிரசாதத்தை பேராவலுடன் உண்டு மகிழ்தல், பிரியத்துடன் பக்தர்களுக்குப் பிரசாதத்தை விநியோகித்தல் - இவை ஆறும் ஒருவனின் பக்த சங்கத்தின் சிறந்த அடையாளங்களாகும்.

### உபதேச பிரகாஷிகா தீக்கா

இந்த நான்காவது சுலோகத்தில், பக்தர்களின் பிரியமான தொடர்புகளின் மேலான பரிணாமங்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதன் பொருள் மிகவும் தெளிவாக இருப்பதால் இதைப் பற்றி மேலும் விவரிக்கத் தேவையில்லை.

## பீயூஷ வர்ஷிணி விருத்தி

கெட்டவர்களிடம் தொடர்பு வைத்தல் பக்திக்கு மிகவும் கேடானது. எனவே அவற்றை அறவே விட்டு விட வேண்டும் என்பதை சொல்லவே தேவையில்லை. பக்தியில் மேன்மேலும் உயர விரும்பும் பக்தன் சுத்த பக்தர்களிடம் மட்டுமே நட்பு வைத்துக் கொள்ள வேண்டும். கெட்ட சேர்க்கையில் விழாமல் தடுக்கும் சக்தி சுத்த பக்தர்களின் சொத்துக்கள்! பக்தியைப் பேணி மேன்மேலும் வளர வைக்கும் சுத்த பக்த சங்கத்தின் பிரியமான நெருங்கிய பரிமாற்றங்களையே இந்த நான்காவது சுலோகம் விவரிக்கிறது. மற்ற பக்தர்களுக்குத் தேவையானவைகளை அளித்தும், தனக்குத் தேவையானவற்றை மற்ற பக்தர்கள் கருணையுடன் வழங்கும் போது அவற்றைப் பிரியத்துடன் ஏற்றும் பரஸ்பரம் இணைந்து தொடர்பு கொள்ள வேண்டும். மேலும், தன் அந்தரங்கமான ஆன்மீக அனுபவங்களை சுத்த பக்தர்களிடம் பகிர்ந்தும், இது போல் அவர்களிடமிருந்து இரகசியமான பக்தித் தத்துவங்களையும் அந்தரங்கமான அனுபவங்களையும் அறிந்தும் கொள்ள வேண்டும். உற்சாகத்துடன் பிரசாதங்களை மற்ற பக்தர்களுக்கு விநியோகித்தும், சுத்த பக்தர்கள் அளிக்கும் பிரசாதத்தை மகிழ்வுடன் ஏற்று உண்டும், பரஸ்பரமாக சேர்ந்திருக்க வேண்டும். மேலே குறிப்பிட்ட இந்த ஆறு விதமான செயல்களும், எவ்வாறு ஒருவன் சாதுவுடன் சுத்தமான தொடர்பு (சாது சங்கம்) கொள்ள வேண்டும் என்பதை விளக்குகின்றன. சுத்த பக்தர்களுடன் கொள்ளும் பிரியமான இணக்கத்தையே இந்த ஆறு விதமான செயல்களும் அடையாளங்களாகக் காட்டுகின்றன. இவ்வாறே தான் ஒருவன் சாதுவுக்குப் பணிவிடைகள் செய்ய வேண்டும்.

## விளக்கவுரை

பகவானின் சுத்தமான பக்தர்களின் தொடர்பே ஒருவனிடம் பக்தியை தோன்ற வைக்கிறது. அதற்கு அவன் எப்போதும் வைஷ்ணவர்களிடம் எவ்வாறு தொடர்பு வைத்திருக்க வேண்டும் என்பதையே இந்த சுலோகம் விவரிக்கிறது. உலக பிறப்பு இறப்புக்களிலிருந்து விடுபட்டு முக்தியடைய விரும்பும் ஞானிகளிடமும், புண்ணிய கர்மங்களைப் புரிந்து அவற்றின் பலன்களை அனுபவிக்க விளையும் கர்மிகளிடமும், உலக இன்பங்களை எப்போதும் ருசிக்கத் துடிக்கும் ஜனங்களிடமும் ஒருவன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தால் அவனது பக்தி கண்டிப்பாக அழிந்தே போகும். இந்த மூன்று விதங்களான

ஜனங்களுக்கு அறிவுரைகளையோ மற்றும் எதையுமே கொடுக்கலாகாது. அப்படிக் கொடுத்தால் அது அபராதமாகிவிடும். ஏனென்றால், நம்பிக்கை இல்லாத ஒருவரிடம் ஹரிநாமத்தின் மகிமைகளைப் பற்றிக் கூறினால் அது நாம அபராதமாகி விடுகிறது என்று சாஸ்திரம் கூறுகிறது.

மேலும் ஒரு பக்தன் அவர்களிடமிருந்து முக்தியடையும் விதிமுறைகளையோ, உலக சம்பந்தமான இன்பங்களை அடையும் ரகசியங்களையோ கேட்டால், அது அவனைக் கீழே இழுத்து அவர்களிடமே சேர்த்து விடும். அவர்களுக்கு கிருஷ்ண பஜனை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதையும் கூடச் சொல்லக் கூடாது. மேலும் பக்தியைப் பற்றிய அந்தரங்கமான தத்துவங்களை அவர்கள் வாயிலிருந்து ஒருபோதும் கேட்கலாகாது. அவர்கள் தொட்ட உணவுகளை ஒருபோதும் உண்ணவும் கூடாது. அவர்கள் சமைத்த உணவை உண்டால், முக்தி மற்றும் உலக இன்ப சாரமான அவர்களது எண்ணங்கள் நம் இதயத்திலும் வந்து புகுந்து விடும்! இதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

> விஷயீர அன்ன கய்லே மலின ஹய மன
> மலின மன ஹய்லே நஹே க்ருஷ்ணேர ஸ்மரணா
> (ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம் - அந்திய லீலை 6.279)

"லௌகீய சம்பந்தமுடையவன் அளித்த உணவை ஒரு பக்தன் உண்டால், அந்த பக்தனின் மனம் கெட்டே போய் விடும். அவ்வாறு கெட்டுப் போன மனத்தினால் அந்த பக்தன் ஒருபோதும் ஸ்ரீகிருஷ்ணரை பக்தியுடன் நினைக்க முடியாது."

மேலும், அவ்வாறு உலக இன்பங்களை ருசிக்கத் துடிப்பவர்களுக்கு உண்ண எதையும் கொடுக்கலாகாது. அவர்களுக்கு ஒரு பக்தன் உணவு அளித்தாலோ, அல்லது அவர்கள் அளித்த உணவை ஒரு பக்தன் உண்டாலோ, அவர்களிடம் ஈடுபாடும் தொடர்பும் உண்டாகி விடும்! ஒரு பக்தன், தன்னைப் போல் பக்தியில் ஆர்வமுள்ள பக்தர்களுடன் மட்டுமே பரஸ்பரமான தொடர்பு கொண்டு பக்தியை வளர்க்க வேண்டும். அவர்களுடன் நெருங்கி, தன் பக்தி அனுபவங்களைப் பகிர்ந்தும், சுத்த பக்தர்களின் அந்தரங்க பக்தி தத்துவங்களை அறிந்தும், பிரசாதங்களை வழங்கியும், அவர்கள் கொடுக்கும் பிரசாதங்களை மகிழ்வுடன் உண்டும் இருந்தால் பக்தி மேன்மேலும் வளரும். பக்தியைத் தவிர வேறு எதிலும் விருப்பமுள்ளவர்களிடம் ஒருபோதும் சேரலாகாது.

# சுலோகம் ஐந்து

## மூன்று தரமான பக்தர்களும் அவர்களுக்கு சேவையும்

கிருஷ்ணேதி யஸ்யகிரி தம் மனஸாத்ரியெத
திக் ஷாஸ்தி செத் ப்ரணாதிபிஸ் ச பஜந்தமீஸம்
ஸீஸ் ரூஷயா பஜன - விஞ்ஞம் அனன்யம் அன்ய
நிந்தாதி சூன்ய ஹ்ருதம் ஈப்சித்த சங்க லப்யா

### மொழி பெயர்ப்பு

ஆத்ரியெத - ஒருவன் மரியாதை அளிக்க வேண்டும்; மனஸா - மனதால், தம் - அந்த நபர்(ஆரம்ப பக்தன்); யஸ்ய கிரி - எவருடைய பேச்சினால்; இதி - இப்படி(தோன்றுகிறது); கிருஷ்ணா - ஸ்ரீ கிருஷ்ணரின் ஒரு நாமம்; ப்ரணாதி பிஹி - நமஸ்காரம் செலுத்தி (மரியாதை அளிக்க வேண்டும்); ச - மற்றும்; பஜந்தம் - ஒரு மத்திய நிலையிலுள்ள பக்தன் உண்மைக்கும் மாயைக்கும் உள்ள வித்தியாசங்களைச் சரியாக அறிந்திருப்பதால் வைஷ்ணவ சம்பிரதாயத்து முறைகளுடன் பஜனை செய்வான்; ஈஸம் - ஸ்ரீ பகவான்; செத் - அப்படியானால்; அஸ்தி - அவனிடம் உள்ளது; திக்ஷா - தகுந்த குருவிடம் முறைப்படி தீக் ஷை எடுத்து; (மேலும்) லப்த்யா - அவ்வாறு கிடைக்கப் பெற்று; ஈப்சித்த சங்க - விருப்பப் படும் பக்த சேர்க்கை( ஸ்ரீ ராதா கிருஷ்ண பக்தியை தன் இதயத்தில் கொண்டுள்ள பக்தர்களின் நெருக்கமான நட்பு); ஸுஸ்ரூஷயா - எல்லா விதமான சேவைகளுடன்(சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்வது, சம்பந்தமுடன் விசாரிப்பது, வேண்டிய சேவைகளைச் செய்வது போன்றவை); பஜன - விஞ்ஞம் - ஆத்ம சொரூபத்தை உணர்ந்து, எப்போதும் ஸ்ரீ ராதா கிருஷ்ணரின் நித்திய எட்டு நேர லீலைகளை மனதில் எப்போதும் தியானித்துக் கொண்டிருக்கும் மகா பாகவத பக்தன்; அனன்யம் - முழுவதுமாக ஸ்ரீ கிருஷ்ணருக்கு தன்னை அர்ப்பணித்த பக்தன்; அன்ய நிந்தாதி சூனிய ஹ்ருதம் - மற்றவர்களை குறை கூறுதல் போன்ற எந்த விதமான தவறுகளுமே மனதில் வராத சுத்தமான இதயத்தைக் கொண்டுள்ள ஒருவன்.

### பொருள்

ஸ்ரீகிருஷ்ணரின் நாமத்தை ஒரே ஒரு தடவை தன் சிந்தனையில் கொண்டு, "ஓ கிருஷ்ணா!" என்று கூப்பிடுபவன் ஆரம்ப நிலையிலுள்ள பக்தன்(கனிஷ்த அதிகாரி) ஆவான். அந்த பக்தனை தன் குடும்பத்தில் ஒருவனாக நினைத்து மனதால் சாதாரணமான வணக்கத்தைச் செலுத்த வேண்டும். தீட்சையின் பொருளையும் மகிமைகளையும் அறிந்து, தகுந்த குருவிடம் சென்று முறையாக தீட்சை பெற்று, வைஷ்ணவ கோட்பாடுகளுடன் முறையாக பகவானுக்கு பஜனை செய்யும் ஒருவன் மத்திய நிலையிலுள்ள பக்தன் (மத்தியம அதிகாரி) ஆவான். உண்மைக்கும் மாயைக்கும் உள்ள வித்தியாசங்களை நன்றாக அறிந்த அந்த பக்தனுக்கு நமஸ்காரம் போன்ற மரியாதைகளை அளித்து உபசரிக்க வேண்டும். ஆனால், ஸ்ரீமத் பாகவதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பஜன விஞ்ஞானத்தில் முதிர்ந்து, மற்ற அனைத்து வைஷ்ணவ சாஸ்திரங்களிலும் தேர்ச்சி பெற்று, எப்போதும் இடைவிடாமல் ஸ்ரீகிருஷ்ணருக்கு பஜனை செய்வதில் மட்டுமே ஈடுபட்டிருக்கும் பக்தனோ மிக உயர்ந்த நிலையிலுள்ள பக்தன் (உத்தம அதிகாரி) அல்லது மகா பாகவதர் ஆகிறார். அப்படிப் பட்ட பக்தர், எப்போதுமே ஸ்ரீகிருஷ்ண சேவையிலேயே முழுவதுமாக மூழ்கியிருப்பதால், மற்றவர்களைக் குறை கூறுவது போன்ற எந்த விதமான குற்றங்களும் தனது இதயத்தில் இல்லாமல், மிகவும் பரிசுத்தமாகவே எப்போதும் இருப்பார். அந்த பக்தர் பஜனையில் தனித் திறமைகளுடன் மிளிர்வது மட்டுமின்றி, ஒவ்வொரு நாளும் எட்டு நேரங்கள் நடைபெறும் ஸ்ரீராதா கிருஷ்ண லீலைகளில் (அஷ்ட காலிய லீலா) மனதால் எப்போதும் சேவை (மானஸ ஸேவா) செய்து கொண்டேயிருப்பார். இப்படி எப்போதுமே ஸ்ரீராதா கிருஷ்ண சேவையில் விதவிதமான பிரிய பாவங்களுடன் எப்போதும் ஈடுபட்டுள்ளதனால், அந்த மகா பாகவத பக்தரின் கால்களில் விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம் (பிரணிபாத) செலுத்தி, அவரிடம் முறையாக விசாரித்து (பரிப்ரஸ்னா) அறிந்து தக்கவாறு வேண்டிய சேவைகளை (ஸேவா) மிகுந்த அன்புடன் அவருக்குச் செய்ய வேண்டும்.

### உபதேச பிரகாஷிகா தீக்கா

இந்த சுலோகம் "சொரூப-சித்த-பக்தி" யைப் பற்றி உபதேசிக்கிறது (ஒரு பக்தன் தன் உடல், மனம், வாக்கு அனைத்தையுமே ஸ்ரீகிருஷ்ணருக்கு மட்டுமே அர்ப்பணித்து, சிரவணம், கீர்த்தனம், ஸ்மரணம் போன்ற பக்தி சாதகத்தின் அங்கங்களைக் கடைப்பிடித்து, எந்த விதமான தடங்கலுமின்றி ஸ்ரீகிருஷ்ணரை மகிழ்விப்பதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு சேவை செய்வதையே சொரூப சித்த பக்தி என்றழைக்கப் படுகிறது.) தகுந்த குருவிடம் முறையாக தீட்சை எடுத்த பக்தனுக்கு எப்போதும் மரியாதையுடன் நமஸ்காரம் செய்ய வேண்டும். இடைவிடாமல் எப்போதும் "ஸ்ரீராதா கிருஷ்ணருக்கு மட்டுமே"

பஜனை செய்து கொண்டு, அஷ்ட காலிய லீலைகளின் மூலம் முறையாக மானஸ சேவைகள் புரிந்து கொண்டிருக்கும் உத்தம பக்தருக்கோ நாம் மிகவும் பிரியத்துடன் முறையாக சேவை செய்ய வேண்டும். அவருடைய தொடர்பு மிகச் சிறந்தது.

இங்கே "ஸ்ரீராதா கிருஷ்ணருக்கு மட்டுமே" என்று குறிப்பிடப்பட்டுள்ளதை மிகவிம் நன்றாகக் கவனிக்க வேண்டும். அதன் அர்த்தம் என்ன? ஸ்ரீலட்சுமி நாராயணருக்கோ, அது போல் ஸ்ரீகிருஷ்ண பகவானின் மற்ற அவதாரங்களுக்கோ தனது பக்தியை சிறிதும் செலுத்தாமல், விரஜாவிலுள்ள ஸ்ரீராதா கிருஷ்ணருக்கு மட்டுமே முழுவதுமாகத் தன்னை அர்ப்பணித்திருக்க வேண்டும். "ஸ்ரீபக்தி ரஸாம்ருத சிந்து" - வில் பகவானின் அனைத்து விதமான அவதாரங்களை வழிபடும் அனைத்து பக்தர்களை விடவும் ஸ்ரீநந்த நந்தன ஸ்ரீகிருஷ்ணரிடம் தங்கள் இதயங்களை முழுவதுமாக பறி கொடுத்த பக்தர்களே மிகவும் சிறந்தவர்கள் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இதற்குக் காரணம், ஸ்ரீலட்சுமி தேவியின் நாயகரான ஸ்ரீநாராயணரால் கூட அவர்களைக் கவர முடிவதில்லை. ஏனென்றால் கிருஷ்ண பக்தர்கள் எப்போதும் மிகவும் உயர்ந்த நிலையான பக்தியில் மட்டுமே ஈடுபட்டு, பக்தி ரசத்தில் இடையின்றி மூழ்கிக் கொண்டிருக்கும் சுத்த பக்தர்களுடன் மட்டுமே தொடர்பு கொண்டு கிருஷ்ண பக்தியை மேன்மேலும் வளர்த்துக் கொண்டேயிருப்பார்கள். சுத்த பக்தர்களின் இதயங்களோ எந்த விதமான ஆசைகளோ, மற்றவர்களிடம் குறை காண்பது போன்ற மனப்பாங்கோ இப்படி எந்த விதமான குறைகளும் இல்லாமல் எப்போதும் பரிசுத்தமாகவே இருக்கும். இப்படிப் பட்ட உத்தம பக்தர்களுடன் கொள்ளும் நெருக்கம் மிகவும் விரும்பத்தக்கது. அவர்களுக்கு மனதால் முழுவதுமாக மதிப்பு செலுத்துவது மட்டுமின்றி, தரையில் விழுந்து நமஸ்காரம் செய்து, வேண்டிய பணிவிடைகளைச் செய்து மிகவும் அன்புடன் சேவை புரிய வேண்டும்.

இந்த சுலோகத்துக்கு இன்னுமொரு விளக்கமும் கொடுக்கலாம். முறையாகத் தகுந்த குருவை அணுகி தீட்சை பெற்று ஸ்ரீகிருஷ்ண நாமத்தை ஜெபிக்கும் பக்தனுக்கு மனதால் நமஸ்காரம் செலுத்த வேண்டும். தகுந்த குருவிடம் தீட்சை பெற்று, சம்பந்த ஞானத்தைப் பெற்று சுத்தமாக பஜனை செய்து வரும் பக்தனுக்கு முழுமையாக நமஸ்காரம் செலுத்த வேண்டும். ஆனால் சிறப்பான பக்தியுடன், மற்றவர்களைக் குறை கூறுவது போன்ற எந்த விதமான குற்றங்களும் இதயத்தில் இல்லாமல், ஸ்ரீராதா கிருஷ்ணரைத் தவிர வேறு எவரையுமே நினையாமல், மனதால் எப்போதும் அஷ்ட-காலிய லீலைகளில் மூழ்கி அவர்களுக்கு சதா சேவை செய்யும் உத்தம பக்தர்களே எல்லோரை விடவும் மிகவும் சிறந்தவர்கள். அவர்கள் ஸ்ரீராதா கிருஷ்ணரிடம் விதவிதமான பக்தி அபிமானங்களுடன் பிரியமுடன் சேவை செய்பவர்கள். அவர்களுக்கு எல்லா விதமான

மரியாதைகளையும் அளித்து, சாஷ்டாங்க நமஸ்காரங்களை (பிரணி பாத) யும் செலுத்தி, அன்புடன் விசாரித்து (பரிப்ரஸ்ன) வேண்டிய பணிவிடைகளைச் (ஸேவ) செய்ய வேண்டும். இவ்வாறு ஒரு பக்தன் வைஷ்ணவர்களின் இந்த மூன்று விதமான பக்தி நிலைகளைப் புரிந்து அனுசரிக்க வேண்டும்.

ஶ்ரீல ரூப கோஸ்வாமியின் இந்த மூல சுலோகத்தில் "முதலாக" என்பதைக் குறிக்கும் "ஆதி" என்ற வார்த்தையை "நிந்த" என்ற வார்த்தைக்குப் பின்னால் உபயோகித்துள்ளார். "நிந்த" என்றால் குற்றம் காண்பது என்று பொருள். உண்மையில் இந்த வார்த்தைக்கு, மற்றவர்களிடம் குறை காணத் தூண்டும் "பொறாமை", "துடிப்பு", போன்ற மூலக் குறைகளையும் சேர்த்தே பொருள் கொள்ள வேண்டும். ஶ்ரீமத் பாகவதத்தில் (3.25.24) கீழ் வருமாறு கபில தேவர் கூறுகிறார்:

த எதெ சாதவஹ சாத்வி
ஸர்வ சங்க விவர்ஜிதாஹ
சங்கஸ் தெஸ்வ் அத தே ப்ரார்த்யஹ
சங்க தோஷ ஹரா ஹி தெ

"ஓ, சாத்வி (புனிதமான பெண்ணே), ஒரு சாதகனுக்கு வேண்டிய ஒரே நட்பு, புனிதமான இதயம் கொண்ட சாதுவின் நெருக்கம் மட்டுமே. ஏனென்றால் சாது எப்போதும் கெட்ட தொடர்புகளை ஒதுக்கி சுத்தமான மனதுடன் இருப்பவர். அப்படிப் பட்ட சாதுக்களுடன் நட்பு கிடைத்தால், முன்னர் ஏதாவது கெட்ட தொடர்புகளினால் படிந்த அழுக்குகள் அனைத்தும் கூட தானாகவே மறைந்து விடும்."

## பீயூஷ வர்ஷிணி தீகா

இந்த சுலோகத்தின் படி, ஒரு சாதகன் மத்தியம அதிகாரி நிலையில் இருக்கும் வரை அவன் மற்ற எல்லா பக்தர்களுக்கும் சேவை செய்ய வேண்டும். மிகவும் உச்சமான நிலையில் இருக்கும் உத்தம அதிகாரியோ எல்லோரையுமே ஒன்றாகப் பார்க்கிறார். அவர், பக்தனுக்கும் பக்தன் அல்லாதவனுக்குமிடையிலுள்ள வித்தியாசங்கள் எதையுமே பார்ப்பதில்லை. இடை நிலையிலிருக்கும் மத்தியம அதிகாரி மிகவும் சிரத்தையுடன் பஜனையில் ஈடுபடுகிறார். இங்கே ஒரு மத்தியம அதிகாரி உயர்ந்த ஸ்தானத்திலிருக்கும் பக்தர்களிடம் எவ்வாறு நடக்க வேண்டுமென்பதையே இந்த ஐந்தாம் சுலோகம் கூறுகிறது.

ஒரு சாதகன் பக்தரல்லாதவர்களையும், இந்திரிய சுகங்களை விரும்பி அனுபவிப்பவர்களையும், பெண்களிடம் ஈடுபாடு உள்ளவர்களையும் விலக்கினால் அவர்களுடைய குறைகளும் கெட்ட நடத்தைகளும் தன்னைத் தொடாது. மேலும் ஆரம்ப பக்தி

நிலையிலிருக்கும் கனிஷ்த அதிகாரிகளுக்கு சம்பந்த தத்துவத்தைப் பற்றி அவ்வளவாகத் தெரியாததால், மத்தியம அதிகாரிகள் அவர்களிடம் கருணை காட்ட வேண்டும்.

ஒரு கனிஷ்த அதிகாரி பக்தன் ஸ்ரீகிருஷ்ண நாமத்தை உச்சரித்தால் அவனுக்கு மத்தியம அதிகாரி, தன் மனதினால் நமஸ்காரம் செய்ய வேண்டும். மேலும், ஒரு கனிஷ்த அதிகாரி பக்தன் தீட்சை பெற்று ஹரி பஜனையில் ஈடுபட்டால், மத்யம அதிகாரி அந்த பக்தனுக்கு நமஸ்காரம் செலுத்த வேண்டும். ஆனால் எவரிடமும் குறை காணாத, சுத்தமான இதயமுள்ள மகா பாகவதரான (உத்தம அதிகாரியான) வைஷ்ணவருக்கு, முழு மரியாதைகளைக் கொடுத்து பிரியமுடன் சேவை செய்ய வேண்டும். இந்த விதமான சேவைகளே ஒரு பக்தனின் பக்தியை மேன் மேலும் வளர்த்து சுத்தமான பக்திக்கு கொண்டு செல்கிறது.

**விளக்கவுரை**

"பக்தி சந்தர்பா" (868) என்ற நூலில் ஸ்ரீ ஜீவ கோஸ்வாமி வைஷ்ணவ தீட்சையைப் பற்றி எழுதியுள்ளார்:

திவ்யம் ஞானம் யதோ தத்யாத்
குர்யாத் பாபஸ்ய சங்ஷயம்
தஸ்மாத் தீக் ஷேதி ஸா ப்ரோக்தா
தேஸிகைஸ் தத்வ கோவிதை

"எந்த ஒரு செய்முறை, திவ்ய ஞானத்தை வழங்கி உலக இன்பங்களை அனுபவிக்கத் தூண்டி பாவங்களைப் புரிய வைக்கும் ஆசைகளை ஒழிக்கிறதோ, அதையே முற்றுமறிந்த மகான்கள் தீட்சை என்று அழைக்கின்றனர்."

எந்த ஒரு பக்தன் ஸ்ரீகிருஷ்ணருக்கும் அவரது நாமத்துக்கும் வித்தியாசம் எதுவுமேயில்லை என்பதைப் புரிந்து, அதன் ஆன்மீக மகத்துவத்தையும் அறிந்து, ஸ்ரீஹரி நாமத்தையே தஞ்சம் என்று சரணடைந்து ஜெபிக்கிறானோ, அந்த பக்தனுக்கு அமைதியாக மனதால் மரியாதை செலுத்த வேண்டும். ஒரு பக்தன் தீட்சை எடுக்கும் போது கொடுக்கப்படும் மந்திரங்கள் முழுவதும் ஹரி நாமங்களால் ஆனவையே. அவை அந்த பக்தனுக்கு ஸ்ரீபகவானிடமுள்ள சம்பந்தங்களைக் குறிப்பாக விளக்கும் ஞானங்களையும் கொண்டவை. ஹரிநாமத்தின் கீழ் சரணடையாமல் எவரொருவரும் ஹரி ஜனமாகி ஸ்ரீகிருஷ்ணரின் குடும்பத்தில் அங்கத்தினராக முடியாது. ஸ்ரீஹரி நாமத்தின் மேல் ஒரு வைஷ்ணவருக்கு எவ்வளவு திடமான நம்பிக்கை உள்ளதோ, அதைப் பொறுத்தே அவர்களது நிலைகளை ஸ்ரீசைதன்ய மகாபிரபு வகுத்தார். ஒருவன் ஹரி நாமத்தை ஒரே ஒரு முறை உச்சரித்தால் அவன் கனிஷ்த வைஷ்ணவர் ஆகிறான். புனிதமான ஹரி நாமத்தை

இடைவிடாமல் ஜெபிக்கும் பக்தன் சிறந்த மத்தியம வைஷ்ணவர் ஆகிறான். ஆனால் இவர்கள் எல்லோரையும் விட மிக உயர்ந்த உத்தம அல்லது மகா பாகவத வைஷ்ணவரை எவரொருவர் பார்க்கிறாரோ அவர் தானாகவே ஸ்ரீஹரி நாமத்தை ஜெபிக்க ஆரம்பித்து விடுவார்!

கனிஷ்த வைஷ்ணவருக்கு ஒரு சாதகன் தன் மனதால் மரியாதை செலுத்த வேண்டும். மத்தியம வைஷ்ணவருக்கு நமஸ்காரம் போன்றவைகளைச் செலுத்தி மரியாதை அளிக்க வேண்டும். ஆனால் உத்தம வைஷ்ணவரோ ஸ்ரீராதா கிருஷ்ணருக்கு தனிப்பட்ட சம்பந்தத்துடன் நெருங்கி சேவை செய்பவர். அவருக்கு எல்லாவித மரியாதைகளையும், பேரன்புடன் நிறைந்த சேவைகளையும் செய்ய வேண்டும்.

(1) மகா பாகவத பக்தர் எல்லா ஜீவன்களையும் மற்றும் அனைத்தையுமே ஸ்ரீகிருஷ்ணருக்கு நேரடியாக சம்பந்தப் பட்டதாக வித்தியாசம் எதுவுமேயின்றி சரி சமமாகக் காண்கிறார். மேலும் அவர் மத்தியம அதிகாரி பக்தர்களைப் போல் பஜனையை செவ்வனே புரிகிறார். கனிஷ்த அதிகாரி பக்தர்களைப் போன்று ஹரி நாமத்தை ஜெபம் செய்வதிலும் ஈடுபடுகிறார்.

(2) மத்தியம அதிகாரி பக்தர்களுக்கு ஸ்ரீகிருஷ்ணரிடம் பிரேம பக்தி உள்ளது. அவர்கள் மூன்று விதமான வைஷ்ணவர்களுக்கும் தகுந்தவாறு மரியாதை அளிக்கிறார். உத்தம வைஷ்ணவர்களுக்கு அவர்கள் சேவை செய்கிறார்கள். மத்தியம வைஷ்ணவர்களுக்கு நமஸ்காரம் செய்கிறார்கள். கனிஷ்த வைஷ்ணவர்களுக்கு மனதால் மரியாதை அளிக்கின்றனர். மேலும், ஸ்ரீகிருஷ்ணரை விட்டு விலகும் ஜீவன்களை சிரமமான முயற்சிகளுடன் அவர்களை ஸ்ரீகிருஷ்ணரிடம் இழுத்துக் கொண்டு வருகின்றனர். ஆனால் தன்னுடன் பகை கொள்பவர்களை விட்டு விலகி விடுகிறார்கள். அவர்கள் உத்தம வைஷ்ணவர்களைப் போல் எல்லா ஜீவன்களையும் வித்தியாசம் எதுவுமின்றி ஒன்றாகக் காண்பதில்லை. அவர்கள் உத்தம வைஷ்ணவர்களின் குண நலன்களைப் போலித்தனமாக மேற் கொள்ள நினைத்தால் மிகவும் வேகமாக கீழே விழுந்து விடுவார்கள்.

(3) கனிஷ்த அதிகாரி பக்தன் ஸ்ரீஹரி நாமத்தின் கீழ் முழு சரணாகதி அடைந்தவன். ஸ்ரீஹரி நாமமே அனைத்து விதமான ஆன்மீக பலன்களையும் அளிக்கும் என்பதில் அவனுக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. ஆனால் அவர்களுக்கு, இதற்கு மேலாக மத்தியம அதிகாரி என்ற நிலையும் உள்ளது என்பது புரியாது. தான் மேன்மேலும் பக்தி நிலையில் வளர்ந்து அடுத்த நிலையான மத்தியம அதிகாரி நிலையை அடைய வேண்டுமென்றும் அவர்கள் நினைப்பதில்லை. சில சமயங்களில் தங்களை குருவென்று கூட

நினைத்து கீழே விழுவார்கள்! இவர்கள் மிகுந்த கவனத்துடன் உத்தம பக்தர்களுக்கு மரியாதைகள் செலுத்தி, ஶ்ரீஹரி நாமத்தின் கீழ் முழு சரணாகதி அடைய வேண்டும்.

# சுலோகம் ஆறு

## வைஷ்ணவர்களை பூத உலகக் கண்ணால் பார்க்கக் கூடாது

த்ருஷ்டை ஸ்வபாவ ஜனிதைர் வபுஷஸ் ச தோஷைர்
ந ப்ராக்ருதாத்வம் இஹ பக்த ஜனஸ்ய பஸ்யேத்
கங்காம்பஸாம் ந கலு புத்புத பேன பங்கைர்
ப்ரம்ம திரவத்வம் அபகச்சதி நீர தர்மை

### மொழி பெயர்ப்பு

ந பஸ்யேத் - ஒரு பக்தனை ஒருபோதும் சாதாரண மனிதன் என்று நினைக்கக் கூடாது; ப்ராக்ருதாத்வம் த்ருஷ்டை - பூவுலக பூதக் கண்களால் பார்த்தல்; ஸ்வபாவ - ஜனிதை - கீழ்ப் பிறப்பு, கொடுமை, மயக்கம் இவ்வாறான இயற்கையாகத் தோன்றும் குறைகளால்; ச - மேலும்; தோஷை - குற்றங்களின் காரணமாக; வபுஷஹ - அழகின்மை, நோய், உருக்குலைந்த தோற்றம் போன்ற உடல் குற்றங்களால்; பக்த ஜனஸ்ய - பகவானின் பக்தர்கள்; இஹா - உலகத்தில் இருக்கிறார்கள்; ப்ரம்ம - திரவத்தம் - உருகிய திரவத்தைப் போல்; கங்காம்பஸாம் - கங்கையின் நீரால்; ந கலு அபகச்சதி - ஒருபோதும் இழப்பதில்லை; புத்புத பேனபங்கை - நுரை, மண் போன்றவை இருப்பதால்; நீர தரமை - இயற்கையினாலேயே நீரின் தன்மையுள்ளது.

### பொருள்

இந்தப் பூவுலகத்தில் வாழும் பக்தர்களை ஒருபோதும் ஊனக் கண்களுடன் பார்க்கக் கூடாது. அதாவது அவர்களை இந்த உலகில் கட்டுண்ட சாதாரண ஜீவாத்மாக்களாகக் கருதக் கூடாது. கீழ்ப் பிறப்பு, கொடுமை, மயக்கம் இவைகளுடன் தோன்றியோ, அழகற்ற உடல்களுடன் தோற்றம் கொண்டோ, நோய் மற்றும் உருக் குலைந்து ஒரு பக்தன் காணப்பட்டாலோ, அதை எவ்வாறு கங்கையில் குமிழிகள், நுரை, மற்றும் மணல் எல்லாம் இயற்கையில் காணப்பட்டாலும் அதன் புனிதத் தன்மையையே நாம் காண்பது போல்தான் அந்த பக்தனையும் காண வேண்டும். தன் ஆத்ம

சொரூபத்தை உணர்ந்த வைஷ்ணவர்கள் பூதவுலகுக்கு அப்பாலான ஆன்மீக உலகத்தில் எப்போதும் இருப்பதால் அவர்களின் மேல் இயற்கைக் குற்றங்களைக் கொண்டு பார்க்கலாகாது.

## உபதேச பிரகாஷிகா தீக்கா

இந்தப் பூவுலகில் சுத்த பக்தர்கள் வரும் போது, பூலோக இயற்கையின் காரணமாக அவர்களது பிறப்பிலோ உடலிலோ குறைகள் இருக்கலாம். ஆனாலும் அவர்களை பூதவுலகில் கட்டுண்ட சாதாரண ஜீவன்கள் என்று எண்ணிவிடலாகாது. அவர்களிடம் கொடூரம், கோபம், ஆசை போன்ற குற்றங்களும் உடம்பில் அழுக்கு, அருவருக்கும் தோற்றம், நோய், வயது இவ்வாறான குற்றங்களும் காணப்படலாம். ஆனால் இவற்றை வைத்து ஒருபோதும் அந்தப் பக்தர்களைப் பார்க்கலாகாது. அவர்களது ஆன்மீக உடம்பில் இவ்வாறான எந்த விதமான குறைகளும் இருக்க முடியாது. எனவே நாம் நம் ஊனக் கண்களால் அவர்களைப் பார்த்துக் கணிப்பது அபராதமாகும். இதை விளக்க கங்கை நீர் உதாரணமாகக் கொடுக்கப் பட்டுள்ளது.

## பீயூஷ வர்ஷிணி விருத்தி

இந்த ஆறாவது சுலோகத்தில் கொடுக்கப்பட்டுள்ள உபதேசத்தின் படி, பக்தர்களை நாம் ஒருபோதும் நம் ஊனக் கண்களால் வெறும் சாதாரண ஜீவன்களாகக் காணக் கூடாது. சுத்த பக்தர்கள் ஒருபோதும் கெட்டவர்களிடம் சேருவதையோ, புனிதமான ஹரி நாமத்திற்கு அபசாரங்களையோ செய்ய மாட்டார்கள். ஒருவேளை அவர்களது வெளிக் குணங்களிலும் வெளித் தோற்றங்களிலும் குறைகள் இருக்கலாம். தூய்மையற்ற உடல், உருக்குலைந்த தேகம், அழகின்மை, வயதான தோற்றம் இவையெல்லாம் உடம்பின் குறைகள். கீழ்ச் சாதியில் பிறத்தல், கொடூரம், மயக்கம் இப்படியான குறைகள் ஒருவரது சுபாவத்தில் தோன்றும் குறைகள். கங்கை நதியில் அளவில்லா நீர்க் குமிழிகளும், நுரைகளும், மணல்களும் நிறைந்து நீர் ஓடினாலும் அதன் புனிதத் தன்மை குறையவே குறையாது.

அது போல், தங்கள் நிரந்தரமான பரம சொரூபத்தை உணர்ந்த வைஷ்ணவர்கள் ஒருபோதும் இந்தப் பூத உலக சம்பந்தமான பிறப்பு, முதுமை, இறப்புகளினால் ஒருபோதும் பாதிக்கப் படமாட்டார்கள். எனவே இவ்வாறாக வெளித் தோற்றத்தில் குறைகள் உள்ள வைஷ்ணவர்கள் பஜனை செய்ய ஆவல் கொள்ளும் போது ஒருபோதும் அவர்களுக்கு மரியாதை அளிக்காமல் இருக்கலாகாது. அப்படிப்பட்ட வைஷ்ணவருக்கு மரியாதை அளிக்காவிட்டால் அது ஒருவனை அபராதியாக்கி விடும்!

## விளக்கவுரை

சுத்த பக்தர்களை, அவர்களது வெளித் தோற்றத்தையும், உடம்பின் குறைகளையும், அவர்களுடைய வெளி சுபாவங்களையும் வைத்து ஒருபோதும் கணிக்கலாகாது. நீர்க்குமிழிகள், நுரைகள், அழுக்கு மண் இவையனைத்தும் உடைய கங்கை நதி எப்போதும் புனிதமாகவே இருப்பது போல் சுத்த பக்தர்களும் எப்போதும் புனிதமானவர்களே. வெளித் தோற்றத்தாலும் வெளிக் குணங்களாலும் அவர்களைக் கணிப்பது அபராதமாகும். இதையே ஸ்ரீ கிருஷ்ணரும் பகவத் கீதையில் (9.30-31) கூறி எச்சரிக்கிறார்:

அபி செத் சுதுராசாரோ பஜதே மாம் அனன்ய பாக்
சாதுர் ஏவ ஸ மந்தவ்யஹ சம்யக் வியவசிதோ ஹி ஸஹ
க் ஷிப்ரம் பவதி தர்மாத்மா ஸாஸ்வச் சாந்திம் நிகச்சதி
கௌந்தேய ப்ரதி ஞானிஹி நமே பக்தஹ் ப்ரணஸ்யதி

"மிகவும் கெட்ட பழக்கங்கள் உள்ள ஒருவன் கூட, அவன் உண்மையிலேயே என்னிடம் முழு மனதுடன் பக்தி செலுத்துவானானால், அவனை ஒரு சாது என்றே கருத வேண்டும். ஏனென்றால் அவனது புத்தி என் மேல் பக்தியில் செலுத்தப் பட்டுள்ளது. அவன் வெகு சீக்கிரமே நல்லவனாக ஆகி நிரந்தரமான அமைதியை அடைவான். குந்தியின் மைந்தனே! என் பக்தன் ஒருபோதும் அழிய மாட்டான் என்பதை நீ பறை சாற்றுவாயாக!"

கிருஷ்ண பக்தன் ஒருவன் பிராமண குடும்பத்திலோ, அல்லது கோஸ்வாமிகள் உதித்த பரம்பரையிலோ பிறக்காமலிருக்கலாம். ஆனால் அந்த பக்தனை "கோஸ்வாமி" என்றோ, "பிரபு" என்றோ கருதாமல் இருப்பதை ஊனக்கண் பார்வை என்றே கொள்ள வேண்டும். ஒரு பக்தன், கோஸ்வாமி பரம்பரையிலோ அல்லது வேறு எந்த சாதியில் பிறந்திருந்தாலும் அவரை ஒரே விதமாகவே பார்க்க வேண்டும். பிறப்பைக் கொண்டு ஒரு பக்தனுக்கு வித்தியாசங்களைச் சுமத்துதல் அபராதமாகும். ஆனால் ஒரு பக்தன் தன் பக்தியில் மேன் நிலையை அடைந்த பின்னர் தகாத உலக சம்பந்த செயல்களைப் புரிந்தால் அவன் கண்டிப்பாக பக்தி பாதையிலிருந்து கீழே தான் விழுவான். அப்படி கீழே விழும் பக்தனிடம் தொடர்பு கொண்டுள்ள மற்ற பக்தர்களுடைய பக்தியும் அழிந்து போகும்.

சிலர் தாங்கள் பிராமண குலத்திலோ அல்லது மிகவும் உயர்ந்த குடும்பங்களிலோ பிறந்திருப்பது பற்றி மமதை கொள்கின்றனர். அவர்களுக்கு, பக்தியில் பழுத்த சித்த பக்தர்களின் மாசற்ற குண நலன்கள், மற்றும் அவர்களது மிக உயர்ந்த ஆன்மீக எண்ணங்கள் எதுவுமே கிட்டாமல் போய் விடும்.

இந்தக் காரணத்தால் அவர்கள் பல வகைகளில் வைஷ்ணவர்களை அவமதித்து, வைஷ்ணவர்களின் பாதங்களுக்கு எதிராக வைஷ்ணவ அபராதிகளாகி விடுகின்றனர். எனவே இந்த விஷயத்தில் பக்தி சாதகர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

# சுலோகம் ஏழு

## ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களையும் லீலைகளையும் பஜனை செய்தல்

ஸ்யாத் க்ருஷ்ண நாம சரிதாதி ஸிதாபி அவித்யா
பித்தோ பதப்த ரஸனஸ்ய ந ரோசிகா னு
கிந்த்வ் ஆதராத் அனுதினம் கலு ஸைவ ஜுஸ்தா
ஸ்வாத்வீ க்ரமாத் பவதி தத் கத மூல ஹந்த்ரீ

### மொழி பெயர்ப்பு

நு - ஐயகோ!; ஸிதா அபி - மிகுந்த சுவையுடைய சீனி மிட்டாய் கூட; க்ருஷ்ண நாம சரிதாதி - ஸ்ரீ கிருஷ்ணரின் நாமம், ரூபம், குணங்கள் மற்றும் லீலைகளால்; ந ஸ்யாத் - இல்லை; ரோசிகா - சுவையுள்ள; ரஸனஸ்ய - நாக்குக்கு; உபதப்த - துன்புறுத்தும்; பித்தா - மஞ்சள் காமாலையால்; அவித்யா - அறியாமையால்; கிந்து - ஆனால்; கலு - நிச்சயமாக; ஸா ஏவ - கிருஷ்ணரின் நாமங்கள், லீலைகள் போன்ற சீனி மிட்டாய்; ஜுஸ்தா - மருந்தாகக் கொள்ளும் போது; அனுதினம் - எப்போதும்; ஆதராத் - நம்பிக்கையும் மரியாதையுடனும்; க்ரமாத் - பின்னர் மெதுவாக; பவதி - அது ஆகிறது; ஸ்வாத்வீ - மிகவும் ருசியான; ஹந்த்ரீ - அழிக்கிறது; மூல - வேருக்கு; தத் கதா - கிருஷ்ணருக்குப் புறம்பாக இங்கு பூவுலகவில் வந்து உலக இன்பங்ககளை சுவைக்கின்ற நோய்.

### பொருள்

ஐயகோ! அவித்யா என்ற மஞ்சள் காமாலை நோய் பிடித்தவர்களின் நாக்குகளுக்கு, இனிமையினும் இனிமையான சீனி மிட்டாய் போன்ற ஸ்ரீ கிருஷ்ணரின் அமிர்தமான நாமங்கள், ரூபங்கள், கல்யாண குண நலன்கள் மற்றும் அவரது லீலைகள் எங்கே இனிக்கப் போகிறது? (ஜீவன்கள், கணிக்க முடியாத காலங்களுக்கு முன்பாகவே ஸ்ரீ கிருஷ்ணருக்கு புறமுதுகு காட்டி விட்டு இந்த பூவுலகில் மாயையில் சிக்கி தவிக்கும் அறியாமையையே மஞ்சள் காமாலை என்று நோய்க்கு ஒப்பிடப் பட்டுள்ளது). மாறாக அவை அந்த நாக்குகளுக்குக் கசப்பாகவே இருக்கும். ஆனால் ஒருவன் முழு நம்பிக்கையுடன் தவறாமல் இந்த சீனி மிட்டாய் போன்ற ஹரி நாம ஜெபம், ஸ்ரீ கிருஷ்ணரின் குணங்கள், ரூபங்கள், லீலைகள்

அனைத்தையும் கேட்டல் போன்றவைகளைத் தவறாமல் உண்டால், அது மூல நோயான மஞ்சள் காமாலையை, அதாவது ஸ்ரீ கிருஷ்ணருக்குப் புறம்பான போக்கை, மாற்றி மெதுவாக அதன் ருசியைத் தெரிய வைக்கும். அதாவது அவன் தானாகவே ஸ்ரீ கிருஷ்ணரிடம் பக்தி கொண்டு விடுவான்.

## உபதேச பிரகாஸிகா தீக்கா

பக்தர்கள் தங்கள் பக்தி சாதகங்களில் ஏதாவது தடங்கல்கள் வந்து அவை பக்திக்கு முட்டுக் கட்டை போடும் போது பக்தர்களின் மனங்களில் அமைதியின்மையும் குழப்பமும் உண்டாகின்றன. இதன் விளைவால் அவர்களுக்கு பகவானின் நாமம் போன்றவைகளில் ஆழ்ந்த ருசி கிடைப்பதில்லை. ஆனாலும் அவர்கள் ஹரி நாம பஜனையை திடத்துடன் எந்த விதமான குறைவுமில்லாமல் நடத்த வேண்டும். கணக்கிட முடியாத காலங்களுக்கு முன்னால் ஜீவாத்மாக்கள் ஸ்ரீகிருஷ்ணரை விட்டு விலகி பூதவுலகில் வந்து தவிப்பதையே அவித்யா அல்லது அறியாமை என்று இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சுலோகத்தில் அப்படிப்பட்ட அவித்யாவைத்தான் மஞ்சள் காமாலைக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. ஒருவனுக்கு மஞ்சள் காமாலை நோய் பிடித்தால் அவனது நாக்கின் ருசி பாதிக்கப்படுகிறது. இனிப்பை உண்டாலும் அது கசப்பாகவே இருக்கும். ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்கள், ரூபங்கள், குணங்கள் மற்றும் லீலைகள் அனைத்தும் இனிமையிலும் இனிமையான சீனி மிட்டாய் போன்று இனித்தாலும், அவித்யாவினால் பாதிக்கப் பட்டவனுக்கு அது இனிப்பதில்லை.

ஆனால், மஞ்சள் காமாலையினால் பீடிக்கப் பட்டவன் சீனி மிட்டாயை தொடர்ந்து சாப்பிட்டானானால், அவனுக்கு அந்த நோயும் குணமாகி, சீனி மிட்டாயியின் இனிப்பையும் அவனால் ருசிக்க முடியும். இதே போல் தான் ஒரு சாதகன், தினமும் தவறாமல் ஸ்ரீ கிருஷ்ண நாம கீர்த்தனங்கள், அவரது அமிர்தமான லீலைகள் முதலான பக்தியின் அங்கங்களைக் கடைப் பிடித்தால், மற்றவர்களைக் குறை கூறுதல் முதலான எல்லா வகையான அனர்த்தங்களும் விலகி, அவனுக்கு ஸ்ரீ நாமத்திலும் ஹரி கதைகளிலும் இயற்கையான பிரியம் ஏற்படும்.

## பீயூஷ வர்ஷிணி விருத்தி

ஸ்ரீஉபதேச அம்ருதத்தின் மூன்றாம் சுலோகத்தில் பக்தியை வளரச் செய்யும் குணங்கள் மற்றும் செயல்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சுலோகத்தில் அந்தக் குணங்களுக்கும் செயல்களுக்கும் அடுத்த படியாக இனி எவ்வாறு ஒரு சாதகன் சம்பந்த ஞானத்துடன் ஸ்ரீ கிருஷ்ண நாமத்தை

ஜெபிப்பது, பாடுவது போன்ற பக்தி சாதகங்களை புரிய வேண்டு மென்ற விதி முறைகளைப் பற்றி விவரிக்கிறது. தவறாமல் ஒருவன் சீனி மிட்டாய் போன்ற ஸ்ரீ கிருஷ்ணரின் நாமம், ரூபம், குணம் மற்றும் அவரது லீலைகளைக் கேட்டும் ஜெபித்தும் வந்தால் அவனது அறியாமை என்ற நோய் அழிந்து விடுகிறது. முழுமையான சித்த மயமான ஸ்ரீ கிருஷ்ணரான சூரியனிலிருந்து வரும் ஒளிக் கிரணத்தின் மிகச் சிறு துணுக்குகளே ஜீவாத்மாக்கள். அவைகளின் இயற்கையான சுபாவம் ஸ்ரீ கிருஷ்ணருக்கு நிரந்தர சேவை செய்வதே! இதை ஒரு ஜீவாத்மா மறக்கும் போது அந்த ஜீவாத்மாவை அறியாமை என்ற நோய் உடனே பிடித்துக் கொள்கிறது. இதன் காரணமாக, ஹரி நாமத்தை ஜெபிப்பது முதலான அனைத்து ஆன்மீக பேரின்பங்களை ருசிக்க இயலாமல் போய் விடுகிறது.

ஆனால் அவனுக்கு சாது, குரு, வைஷ்ணவர்களின் தொடர்பு கிடைத்து விட்டால், பின் அவனுக்கு ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்கள், ரூபங்கள், குணங்கள் மற்றும் அவரது அற்புத லீலைகளை மனதில் நினைக்கும் வாய்ப்பு கிடைப்பதால் படிப்படியாக அவன் தன் ஆத்ம சொரூபத்தைத் திரும்பவும் உணர ஆரம்பிப்பான். பின்னர் அவனது ஆத்ம உணர்வு படிப்படியாக உயர்வதால் தானாகவே அவனுக்கு ஸ்ரீகிருஷ்ண நாமங்களை ஜெபித்தல், கீர்த்தனங்கள் பாடுதல் இப்படிப்பட்ட பக்தி அங்கங்கள் எல்லாவற்றிலும் பிரியம் அதிகரிக்கிறது. அதே சமயத்தில் அவனது அறியாமையும் படிப்படியாக மறைந்து விடுகிறது. சீனி மிட்டாய் உதாரணத்தின் அடைப்படையே இது தான். மஞ்சள் காமாலை நோயில் பாதிக்கப் பட்டவனுடைய நாவுக்கு சீனி மிட்டாய் இனிப்பதில்லை. ஆனால் அதே சீனி மிட்டாயை அவன் தவறாமல் தொடர்ந்து சாப்பிட்டால், அவனது மஞ்சள் காமாலை மறைந்து சீனி மிட்டாய் இப்போது இனிக்க ஆரம்பிக்கும் ! எனவே ஒவ்வொரு சாதகனும் முழு நம்பிக்கையுடனும் மிகுந்த உற்சாகத்துடனும் பொறுமையுடனும் ஸ்ரீகிருஷ்ணரின் நாமங்கள், ரூபம், குணங்கள், லீலைகள் அனைத்தையும் தவறாமல் தொடர்ந்து கேட்டும் ஜெபித்தும் இருக்க வேண்டும்.

## விளக்கவுரை

ஸ்ரீகிருஷ்ணரின் நாமங்கள், ரூபம், குணங்கள் மற்றும் லீலைகள் அனைத்தும் சீனி மிட்டாய்க்கு ஒப்பிடப்பட்டுள்ளது. ஜீவாத்மாவின் அறியாமை மஞ்சள் காமாலை நோய்க்கு ஒப்பிடப்பட்டுள்ளது. கணக்கிட முடியாத காலங்களுக்கு முன்னர், சில ஜீவாத்மாக்கள், ஸ்ரீ கிருஷ்ணரின் மேல் அக்கறையில்லாமல் போனதால் அவர்கள் அறியாமையினால் விழுங்கப்பட்டுள்ளனர். மஞ்சள் காமாலையினால் பீடிக்கப்பட்டுள்ள ஒருவனுக்கு சீனி மிட்டாய் எவ்வாறு இனிப்பைத் தருவதில்லையோ அதே போல்,

அறியாமையினால் பீடிக்கப்பட்டுள்ள இந்த ஜீவாத்மாக்களுக்கு அமிர்தத்திலும் இனிய ஸ்ரீகிருஷ்ண நாமங்கள், ரூபம், கல்யாண குணங்கள் மற்றும் அவரது அற்புதமான லீலைகள் எதுவுமே இனிப்பதில்லை.

ஆனால், அவன் இந்த சீனி மிட்டாய் போல் மிகவும் இனிப்பான மருந்தான ஸ்ரீகிருஷ்ண நாமங்கள், ரூபம், குணங்கள், லீலைகள் அனைத்தையும் மிகுந்த மரியாதையுடனும் முழு நம்பிக்கையுடனும் ஏற் கொண்டானானால், அவனுக்கு அவற்றில் பிரியம் படிப் படியாக அதிகமாகி, உலக இன்பத்தை சுவைக்க வேண்டுமென்ற ஆசை மறைந்து விடும். உலக இன்பங்களை சுவைக்க வேண்டுமென்ற ஆசையே ஜீவாத்மாக்களை ஸ்ரீ கிருஷ்ணரிடம் அக்கறையில்லாமலாக்கி தனியே பிரித்து வைப்பதற்கான மூல காரணமாகும்.

பத்ம புராணத்தில் (சுவர்க்க காண்டம் 48.56) உலக சம்பந்தங்களில் மூழ்கியிருப்பவர்கள் புனிதமான நாமங்களை ஜெபிக்கும் போது அவர்களுக்கு உடனடியாக அதன் ருசியோ விளைவோ தெரிவதில்லை என்பதைப் பற்றி உறுதியாகக் கூறப்பட்டுள்ளது.

தச் சத் தேஹ திரவிண ஜனதா லோப பாஷண்ட மத்யே
நிக் ஷிப்தம் ஸ்யான் ந பல ஜனகம் ஸீக்ரம் எவாத்ர விப்ர

"ஓ, பிராமணா! உலக சம்பந்தங்களில் மூழ்கி, தன் உடல், சொத்து, குடும்பம் அனைத்திலும் காமம் கொண்டு கடவுள் நம்பிக்கையற்றவர்களுக்கு பகவானின் நாமத்தை அளித்தால் அது அவர்களுக்குப் பலனான பக்தியை உடனே கொடுப்பதில்லை."

தன் அறியாமையின் ஆக்கிரமிப்பால், ஜீவாத்மா தனது உடல், குடும்பம் மற்றும் சொத்துக்களை மட்டுமே எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கிறது. மேலும் அவைகள் பகவானின் எண்ணம் இல்லாமையால் உண்டாகும் மாய சக்தியே அனைத்தையும் ஆளும் பகவான் என்று தப்பாக எண்ணுகின்றனர்! இவ்வாறு அவன் உண்மையான ஆத்ம சொரூபத்தை அறிய முடியாமல் ஆகிறான். ஸ்ரீகிருஷ்ணரின் நாமத்தின் பெரும் வலிமையினால், ஜீவாத்மாவின் அறியாமையினால் தோன்றும் அகங்காரம் தானாகவே பனி போல் மறைந்து விடும். அப்போது அந்த ஜீவாத்மாவுக்கு ஸ்ரீகிருஷ்ணருக்கு பஜனை செய்வதில் தானாகவே ருசி வந்து விடும்!

# சுலோகம் எட்டு

## பஜனை முறையும் அதை எங்கே செய்ய வேண்டுமென்ற விதிகளும்

தன் நாம ரூப சரித்தாதி சுக்கீர்த்தனானு
ஸ்மிர்த்யோஹ் க்ரமேண ரஸனா மனஸி நியோஜ்ய
திஸ்தன் வ்ரஜே தத் அனுராகி ஜனானுகாமீ
காலம் நயேத் அகிலம் இதி உபதேஸ ஸாரம்

### மொழி பெயர்ப்பு

திஸ்தன் வ்ரஜே - விரஜ பூமியில் வாழ்ந்து கொண்டு; அனுகாமீ - பின்பற்றி; அனராகி ஜனா - எக்காரணமுமின்றி சுயமாக பக்தி கொண்டு நிரந்தரமாக விரஜாவில் வசிக்கும் மக்கள்; தத் - அவரிடம் (ஸ்ரீகிருஷ்ணர்); காலம் நயேத் - ஒருவன் தன் முழு நேரத்தையும் செலுத்த வேண்டும்; நியோஜ்ய - சேவை செய்து; ரஸனா - நாக்கு; மனஸி - மனம்; க்ரமேண - வரிசையில்; சுக்கீர்த்தன அனு ஸ்மிர்த்யோஹ் - கவனத்துடன் பஜனை செய்தும் நினைவில் கொண்டும்; நாம ரூப சர்த்தாதி - நாமங்கள், ரூபங்கள், குணங்கள் மற்றும் லீலைகளுடன்; தத் - அவரின் (ப்ரஜேந்திர நந்தனா ஸ்ரீ கிருஷ்ணா); இதி - இதை மட்டும்; ஸாரம் - சாறு; அகிலம் - எல்லாவற்றிலும்; உபதேஸ - அறிவுரை.

### பொருள்

ஒருவன் ப்ரஜாவில் வசித்துக் கொண்டு, ஸ்ரீகிருஷ்ணரிடம் சுயமான தன்னிச்சையுடன் பரிசுத்தமான பக்தி கொண்டுள்ள விரஜ வாசிகளின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, தனது நாக்கு, மனம் இவற்றை வரிசையுடன் ஸ்ரீகிருஷ்ணரின் நாமங்கள், ரூபம், குணங்கள் மற்றும் லீலைகளில் மட்டுமே இடைவிடாமல் எப்போதும் ஈடுபடுத்த வேண்டும். இதுவே எல்லா உபதேசங்களின் சாரமாகும்.

### உபதேச பிரகாஸிகா தீக்கா

இப்போது, ஒரு சாதகனின் மனதில் இப்படியொரு வினா எழும்பக் கூடும்: "ஸ்ரீகிருஷ்ணரின் நாமங்களை பஜனை செய்தல் முதலான

பக்தி சம்பந்தமான செயல்களை எங்கே எப்படி செய்ய வேண்டும்?" என்ற கேள்வியே அது. எல்லா உபதேசங்களுக்கும் சாரமாக விளங்கும் இந்த சுலோகம் அந்த கேள்விக்குப் பதிலளிப்பதற்காகவே தொகுக்கப்பட்டுள்ளது. "கிருஷ்ணா" என்ற பெயர் "க்ருஷ்" என்ற மூல சொல்லிலிருந்து வந்தது என்பது எல்லோரும் அறிந்ததே. "க்ருஷ்" என்றால் எல்லோரையும் தன்னிடம் கவர்ந்து இழுப்பது என்று பொருள்.

எனவே, கிருஷ்ணா என்றால் அனைத்து உலகங்களிலும் வாழும் எல்லா ஜீவன்களின் இதயங்களையும் கவர்ந்து இழுப்பவர் என்று அர்த்தமாகும். விரஜாவில் அவர் யசோதாவுக்கு அளவில்லாத ஆனந்தத்தைக் கொடுப்பதால் கிருஷ்ணரை யசோதா நந்தனன் என்று அழைப்பர். எனவே, பக்தர்கள் தங்கள் முழு நேரத்தையும் ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்கள், ரூபம், குணங்கள் மற்றும் லீலைகளைப் பற்றிப் பஜனை செய்வதிலேயே தன் நாவையும் மனதையும் உபயோகப் படுத்த வேண்டும். அவர்கள் விரஜாவில் மட்டுமே வசித்து, அங்கு வாழும் உயர்ந்த நிலையிலுள்ள பக்தர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

மேலும், அவர்களை எவ்வாறு பின்பற்ற வேண்டும்? அதற்கு இரண்டு விதமான பக்தி மார்க்கங்கள் உள்ளன:

(1) வைத்தி - அதாவது சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டுள்ள விதி முறைகளைத் தவறாமல் அனுசரித்து பக்தி செலுத்துதல்;

(2) ராகானுகா - அதாவது சுயமான தன்னிச்சையால் பக்தி உண்டாதல்.

இதே போல் பக்தர்களையும் இரண்டு விதங்களாகப் பிரிக்கலாம். வைத்தி (விதி) மார்க்கத்தைக் கடைப்பிடிப்பவர்களை ஒரு பக்கமாகவும், ராகானுகா மார்க்கத்தைப் பின்பற்றுபவர்களை மறு பக்கமாகவும் பிரிக்கலாம். இவை இரண்டிலும் ராகானுகா மார்க்கமே மிகவும் விரும்பத் தக்கது. "தத் அனுராகி ஜனானுகாமி" என்றால் ஸ்ரீ கிருஷ்ணருடன் விரஜாவில் மிகவும் நெருங்கிய பக்தர்களைப் பின்பற்ற வேண்டும் என்று பொருள். நர லீலைகளை அற்புதமாக நிகழ்த்திய ஸ்ரீ விரஜேந்திர நந்தனான ஸ்ரீகிருஷ்ணரின் நித்தியப் பிரியர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும் மாபெரும் ரஸிக குருக்களின் உபதேசங்களைக் கருத்துடன் கடைப் பிடிக்க வேண்டும்.

## பீயூஷ வர்ஷிணீ விருத்தி

இந்த சுலோகம் ஹரி பஜனையை எங்கே எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை விவரிக்கிறது. இடைவிடாமல் தொடர்ந்து ஸ்ரீகிருஷ்ணரின் நாமங்கள், ரூபம், குணங்கள் மற்றும் லீலைகளில் நாவை ஈடுபடுத்தி பஜனைகள் செய்தும், மனதை அவற்றில்

எப்போதும் தியானிக்க வைத்தும் ஒரு பக்தன் படிப்படியாக சாதகம் செய்ய வேண்டும். மேலும் அந்த சாதகங்களை, அவன் விரஜ பூமியில் வாழ்ந்து கொண்டு சதா விரஜ ரஸத்தில் மூழ்கித் திளைத்துக் கொண்டிருக்கும் சுத்த பக்தர்களின் உதவியுடன் புரிய வேண்டும். மேலும், இவ்வாறு மனதால் புரியும் இந்த மானஸ சேவையை ஒருவன் எப்போதும் தொடர்ந்து விரஜாவில் வாழ்ந்து கொண்டிருந்தால் மட்டுமே புரியவும் இயலும்.

**விளக்கவுரை**

இதற்கு முந்திய சுலோகங்களில் உபதேசிக்கப்பட்ட அனைத்து விதிமுறைகளையும் ஒரு சாதகன் முறையோடு பின்பற்றி, ஸ்ரீகிருஷ்ணருக்குச் சம்பந்தமில்லாத எல்லாவற்றையும் அறவே விலக்கி, எப்போதும் ஸ்ரீகிருஷ்ணருடைய நாமங்கள், ரூபம், குணங்கள், லீலைகள் அனைத்தையும் பற்றி பஜனை செய்வதில் மட்டுமே தன் நாக்குகளை முழுவதுமாக ஈடுபடுத்த வேண்டும். அவ்வாறு செய்யும்போது, தன் மனம் பின்னர் படிப்படியாக ஸ்ரீகிருஷ்ணரை எப்போதும் தியானிப்பதில் (ஸ்மரணம்) மெதுவாக ஈடுபடும். பின்னர் அந்த பக்தன் தன் முழு நேரத்தையும் இப்படிப்பட்ட ஆன்மீக செயல்களுக்கே அர்ப்பணித்து, விரஜ ரஸத்தில் சதா மூழ்கித் திளைத்திருக்கும் சுத்த பக்தர்களின் உதவியை நாடி அவர்களது மேற்பார்வைக்குள் நின்று பக்தி சாதகங்களை செய்ய வேண்டும். இதுவே எல்லா உபதேசங்களின் சாரம்.

ஒரு சாதகனின் ஆன்மீக வாழ்வில் "சிரவண தாஸம்" அல்லது கேட்டறிந்து கொள்ளுதல் என்பது முதன் முதலாக வருகிறது. இந்த நிலையில் அவன் ஸ்ரீ கிருஷ்ணரைப் பற்றிய நாமங்கள், உருவம், குணங்கள், லீலைகள் அனைத்தையும் கேட்கிறான். இவ்வாறு அவன் தொடர்ந்து கேட்கும் போது அவன் மேலும் தகுதியடைந்து "வரண தாஸம்" என்ற அடுத்த நிலையை அடைகிறான். இந்த நிலையில், அவன் தான் கேட்டவைகளைப் பற்றிக் கீர்த்தனை செய்ய ஆரம்பிக்கிறான். இவ்வாறு தொடர்ந்து கீர்த்தனைகள் செய்து பின்னர் பகவானின் நினைவில் மூழ்கியிருக்கும் "ஸ்மரண தாஸம்" என்ற நிலையைத் தன் பக்தி மனப்பாங்கின்படி அடைகிறான்.

இந்த "ஸ்மரண"த்தில் ஐந்து நிலைகள் உள்ளன: ஸ்மரணம், தாரணை, தியானம், அனுஸ்மிருத்தி, சமாதி என்பவைகளே அவை. கவனம் குறைந்த, எளிதாக முறிக்கப்படும் தியானமே ஸ்மரணம் என்று அழைக்கப்படுகிறது. அவ்வாறு எளிதில் முறிக்க முடியாத தொடர்ந்த தியானமே தாரணையாகும். முறிக்கவே முடியாமலும் தியானத்தின் கருப் பொருளிலிருந்து மனதை சிறிதும் விலக்காமல் ஆழ்ந்திருத்தலையே தியானம் என்று அழைக்கிறார்கள். இவ்வாறு

தியானத்தை விடாமல் தொடர்ந்து செய்யும் போது அது அனுஸ்மிருதி ஆகிறது. வேகம் சிறிதும் குறையாமல் எந்த விதமான தடங்கல்களாலும் பாதிக்கப்படாத ஆழ்ந்த தியானமே சமாதி என்று அழைக்கப்படுகிறது.

இந்த ஸ்மரண தாஸத்தின் பின் வருவது "ஆபன தாஸம்" என்ற அடுத்த நிலையாகும். இந்த நிலையில் ஒரு சாதகன் தன் புனிதமான ஆத்ம சொரூபத்தை நேரடியாக உணருகிறான். இதற்கும் மேலான நிலையே "வஸ்து சித்தி" என்று அழைக்கப்படுகிறது. இந்த நிலையில் தான் அவன் தனது ஆன்மீக சொரூபத்தை அடைந்து, அவனது நித்திய சேவை என்ன என்பதும் நிச்சயிக்கப் படுகிறது.

ஒரு சாதகன் "வைத்தி" என்ற விதி மார்க்கத்தை முதலில் கடைப்பிடித்து தன் பூதவுலக ஆசைகள் அனைத்தையும் ஒதுக்கி, சாஸ்திரங்கள், குரு, மற்றும் வைஷ்ணவர்களின் உபதேசங்களைப் பெற்று அவற்றைக் கவனமுடன் கடைப்பிடித்து பஜனைகளை செய்து வரும் போது அவனுக்கு "ருசி" வந்து சேருகிறது. இவ்வாறு அவனிடம் ருசி எழுந்ததும் அவன் வைத்தி பக்தியிலுள்ள விதிமுறைகளை விட்டு விட்டு ராகானுக பக்தியில் நுழைகிறான்.

ராகாத்மிகா பக்தி முக்ய வ்ரஜ வாசி ஜனே
தார அனுகத பக்திர ராகானுகா நாமே

(ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம் - மத்ய லீலா 22.149)

"சுயமாக தன்னிச்சையுடன் நித்தியமாக உண்டாகும் ஆன்மீக அன்பை எந்த விதமான பக்தி அளிக்கிறதோ, அதுவே ராகாத்மிக பக்தியாகும். இந்த விதமான பக்தியே மற்ற அனைத்து விதமான பக்திகளிலும் மிகச் சிறந்தது. இதை விரஜாவில் வாழ்பவர்களிடம் மட்டுமே காண இயலும். இந்த ராகாத்மிகா பக்தியின் வழியில் வரும் அனைத்தையும் ராகானுகா பக்தி என்று அழைக்கிறார்கள்."

இஷ்டே ஸ்வாரசிகீ ராகஹ
பரமா விஷ்டதா பவேத்
தன் மயீ யா பவேத் பக்திஹி
சாஸ்த்ர ராகாத்மி கோடிதா
(பக்தி ரஸாம்ருத சிந்து 1. 2. 272)

"எப்போதும் தொடர்ந்து ஒரு பொருளின் (ஸ்ரீ கிருஷ்ணரின்) மேல் தன் அன்பை இடைவிடாமல் முழு தீர்க்கமுடன் (ஸ்வாரசிகீ பரமாவிஷ்டதா) செலுத்துவதற்கு 'ராகா' என்று பெயர். இவ்வாறு அளவில்லாத பற்றுடன் சேவைகளை செய்வதையே (உதாரணம்: பூமாலைகளை பக்திப் பரவசத்துடன் தொடுத்தல்) ராகாத்மிகா பக்தி என்று அழைக்கப்படுகிறது."

ராகமயீ பக்திர ஹய "ராகாத்மிகா" நாம
தாகா சுனி லுப்த ஹய கோன பாக்யவான்
(ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம் - மத்ய லீலா 22.152)

"ராகாவுடன் தோன்றும் பக்தியே ராகாத்மிகா ஆகும். இவற்றைப் பற்றிக் கேட்டதும், அப்படிப்பட்ட பக்தியை தானும் அடைய வேண்டும் என்று ஆசைப்படுபவன் மிகவும் பாக்கியவானாகும்."

லோபே வ்ரஜ வாசீர பாவெ கரே அனுகதி
சாஸ்த்ர யுக்தி நாஹி மனே - ராகானுகார ப்ரக்ருதி
(ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம் - மத்யலீலா 22.153)

"ஒருவன் விரஜவாசிகளின் அடிகளைப் பின்பற்றி அவர்களுடைய தீர்க்கமான பக்தியை அடைய வேண்டி கடுமையாகப் பேராசை கொள்ளும் போது அவன் சாஸ்திரத்தையோ, தர்க்க விவாதங்களையோ எதைப் பற்றியும் கவலைப்படுவதில்லை. அதுவே சுயமான சுத்த பக்தி யாகும்."

பாஹ்ய, அந்தர - இகார துயிதா சாதனா
பாஹ்ய சாதக தேகே கரே ஸ்ரவண கீர்த்தன
மனே நிஜ சித்த தேக கரியா பாவன
ராத்ரி தினே கரே வ்ரஜ க்ருஷ்ணேர ஸேவன
(ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம் - மத்ய லீலா 22.156,157)

"ராகானுக பக்தியின் சாதகங்கள் இரண்டு விதங்களாகும்: ஒன்று வெளிப்படையானது(பாஹ்ய), இன்னொன்று அந்தரங்கமானது(அந்தர). வெளியில் ஒருவன் தன் சாதக தேகத்தால் கேட்டல், ஜெபித்தல் போன்றவைகளைச் செய்து கொண்டிருக்கலாம். ஆனால் மனதால் தன் ஆத்ம சொரூபத்தால் விரஜாவில் அவன் ஸ்ரீ கிருஷ்ணருக்கு இரவு பகல் அனைத்து நேரங்களிலும் சேவை செய்து கொண்டிருப்பான்."

சேவா சாதகா ரூபேண
சித்த ரூபேண சாத்ர ஹி
தத் பாவ லிப்சுனா கார்யா
வ்ரஜ லோகானு சாரதஹ
(பக்தி ரஸாம்ருத சிந்து 1.2.295)

"ஒரு சாதகனுக்கு ராகானுக பக்தியில் பேராசை வந்துவிட்டதென்றால், விரஜாவில் நித்தியமாக வாழ்ந்து வரும் பக்தர்களின் பக்தி பாவத்துடன் ஸ்ரீகிருஷ்ணருக்குத் தன் சாதக ரூபத்திலும், சித்த ரூபத்திலும் சேவை செய்ய வேண்டும். சாதக ரூபம் அவனது வெளிப்புற உடலையும், சித்த ரூபம் தன்

உள்புறமிருக்கும் ஆன்மீக உடலையும் குறிக்கும். தன் சித்த ரூபத்தில் ஸ்ரீகிருஷ்ணருக்கு தன் சுயமான சுத்த பக்தி சேவை செய்ய வேண்டும்."

நி ஜாபிஷ்ட கிருஷ்ண ப்ரேஷ்த பாச்சேத லாகியா
நிரந்தர சேவா கரே அந்தர்மனா ஹனா
(ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம் - மத்ய லீலா 22.159)

"விரஜாவில் என்றும் நிரந்தரமாக வாழும் பக்தர்களுக்குக் 'கிருஷ்ண பிரேஷ்தா' என்று பெயர். அவர்கள் ஸ்ரீகிருஷ்ணருக்கு மிகவும் பிரியமானவர்கள். எல்லா விதமான கிருஷ்ண பக்தர்களிலும் குறிப்பாக ஸ்ரீகிருஷ்ணருக்கு மிகவும் பிரியமாக சேவை செய்யும் பக்தர்களுக்கு 'நிஜா பீஷ்ட கிருஷ்ண பிரேஸ்தா' என்று பெயர். அவர்களைப் போல் இருக்க வேண்டுமென்றே அனைவரும் விரும்புவர். அப்படிப் பட்ட பக்தர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி ஒருவன் எப்போதும் தன் ஆன்மீக உடலுடன் முழுவதுமாக ஸ்ரீகிருஷ்ணருக்குத் தொடர்ந்து சேவை செய்ய வேண்டும்.

கிருஷ்ணம் ஸ்மரன் ஜனம் சாஸ்ய
பிரேஷ்தம் நிஜ சமீஹிதம்
தத் தத் கதா ரதஸ் சாஸொ
குர்யாத் வாஸம் வ்ரஜே சதா
(பக்தி ரஸாம்ருத சிந்து - 1.2.294)

இந்த சுலோகத்தின் பொருள் என்னவென்றால், ஒரு சாதகன் தன் தனிப்பட்ட விதமான பக்தி பாங்குடன் ஸ்ரீகிருஷ்ணரை எப்போதும் நினைத்து சேவை செய்ய வேண்டும் என்பதே. ஸ்ரீகிருஷ்ணரின் நித்திய பக்தன் எப்போதும் இப்படியே செய்வான். மேலும் ஸ்ரீகிருஷ்ணரின் லீலைகளில் சம்பந்தப் பட்ட நாமங்களை ஜெபிப்பதில் மூழ்கி பக்தி செலுத்த வேண்டும். மேலும் அந்த லீலைகளும் நாமங்களும் தன் இயற்கையான பக்தி பாவத்துக்கு ஒத்தவைகளாக இருக்க வேண்டும். இவையனைத்தையும் விரஜாவில் வசித்துக் கொண்டே ஒருவன் செய்ய வேண்டும்.

தாஸ சகா பித்ராதி பிரேயஸீர கண
ராக மார்கே நிஜ பாவேர கணன
(ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம் - மத்ய லீலா 22.161)

"சுயமாக தன்னிச்சையில் உண்டாகும் ராகானுக பக்தியின் மார்க்கத்தில் நான்கு விதமான பக்தி முறைகள் அடங்கும். அவை: சேவகனாக சேவை செய்தல், சக தோழன் போல் பழகுதல், பெற்றோர்கள் போல் பேணுதல், மற்றும் நாயகியைப் போல் நெருங்கி சேவை புரிதல் ஆகும்."

ஆனால் ஒரு சாதகன் சாந்த ரஸத்துடன் (நடு நிலையில்) பக்தி கொள்ள விரும்பினால் அவன் தன்னை ஒரு பசுவாகவோ, குச்சியாகவோ, ஊது கொம்பாகவோ, புல்லாங்குழலாகவோ, மற்றும் கடம்ப மரம் இப்படிப்பட்டவைகளாக நினைத்து சேவைகள் புரியலாம். தன்னை சேவகனாகப் பாவித்து பக்தி கொள்ள விரும்பினால், அந்த சாதகன் விரஜாவில் அவ்வாறு வாழ்ந்து வரும் ரக்தகா அல்லது பத்ரகாவைப் போல் சேவை செய்ய ஆசைப்பட வேண்டும். சகா தோழன் போல் பக்தி கொள்ள விரும்பும் சாதகன் ஸ்ரீபல தேவா, ஸ்ரீதாமா, சுதாமா இப்படிப்பட்டவர்களைப் பின்பற்ற வேண்டும். பெற்றோர்களைப் போன்ற பக்தி பாவம் கொள்ள விரும்புகிற சாதகன் ஸ்ரீநந்த பாபா, யசோதாவைப் பின்பற்ற வேண்டும். ஒரு நாயகியைப் போன்ற மனபாவத்துடன் சேவை செய்ய விரும்பும் சாதகன் விரஜாவிலுள்ள லலிதா, விஷாகா இவர்களைப் பின்பற்ற வேண்டும். அந்த சாதகன் விரஜாவில் வசித்துக் கொண்டு, இவ்வாறு தனக்கு உகந்த பக்தி பாவங்களுடன் நிகழும் லீலைகளைக் கேட்டு அதில் மூழ்கி ஆழ்ந்த பக்தி செலுத்த வேண்டும்.

ஸ்ரீராதா கிருஷ்ணருக்கு பஜனை செய்வதற்கு விரஜ மண்டலத்தைத் தவிர வேறு சிறந்த இடமே கிடையாது. அதனால் தான் மிகவும் உயர்ந்த நிலையிலிருக்கும் பிரம்மா, மற்றும் உத்தவா அனைவரும் விரஜ மண்டலத்தில் ஒரு புல்லாகப் பிறக்க ஆசைப்படுகின்றனர்.

# சுலோகம் ஒன்பது

## எது எல்லாவற்றிலும் மிகச் சிறந்த புண்ணிய ஸ்தலம்?

வைகுந்தாஜ் ஜனிதோ வரா மதுபுரீ
தத்ராபி ராஸோத் ஸவாத்
விருந்தாரண்யம் உதார பாணி ரமணாத்
தத்ராபி கோவர்த்தனஹ
ராதா குண்டம் இஹாபி கோகுல பதே
பிரேமாம்ருதாப் லாவனாத்
குர்யாத் அஸ்ய விராஜதோ கிரி
ததே சேவாம் விவேகி ந கஹ

**மொழி பெயர்ப்பு**

ஜனிதஹ - ஸ்ரீகிருஷ்ணர் அங்கே பிறந்ததால்; மது புரீ - மதுரா நகர்; வரா - சிறந்தது; வைகுந்தாத் - ஆன்மீக செல்வம் கொழிக்கும் வைகுண்டத்தை விடவும்; விருந்தாரண்யம் - பிருந்தாவனக் காடுகள்(சிறந்தவை); தத்ர அபி - அதை (மதுராபுரி) விடவும்; ரஸா உத்ஸவாத் - ரஸ நாட்டியம் அங்கே நடந்ததால்; கோவர்த்தனஹ - கோவர்த்தன மலை (சிறந்தது); தத்ர அபி - அதை(பிருந்தாவனக் காடுகள்) விடவும்; ரமணாத் - (ஸ்ரீகிருஷ்ணர் தன் பக்த சகாக்களுடன் சேர்ந்து கோவர்த்தன மலையை தன் தாமரைக் கரங்களால் தூக்கி) லீலைகள் புரிந்ததால்; உதார பாணி - (எப்போதும் கருணை செய்யும் கரங்களினால் தன் பக்தர்களுக்கு பிரேம ரஸத்தை வழங்கும்) ஸ்ரீகிருஷ்ணர்; ராதா குண்டம் - ஸ்ரீ ராதா தீர்த்தம் (சிறப்பானது). இக அபி - அதை (கோவர்த்தன மலை) விடவும்; ஆப்லாவனாத் - அதில் மூழ்கி இருப்பவர்களுக்கு (குளிப்பவர்களுக்கு); பிரேமாம்ருத - அமிர்தமான பிரேமை; கோகுல பதேத் - கோகுலத்தின் நாயகனான ஸ்ரீகிருஷ்ணர்; கஹ - என்ன; விவேகி - அறிவாளி; ந குர்யாத் - தன்னை அளிக்க மாட்டான்; சேவாம் - சேவை; அஸ்ய - இந்த மகத்துவமான தீர்த்தம்; விராஜிதஹ - மிகச் சிறப்பாக அமைந்த; ததே - அடிவாரத்தில்; கிரி - கோவர்த்தன மலை.

**பொருள்**

ஸ்ரீகிருஷ்ணர் பிறந்ததால், மதுராபுரி ஆன்மீக செல்வங்கள் அனைத்துடன் கொழிக்கின்ற வைகுண்டத்தை விடவும் மேலானது. கோபியர்களுடன் ஸ்ரீ கிருஷ்ணர் ரஸ நாட்டியம் ஆடியதால் பிருந்தாவனக் காடுகள், மதுராபுரியை விடவும் சிறந்தது. ஸ்ரீகிருஷ்ணர் தன் பக்த சகாக்களுடன் கோவர்த்தன மலையைத் தூக்கி லீலைகள் புரிந்ததால் கோவர்த்தன மலை பிருந்தாவனக் காடுகளை விடவும் சிறந்தது. ஆனால் தன்னில் மூழ்குபவர்களை அமிர்தமான கிருஷ்ணப் பிரேமையில் ஆழ்த்தும் ஸ்ரீராதா குண்டம் (தீர்த்தம்) கோவர்த்தன மலையை விடவும் சிறந்தது! கோவர்த்தன மலையின் அடிவாரத்தில் அமைந்திருக்கும் அந்த உன்னதமான ஸ்ரீ ராதா குண்டத்திற்கு அறிவுள்ள எவன் தான் சேவை செய்யாமலிருப்பான்?

**உபதேச பிரகாஷிகா தீக்கா**

இதற்கு முந்திய சுலோகம், நாம் விரஜ பூமியில் வசித்துக் கொண்டே பஜனை செய்ய வேண்டும் என்று கூறுகிறது. இந்த சுலோகமோ அந்த சாதகன் குறிப்பாக எங்கே வசிக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது. ஸ்ரீ கிருஷ்ணர் பிறவியெடுத்ததால் மதுராபுரி ஆன்மீக உலக மாட்சிமைகள் அனைத்தும் நிறைந்த வைகுந்தத்தை விடவும் மேலானது. ஸ்ரீகிருஷ்ணர் கோபியர்களுடன் ரஸ நடனம் ஆடியதால் பிருந்தாவனம் மதுராபுரியை விடவும் சிறந்தது. மேலும், தனது தாமரைக் கரத்தால் கோவர்த்தன மலையைத் தூக்கி தன் பக்த சகாக்களுடன் பிரியமாகவும் சுதந்திரமாகவும் மகத்தான லீலைகள் புரிந்ததால் கோவர்த்தன மலை பிருந்தாவனத்தை விடவும் சிறந்தது. ஆனால் அந்த கோவர்த்தன மலையை விடவும் மிக மிக உயர்ந்ததோ ஸ்ரீராதா குண்டமாகும். ஏனென்றால் அதில் மூழ்குகின்ற ஒருவனை, கோகுலத்தின் முழு நிலவான ஸ்ரீ கிருஷ்ணருக்கு ஸ்ரீமதி ராதா ராணியிடமிருக்கும் அமிர்தமான பக்தி பிரேமையில் அது ஆழ்த்தி விடுகிறது! விருஷபானு மகாராஜாவின் புத்திரியான ஸ்ரீமதி ராதா ராணியிடம் ஸ்ரீ கிருஷ்ணருக்கு எவ்வளவு தூரம் அன்பு இருக்கிறதோ, அதே அளவுக்கு அவருக்கு ஸ்ரீ ராதா குண்டத்திலும் உள்ளது.

ஸ்ரீகிருஷ்ணர் லீலைகள் நடத்திய மேலே கூறிய அத்தனை புண்ணிய தலங்களும் அவருடைய அந்தரங்க சக்தி (சொரூப சக்தி) யினால் உண்டாக்கப் பட்டவைகளாதனால் அவை அனைத்தும் முழுவதுமாக ஆன்மீகமானவை. ஆனால் அவை அனைத்திலும் ஸ்ரீராதா குண்டமே சிகரமானது. ஏனென்றால் ஸ்ரீராதா குண்டத்தில் தான் எல்லா லீலைகளிலும் மேலான மிகவும்

மகத்தான லீலைகள் அனைத்தையும் அந்த சொரூப சக்தி நிகழ்த்துகிறது.

## பீயூஷ வர்ஷிணி விருத்தி

வழிபாடு செய்ய வேண்டிய அனைத்து புண்ணியத் தலங்களிலும் ஸ்ரீ ராதா குண்டமே மேலானது என்று இந்த ஒன்பதாவது சுலோகம் கூறுகிறது. ஸ்ரீகிருஷ்ணர் அவதரித்த காரணத்தால் மதுராபுரி எல்லா ஐஸ்வர்யங்களும் நிறைந்த வைகுந்தத்தை விடவும் உயர்ந்தது. மதுரா வட்டத்தில் பிருந்தாவனம் மிகச் சிறந்த இடமாகும். உதார பாணியான ஸ்ரீகிருஷ்ணர் விதம் விதமான லீலைகள் புரிந்ததால் கோவர்த்தன மலை அதை விடவும் சிறந்தது. ஸ்ரீகோவர்த்தன மலைக்குப் பக்கத்தில் ஸ்ரீராதா குண்டம் உள்ளது. ஸ்ரீகிருஷ்ணரின் பிரேம அமிர்தம் அங்கே நிரம்பியிருப்பதால் அதுவே எல்லாவற்றிலும் மிகவும் உயர்ந்தது. அப்படிப்பட்ட ஸ்ரீராதா குண்டத்துக்கு ஆர்வமுடன் பஜனை செய்து சேவை செய்யாமல் எவன் தான் இருப்பான்? சுருங்கக் கூறினால், பகவானின் பக்தர்கள் கண்டிப்பாக ஸ்ரீ ராதா குண்டத்துக்குச் சேவை செய்வார்கள். ஒரு சாதகன் தன் பூத உடலாலோ அல்லது ஆன்மீக உடலாலோ ஸ்ரீராதா குண்டத்தில் வசித்துக் கொண்டே மேலே குறிப்பிடப்பட்ட பக்தி சாதனங்களைப் புரிய வேண்டும்.

## விளக்கவுரை

எல்லா புண்ணியத் தலங்களிலும் ஆன்மீக உலகத்தில் இருக்கும் வைகுந்தம் மிகச் சிறந்தது. ஆனால் ஸ்ரீகிருஷ்ணர் அவதரித்ததால், மதுராபுரி அந்த வைகுந்தத்தை விடவும் சிறந்தது. ஆனால் ரஸ நடனம் நடந்ததால், மதுரா மண்டலத்தினுள் உள்ள பிருந்தாவனம் அதை விடவும் சிறந்தது. பிருந்தாவனக் காடுகளில் கோவர்த்தன மலையே இன்னமும் சிறந்தது. ஏனென்றால் அங்கே தான் ஸ்ரீ கிருஷ்ணர் சுதந்திரமாக தன் லீலைகளைப் புரிந்து மகிழ்ந்தார். ஆனால் ஸ்ரீராதா குண்டமோ கோவர்த்தன மலையை விடவும் சிறந்தது. அங்கே ஸ்ரீகிருஷ்ணரின் பிரேம அமிர்தம் எப்போதும் பொங்கி வழிவதால் அதுவே எல்லாவற்றிலும் மேலானதாகிறது. ஸ்ரீராதா குண்டத்துக்கு மேலான புண்ணிய தலம் கிடையவே கிடையாது. எனவே கோவர்த்தன மலையின் அடிவாரத்தில் மகத்தாக அமைந்திருக்கும் இந்த ஸ்ரீராதா குண்டத்துக்கு அறிவுள்ள எவன் தான் சேவை செய்யாமலிருப்பான்?

ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் நித்திய பக்தரான ஸ்ரீரூப கோஸ்வாமி ஸ்ரீராதா குண்டத்துக்கு சேவை செய்வதே எல்லாவற்றிலும் மேலானது என்று விவரிக்கிறார். அவர் ஸ்ரீகௌர ஹரியின் இதயத்தின் அந்தரங்கத்தை நன்றாக அறிந்தவர். மாதுரிய ரஸத்தின் கீழ் தஞ்சமடைந்த உயர்ந்த பக்தர்களுக்குக் கூட

ஸ்ரீராதா குண்டத்தின் மகத்துவங்கள் புரிவதுமில்லை, மற்றும் அதை அடைய முடிவதுமில்லை. குறிப்பாக, ஸ்ரீசைதன்ய மகாபிரபுவிடம் சரணடையாத எவருக்கும் இவை புரிவதோ மற்றும் கிடைப்பதோ இல்லை!

# சுலோகம் பத்து

## ஸ்ரீ கிருஷ்ணரின் உச்சமான அன்புக்குரியவர் யார்?

கர்மிப்யஹ பரிதோ ஹரே பிரியதயா
வியக்திம் யயுர் ஞானினஸ்
தேப்யோ ஞான விமுக்த பக்தி பரமாஹ
பிரேமைக நிஷ்தாஸ் ததஹ
தேப்யஸ் தா பசுபால பங்கஜ த்ருஸஸ்
தாப்யோ அபிஸா ராதிகா
பிரேஷ்தா தத்வத் இயம் ததீய சரசி தாம்
நாஸ்ரயேத் கஹ க்ருதி

**மொழி பெயர்ப்பு**

ஞானினஹ - தங்கள் ஆன்மீக அறிவால் முக்குணங்களையும் தாண்டிய பிரம்ம ஞானிகள்; யயுஹ - அடைந்தனர்; வியக்திம் - (சாஸ்திரங்களின் படி) பெருமை; பிரியதயா - விடவும் பிரியம்; பரித்தஹ - எல்லா வகைகளிலும்; ஹரே - ஸ்ரீ கிருஷ்ணருக்கு; கர்மிப்யஹ - புண்ணிய கர்மங்களை ஆற்றும் கர்ம யோகத்தைப் பின்பற்றுபவர்களை விடவும்; ஞானவிமுக்த - சனக, சனாதன முதலானவர்களைப் போல் ஞான யோகத்தை ஒதுக்கித் தள்ளியவர்கள்; பக்தி பரமாஹ - பக்தி மட்டுமே மிகச் சிறந்த வழியென்று அதைப் பின்பற்றும் ஸ்ரீ கிருஷ்ணரின் நெருங்கிய பக்தர்கள்(ஸ்ரீ ஹரிக்கு அதிகமாக பிரியமானவர் என்ற பெருமை அடைகிறார்கள்); தேப்யஹ - (ஞானிகள்) அவர்களை விடவும்; பிரேம ஏக நிஷ்தாஹ - (நாரதர் போன்ற) பிரேம பக்தர்கள் (ஸ்ரீ ஹரிக்கு இன்னமும் அதிகமாக பிரியமானவர்கள் என்ற பெருமையை அடைகின்றனர்). ததஹ - அதை (பிரேம பக்தர்களை) விடவும்; தாஹ - அவர்கள்; பசு பால - பசுக்களை பேணும்(கோபிகள்); த்ருஷஹ - எவருடைய கண்கள்; பங்கஜ - முழுவதும் விரிந்த தாமரையின் இதழ்கள் போன்றவர்கள் (ஸ்ரீஹரிக்கு இன்னமும் அதிகமான பிரியமானவர்கள்); தேப்யஹ - அந்த நெருங்கிய பக்தர்களை விடவும்; ஸ - அது; ராதிகா - ஸ்ரீமதி ராதிகா (ஸ்ரீஹரிக்கு இன்னமும் மிக நெருங்கிய பிரியமானவள்); அபி - மேலும்; தாப்யஹ - அவர்களை(கோபிகளை) விடவும்; இயம் -

இது; சரசி - குண்டம் (ஸ்ரீராதா குண்டம்); தடீய - (ஸ்ரீமதி ராதிகா) வின்; பிரேஷ்தா - (ஸ்ரீகிருஷ்ணருக்கு) அதிகமாக பிரியம்; தத்வத் - அவளைப் போல்; கஹ - என்ன? க்ருதி - ஆன்மீகத்தில் முதிர்ந்த ஞானம் உள்ள மிகவும் அதிர்ஷ்டமானவன்; ந ஆஸ்ரயேத் - (ஸ்ரீராதா குண்டத்தின் கரையில் வசித்து ஸ்ரீகிருஷ்ணரின் அஷ்ட காலிய லீலைகளில் மூழ்கி பஜனைகள் செய்து) தஞ்சம் அடைய மாட்டான்; தாம் - அந்த ஸ்ரீராதா குண்டத்தின்.

**பொருள்**

தன் சொந்த ஆசைகளை மட்டும் திருப்தி செய்து வாழும் சாதாரணவனை விட, தன்னலமின்றி நல்லொழுக்கத்துடன் கர்ம யோகத்தில் ஈடுபடுபவன் மேலானவன். ஆனால் இவ்வாறு கடமையாற்றும் கர்ம யோகியை விட, ஆன்மீக ஞானத்தில் முதிர்ந்து (சாத்வீகம், ரஜஸ், தாமஸீகம் என்ற) மூன்று விதமான குணங்களிலுமிருந்து அப்பால் மேலே சென்ற பிரம்ம ஞானிகள் ஸ்ரீகிருஷ்ணருக்குப் பிரியமானவர்கள். ஆனால், பக்தி மார்க்கமே எல்லாவற்றிலும் சிறந்தது என்று பிரம்ம ஞான மார்க்கத்தை ஒதுக்கி எறிந்த சனகர் போன்ற பக்தர்களை ஸ்ரீகிருஷ்ணர் இன்னமும் அதிகமாக விரும்புகிறார். அவர்கள் ஸ்ரீமத் பாகவதத்தில் (10.14.3) வரும் "ஞானே பிரயாஸம் உதபாஸ்ய" என்ற சுலோகத்தைக் கடைப்பிடிக்கிறார்கள். "ஒருவன் ஞானியாக வேண்டும் என்ற பிரயாஸத்தை விட்டு விட வேண்டும்" என்பது அதன் பொருள்.

ஆனால் இப்படிப்பட்ட பக்தர்களை விடவும் மேலாக எப்போதும் கிருஷ்ண பிரேமையில் ஆழ்ந்திருக்கும் நாரதர் போன்ற பக்தர்கள் ஸ்ரீகிருஷ்ணருக்கு இன்னமும் அதிகமாகப் பிரியமாகிறார்கள். ஆனால், தங்களையும் தங்கள் வாழ்க்கை அனைத்தையுமே ஸ்ரீகிருஷ்ணருக்காக மட்டுமே அர்ப்பணம் செய்த கோபியர்கள் அந்தப் பிரேம பக்தர்களை விடவும் அதிகமான பிரியத்தை ஸ்ரீகிருஷ்ணருக்கு அளிக்கிறார்கள். இப்படிப்பட்ட பிரியமான கோபியர்கள் அனைவர்களிலும் ஸ்ரீமதி ராதிகா மட்டுமே ஸ்ரீகிருஷ்ணரின் உயிரை விடவும் பிரியம். இதேபோல், ஸ்ரீராதா ராணியின் மிகவும் பிரியமான குண்டமான ஸ்ரீராதா குண்டத்தையும் ஸ்ரீகிருஷ்ணர் மிகப் பிரியமாக நேசிக்கிறார். இவ்வளவு சிறந்த உன்னதமான ஸ்ரீராதா குண்டத்தில், ஸ்ரீகிருஷ்ணரின் அஷ்ட காலிய லீலைகளில் மூழ்கி பஜனைகள் செய்ய, ஆன்மீகத்தில் முதிர்ந்த அறிவுள்ள அதிர்ஷ்டசாலி ஏன் தான் ஸ்ரீராதா குண்டத்தின் தீரத்தில் வசிக்க மாட்டான்?

**உபதேச பிரகாஷிகா தீக்கா**

இந்த பத்தாவது சுலோகத்தில் ஸ்ரீராதா குண்டத்திடம் தஞ்சம் அடைய வேண்டும் என்பதற்கு இன்னொரு காரணமும்

கொடுக்கப்பட்டுள்ளது. கர்ம காண்டத்தைப் பின்பற்றும் கர்மயோகி ஸ்ரீகிருஷ்ணரிடமிருந்து விலகியவன். அவனுக்கு, தான் புண்ணிய கர்மங்களை செய்து அதன் பலன்களை அனுபவிப்பதில் மட்டுமே ஆர்வம். ஆனால் அவர்களுக்கும் மேலாக, குணங்களற்ற பிரம்மத்தை அடைய வேண்டி, ஞானத்தை நாடும் ஞான யோகிகளை பகவான் விரும்புகிறார். பகவானின் பிரிக்க முடியாத உருவமில்லாத இன்னொரு தோற்றமே இந்த நிர்விஷேஷ பிரம்மம். ஆனால் இந்த நிர்விஷேஷ பிரம்ம ஞானத்தையும் விரும்பாமல், பகவானின் ஐஸ்வர்ய ஞானத்தில் விருப்பத்துடன் ஈடுபட்டுள்ள நான்கு குமாரர்கள் போன்ற பக்தர்களை இன்னமும் அதிகமாக பகவான் விரும்புகிறார். ஐஸ்வர்ய ஞானம் பகவானின் ஆச்சரியமான பெரும் மகிமைகளைப் பற்றியது. ஆனால் முழுவதுமாக ஸ்ரீ ஹரியையே எப்போதும் தியானித்துக் கொண்டிருக்கும் நாரதர் போன்ற பக்தர்களை, ஞான பக்தர்கள் அனைவரையும் விட அதிகமாக ஸ்ரீஹரி நேசிக்கிறார். இவர்களை விடவும் மிக மிக மேலானவர்கள் விரஜ கோபிகள். அவர்கள் ஸ்ரீகிருஷ்ணரிடம் விவரிக்க இயலாத மிகப் பேரளவில் பிரேம பக்தி கொண்டுள்ளனர். எனவே ஸ்ரீகிருஷ்ணருக்கு கோபியர்களிடம் மிகவும் அளவு கடந்த பிரியம்.

பத்ம புராணத்தில் கீழ்க்கண்ட வரிகள் வருகின்றன.

யதா ராதா பிரியா விஷ்ணோஸ்
தஸ்யா குண்டம் பிரியம் ததா
சர்வ கோபீஸு ஸைவைக்கா
விஷ்ணோர் அத்யந்த வல்லபா

"எவ்வாறு ஸ்ரீமதி ராதிகா ஸ்ரீகிருஷ்ணருக்கு மிக மிகப் பிரியமோ, அதே அளவுக்கு ஸ்ரீராதா குண்டத்திலும் அவருக்குப் பிரியம். அனைத்து கோபியர்களிலும் ஸ்ரீமதி ராதா ராணியைத் தவிர வேறெவரும் அவ்வளவு பிரியமல்ல."

உஜ்வல நீலமணி (4.5) யிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் இந்த சுலோகம், எல்லா கோபியர்களிலும் ஸ்ரீமதி ராதா ராணி மட்டுமே ஸ்ரீகிருஷ்ணருக்கு மிகவும் பிரியம் என்று நிரூபிக்கிறது. இதே போல் தான் ஸ்ரீராதா ராணியினின்றும் வேறுபாடற்ற ஸ்ரீமதி ராதாராணியின் குண்டமும் ஸ்ரீகிருஷ்ணருக்கு மிகவும் பிரியமானது. பக்தர்கள் வசிக்க அதுவே எல்லா புண்ணியத் தலங்களிலும் மேலானதாகும். எனவே ஆன்மீகத்தில் முதிர்ந்து, பகவானுக்கு பஜனை செய்வதில் பிரியமான எந்த ஒரு சாதகன் தான் அந்தக் குண்டத்திடம் தஞ்சம் அடைய மாட்டான்? அப்படிப்பட்ட சாதகன் கண்டிப்பாக ஸ்ரீராதா குண்டத்திடம் தஞ்சம் அடைந்தே தீருவான்.

**பீயூஷ வர்ஷிணி விருத்தி**

இந்த உலகத்தில் காணப்படும் அநேக விதமான பக்தி சாதகர்களிலும், ஸ்ரீராதா குண்டத்தின் தீரத்தில் வசித்துக் கொண்டு பகவானுக்குப் பஜனைகள் செய்து வரும் பக்தனையே ஸ்ரீ கிருஷ்ணர் மிகவும் விரும்புகிறார். இதையே இந்த பத்தாவது சுலோகம் விவரிக்கிறது. கர்ம யோகத்தில் ஈடுபட்டிருப்பவர்களை விட உருவமும் அருவமுற்ற பிரம்மத்தை நாடும் ஞானிகளை ஸ்ரீகிருஷ்ணர் விரும்புகிறார். ஆனால் எல்லாவிதமான ஞான மார்க்கங்களையும் விலக்கி எறிந்து விட்டு சுத்தமான பக்தியை நாடும் பக்தர்களை ஸ்ரீகிருஷ்ணர் இன்னமும் அதிகமாக விரும்புகிறார். அந்த சுத்த பக்தர்களில் கிருஷ்ண பிரேமை கொண்டுள்ள பக்தரை அவர் இன்னமும் அதிகமாக நேசிக்கிறார். அவ்வாறு பிரேம பக்தி கொண்டுள்ளவர்களில் விரஜ கோபியர்கள் ஸ்ரீகிருஷ்ணரிடம் இன்னும் அதிகமான பிரியத்தைப் பெறுகிறார்கள்.

ஆனால் அந்த அனைத்து கோபிகளிலும், ஸ்ரீமதி ராதாராணியே ஸ்ரீகிருஷ்ணருக்கு மிக மிகப் பிரியம். அதேபோல் தான் ஸ்ரீமதி ராதா ராணியின் குண்டமான ஸ்ரீ ராதா குண்டமும் ஸ்ரீகிருஷ்ணருக்கு மிகவும் பிரியமானதாகிறது. எனவே ஆன்மீக அறிவில் முதிர்ந்தும், புண்ணியங்களை(சுக்ரிதி) வேண்டிய அளவில் சேர்த்தும் வைத்துள்ள எந்த ஒரு சாதகனும், நிச்சயமாக ஸ்ரீராதா குண்டத்தின் தீரங்களில் வாழ்ந்து கொண்டு, சதா தன் மனதால் ஸ்ரீகிருஷ்ணரின் அஷ்ட காலிய லீலைகளை எப்போதும் தியானித்து அவர்களுக்கு சேவை செய்வான்.

### விளக்கவுரை

தனது சுய நலமான சொந்த ஆசைகளைத் திருப்தி செய்தே வாழ்க்கையை நடத்தும் சாதாரண ஒருவனை விட சாத்வீக குணத்துடன் முறையாக நன்மை பயக்கும் காரியங்களைத் தீர்க்கத்துடன் செய்பவன் மேலானவன். அவனை ஸ்ரீகிருஷ்ணர் விரும்புகிறார். ஆனால் முக்குணங்களையும் கடந்த பிரம்ம ஞானிகளை அவர் இன்னமும் அதிகமாக விரும்புகிறார். அந்த ஞானிகளை விடவும் அதிகமாக விரும்புவது தன்னிடம் மிக நெருங்கிய அன்பு வைத்திருக்கும் பிரேம பக்தர்களான சுத்தமான பக்தர்களையே. அந்த பிரேம பக்தர்களை விடவும் ஸ்ரீகிருஷ்ணருக்குப் பிரியமானவர்கள் விரஜ கோபியர்கள். அனைத்து விரஜ கோபியர்களிலும் ஸ்ரீகிருஷ்ணருக்கு மிக மிகப் பிரியம் ஸ்ரீமதி ராதிகா. அவர் ஸ்ரீமதி ராதிகாவிடம் எந்த அளவுக்கு பிரியம் வைத்துள்ளாரோ அதே அளவு பிரியம் ஸ்ரீமதி ராதாராணியின் ஸ்ரீராதா குண்டத்திலும் வைத்துள்ளார். எனவே மிகவும் அதிர்ஷ்டமுள்ள கிருஷ்ண பக்தர்கள் ஸ்ரீராதா குண்டத்திடம் தஞ்சம் அடைய வேண்டும்.

# சுலோகம் பதினொன்று

## ஸ்ரீ ராதா குண்டத்தின் மகிமைகள்

கிருஷ்ணஸ்யோச்சை பிரணய வசத்தி
 ப்ரயஸீப்யோ அபி ராதா
குண்டம் சாஸ்யா முனிபிர் அபிதஸ்
 தாத்ருக் எவ வியதாயி
யத் ப்ரேஷ்தைர் அபி அலம் அசுலபம்
 கிம்புனர் பக்தி பாஜாம்
தத் ப்ரேமேதம் சக்ருத் அபிஸரஹ
 ஸ்நாதுர் ஆவிஷ்கரோத்தி

### மொழி பெயர்ப்பு

ராதா- ஸ்ரீமதி ராதிகா; ப்ரயஸீப்ய அபி - மற்ற பிரியமான கோபிகளை விடவும்; உச்சை - மேலான; வசத்தி - பொருள்; பிரணய - பிரியத்தால்; கிருஷ்ணஸ்ய - ஸ்ரீகிருஷ்ணரின்; அஸ்யா - எல்லா வகையிலும்; தாத்ருக் எவ - அப்படியே (அந்த ஸ்ரீகிருஷ்ணரின் அன்புக்குப் பாத்திரமான); வியதாயி - (சாஸ்திரங்களில்) இதை உறுதியாகக் கூறப்பட்டுள்ளது; முனிபிஹி - முனிவர்களால்; இதம் - இது; ஸரஹ - குண்டம் (ஸ்ரீராதா குண்டம்); ஆவிஷ்கரோத்தி - வழங்குகின்ற; தத் - அது; பிரேம - கோபிகளின் பிரேமை; யத் - எது; அலம் - மிகவும்; அசுலபம் - கிடைப்பதற்கரிய; ப்ரேஷ்தைர் அபி - நாரதர் போன்ற மிகச் சிறந்த பக்தர்களால் கூட; கிம் புனர் - எப்படிப் பேச முடியும்; பக்தி பாஜாம் - சாதக பக்தர்களைப் போன்ற மற்ற பக்தர்கள்; ஸ்நாதுஹு - ஆழ்ந்த பக்தியுடன் ஒருவன் அந்தத் தீர்த்தத்தில் மூழ்கிக் குளித்தால்; சக்ருத் அபி - ஒரே ஒரு தடவை.

## பொருள்

மகா பெரும் முனிவர்கள், ஸ்ரீமதி ராதிகாவே ஸ்ரீகிருஷ்ணருக்கு மிகவும் பிரியம் என்று ஒருசேர முடிவெடுத்துள்ளனர் (பத்ம புராணத்தில் இது குறிப்பிடப்பட்டுள்ளது). அதேபோல் தான் ஸ்ரீமதி ராதாராணியின் குண்டமும் ஸ்ரீகிருஷ்ணருக்கு மிகவும் பிரியமானது. ஆழ்ந்த பக்தியுடன் ஒருவன் அதன் புனிதமான நீரில் ஒரே ஒரு முறை மூழ்கினால் போதும்; கிடைப்பதற்கரிதான கோபி பிரேமை என்ற பொக்கிஷத்தை அது கொடுத்து விடும்! பெரும் சிறப்பு பொருந்திய நாரத முனிவருக்கே இது கிடைக்கவில்லை; கேவலம் எப்படி ஒரு சாதாரண சாதகனுக்கு இது கிடைக்கும்?

## உபதேச பிரகாஷிகா தீக்கா

இந்த சொல்லவொண்ணா மகிமை பெற்ற ஸ்ரீராதா குண்டத்தை முழுக்கவும் தஞ்சம் அடையும் போது அப்படி என்ன விநோதமான பொருள் கிடைக்கிறது என்பதை அறிவதில் ஆர்வம் வருவது இயற்கையே தான்! "கிருஷ்ண பிரேமையே பக்தி சாதகத்தில் கிடைக்க வேண்டிய உன்னதமான ஒரே பழம்" என்று, தான் இயற்றிய சித்தாந்தங்களில் ஸ்ரீல ரூப கோஸ்வாமி உறுதியாகக் கூறுகிறார். இங்கே கூறப்படும் பிரேமை, பகவானின் மிக நெருங்கிய பக்தரான நாரத முனிக்குக் கூடக் கிடைப்பது மிக மிக கடினம். வேறு விதமாகக் கூறப் போனால், விரஜ கோபிகள் ஸ்ரீகிருஷ்ணரிடம் கொண்டுள்ள, அளவில்லாமல் ஜொலிக்கும் பிரேமை (உன்னதோஜ்வல பிரேமை), அவரது மிக நெருங்கிய பக்தர்களுக்குக் கூடக் கிடைப்பதில்லை! சுருக்கமாகக் கூறப்போனால், அந்த பிரேமை எவருக்குமே கிடைக்காது! அவ்வளவு அரிதான பிரேமையை ஒருவன் ஸ்ரீ ராதா குண்டத்தில் ஆழ்ந்த பக்தியுடன் குளிக்கும் போது பெறுகிறான். இங்கே ஸ்ரீராதா குண்டம் அந்தப் பிரேமையை அளிக்கும் "சுயம் கர்த்தா" மட்டுமல்ல. அந்த பிரேமையின் முடிவுப் பொருளான "விஷயமும்" அதுவே! ஒரு பக்தனின் முடிவான இலட்சியம் இந்த ஸ்ரீராதா குண்டமே தான்! யார் தான் இப்படிப்பட்ட ராதா குண்டத்திடம் தஞ்சம் அடைய மாட்டார்? வேறு விதமாகக் கூறினால், பஜனையில் முதிர்ந்த எந்த ஒரு பக்தனும் பிரேமையின் உச்சத்தை விரும்பினால் அவன் நிச்சயமாக இதையே செய்வான்.

ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் ஒரு சிறு பாத தூசியினால், எனக்குத் தெரிந்த அளவில், பக்தர்களின் ஆன்மீக இன்பத்தைப் பெருக்க இந்த விரிவுரையை நான் இயற்றியுள்ளேன். ஸ்ரீ ராதா ரமண விக்கிரத்தின் சேவகனும், ஸ்ரீ கோவர்த்தன லாலாவின் புத்திரனுமான ராதா ரமண தாஸனான நான், ஸ்ரீல ரூப கோஸ்வாமியின் ஸ்ரீஉபதேசாம்ருதத்திற்கு எழுதிய உபதேச

பிரகாஷீகா தீக்காவை இத்துடன் முடிக்கிறேன்.

## பீயூஷ வர்ஷிணி விருத்தி

இதற்கு முந்தின சுலோகத்தில் ஸ்ரீராதா குண்டத்தின் மகிமை பற்றி விவரிக்கப்பட்டது. இந்தப் பதினொன்றாம் சுலோகம் ஒரு சாதகனின் இதயத்தில் ஸ்ரீராதா குண்டத்தின் மேல் அசைக்க முடியாத நம்பிக்கையை உதிக்க வைப்பதை நோக்கமாகக் கொண்டது. ஸ்ரீகிருஷ்ணருக்கு, தனது அனைத்து பிரிய கோபிகளிலும், ஸ்ரீராதா ராணியே மிகவும் பிரியமானவள். ஸ்ரீராதா குண்டத்தின் உச்சமான மகிமைகளைப் பற்றி மகாபெரும் முனிவர்கள் சாஸ்திரங்களில் இவ்வாறே தான் எழுதியுள்ளனர். ஸ்ரீராதா குண்டத்தில் குளிக்கும் ஒரு சாதகனுக்கு, கிடைப்பதற்கரிதான பிரேம பக்தியை அது அளிக்கிறது. எந்த ஒரு சாதகனுக்கும் கிடைக்க இயலாத இந்தப் பிரேமை, மகா பிரேம பக்தரான நாரதருக்குக் கூட கிடைப்பது கடினம்.

எனவே பக்தி சாதகனுக்கு பஜனையை குறையேதுமின்றி புரிவதற்கு ஸ்ரீராதா குண்டமே எல்லா புண்ணியத் தலங்களிலும் சிறந்தது. எனவே ஜடவுலக மாயையினின்று விடுபட்டு, ஒரு கோபியாக (அப்ராக்ருத கோபி தேகம்) தன்னை முழுவதுமாக உணர்ந்த ஒரு ஜீவாத்மா, ஸ்ரீமதி ராதா ராணியின் பணிப் பெண்ணாக (பால்ய தாஸி) தன்னைப் பாவித்து, ஸ்ரீராதா குண்டத்தின் தீரங்களில் வசிக்க வேண்டும். புண்ணியத் தலமான விரஜாவில் அமைந்திருக்கும் இந்த ஸ்ரீராதா குண்டத்தின் குஞ்சாக் காடுகளில் தான், குருதேவரும் தனது நிரந்தரமான ஆன்மீக சொரூபத்தில் பணிப்பெண்ணாக ஸ்ரீராதா கிருஷ்ணருக்கு சேவை செய்து கொண்டிருக்கிறார். இவ்வாறு அந்த சாதகன் தன் பரிசுத்தமான ஆத்மாவுடன் அங்கே வாழ்ந்து கொண்டு, வெளியில் எப்போதும் ஹரி நாமத்தைத் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டு, ஸ்ரீராதா குண்டத்திடம் தஞ்சமடைந்திருக்க வேண்டும். எப்போதும் ஸ்ரீகிருஷ்ணரின் எட்டு விதமான நித்ய லீலைகளான அஷ்ட காலிய லீலைகளில் தன் மனதை முழுவதுமாக மூழ்க வைத்து, தன் உள் சொரூபமான கோபிப் பணிப் பெண்ணாக ஸ்ரீமதி ராதிகாவுக்குச் சேவை புரிய வேண்டும். ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் பாதங்களில் அடைக்கலமான பக்தி சாதகனுக்கு இதுவே பஜனை செய்யும் வழி.

### விளக்கவுரை

ஸ்ரீமதி ராதிகாவே ஸ்ரீகிருஷ்ணருக்கு மிக மிகப் பிரியமுள்ளவள். ஸ்ரீகிருஷ்ணருக்குப் பிரியமானவர்கள் அனைவரிலும் மேலான மணிக்கிரீடம் ஸ்ரீமதி ராதாராணி மட்டுமே! சாஸ்திரங்களில், ஸ்ரீகிருஷ்ணருக்கு ஸ்ரீமதி ராதிகாவிடமுள்ள அதே பிரியம் ஸ்ரீமதி ராதாராணியின் குண்டமான ஸ்ரீராதா குண்டத்திலும் உண்டு என்று

முனிவர்கள் எழுதி வைத்துள்ளனர். பக்தி பிரேமைகளிலெல்லாம் உயர்வானதான கோபி பிரேமை, பகவானின் நெருங்கிய பக்தரான நாரதருக்குக் கூடக் கிடைப்பது மிகவும் கடினம். பின், கேவலம் ஒரு சாதாரண பக்தி சாதகன் அதை அடைவதைப் பற்றி எப்படிப் பேச முடியும்? ஆனால் அந்த ஸ்ரீராதா குண்டமோ, அதில் குளிக்கும் ஒரு சாதகனுக்கு அந்தப் பிரேமையை அளித்து விடுகிறது!

ஸ்ரீராதா குண்டம் முழுக்கவும் பிரேமையால் நிரம்பியது. ஆம் அது உண்மையாகவே அமிர்தமான பிரேம நீரைக் கொண்டது! எனவே ஒருவன் தன் ஆன்மீக உடலால் ஸ்ரீராதா குண்டத்தின் ஓரங்களில் வசித்துக் கொண்டு (அப்ராக்ருத வாஸா) பக்தியுடன் அதன் புனித நீரில் குளித்துக் கொண்டு (அப்ராக்ருத ஸ்நானா) பஜனை புரிந்தால் அவன் மிகவும் உயர்வான பிரேமையை அடைவான். அப்ராக்ருத வாஸா, அப்ராக்ருத ஸ்நானா என்றால் என்ன? பூதவுலக சம்பந்தமான அனைத்து ஆசைகளையும் அறவே துறந்து, தன் வாழ்நாள் முழுவதையும் ஸ்ரீமதி ராதிகாவுக்கு அர்ப்பணித்துக் கொண்டு, தன் மனதால் எப்போதும் ஸ்ரீமதி ராதாராணிக்கு மானஸ சேவை செய்ய வேண்டும். பின்னர் அவன் தன் பூத உடம்பை விடும் போது, நிரந்தரமான ஆத்ம சொரூபத்தைப் பெற்று எப்போதும் ஸ்ரீமதி ராதிகாவுக்கு நித்ய சேவை செய்கிறான். ஸ்ரீராதா குண்டத்தில் குளிக்கும் ஒரு சாதகன் மட்டுமே இந்த உயரிய பிரேமையை அடைகிறான்.

இந்த மிகவும் அரிய அதிர்ஷ்டம், பக்தியில் மிகச் சிறந்த நாரத முனிவருக்குக் கூடக் கிடைப்பது அரிது. அதுமட்டுமல்ல, ஸ்ரீகிருஷ்ணரிடம் சாந்த, தாஸ்ய, சாக்ய மற்றும் வாத்ஸல்ய பாவங்களில் சேவை புரியும் மிகவும் மேலான பக்தனால் கூட இந்த ஸ்ரீராதா குண்டத்தில் குளிக்க இயலுவதில்லை. கேவலம், உலக எண்ணங்கள் கொண்டிருக்கும் சாதாரண ஒருவனைப் பற்றி என்ன சொல்ல இயலும்? ஸ்ரீராதா குண்டத்தில் அப்ராக்ருத ஸ்நானம் செய்வதின் மகிமைகளைப் பற்றி இன்னமும் வேறு என்ன சொல்ல முடியும்? அதில் குளிப்பவர்கள் அரிய பாக்கியம் பெற்று ஸ்ரீவிருஷபானவியான ஸ்ரீமதி ராதிகாவின் பணிப் பெண்களாக மேலுலகம் அடைகின்றனர்.

ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் நெருங்கிய பக்தர் ஒருவர் கோவிந்த தாஸர் என்பவர். ஸ்ரீசைதன்ய மகாபிரபுவுடன் எப்போதும் அவரது நிழலைப் போல் சென்று திரிந்து வேண்டிய சேவைகளை அவர் மகாபிரபுவுக்கு எப்போதும் அன்புடன் செய்து வந்தார். அதே சமயம் ஒவ்வொரு நாளும் ஸ்ரீமன் மகாபிரபுவின் விஷேஷ லீலைகளைப் பற்றி எழுதி வைத்துக் கொண்டும் வந்தார். அவர் அவ்வாறு எழுதி சேகரித்து வைத்த வாக்கியங்கள் பின்னர் "கோவிந்த கடாஷம்" என்று புகழ் பெற்றன. பின்னர் ஸ்ரீகிருஷ்ண தாஸ கோஸ்வாமி ஸ்ரீரகு நாத தாஸ கோஸ்வாமியிடமிருந்து நேரடியாகக் கேட்டு, அவற்றைத்

தன் ஸ்ரீசைதன்ய சரிதாம்ருதத்தில் விவரித்தார். அந்த வாக்கியங்களே ஸ்ரீசைதன்ய மகாபிரபுவின் மகத்தான குணங்களை எல்லோருக்கும் வெளிச்சமாகத் தெரிவித்தது.

கீழ்வரும் சம்பவம் ஸ்ரீமான் மகாபிரபு ஜகன்னாத்பூரியில் தங்கியிருக்கும் போது நடந்தது. இந்தப் பூவுலகத்துக்கு மகாபிரபு வந்த காரணத்தை அவர் அச்சமயம் முழுவதுமாக பூர்த்தி செய்திருந்தார். அப்போது எல்லா லீலைகளையும் இறுதியாக முடித்துத் திரும்பி அவருலகம் செல்ல ஆசைப்பட்டார். ஒரு நாள் அவர் தன் நெருங்கிய பக்தர்கள் அனைவரையும் அழைத்துக் கொண்டு கடலோரத்துக்குச் சென்றார். அங்கே அந்தக் கடலைப் பார்த்ததும் ஷியாம சுந்தரரின் எண்ணங்கள் அவரிடம் உதித்தது. பக்திப் பரவசம் பொங்கியதால், எந்த விதமான வெளியுணர்வுகளுமின்றி சமாதி போலானார். பெரும் முயற்சிகளால் தான் பக்தர்கள் மகாபிரபுவை திரும்பவும் சுய நிலைக்குக் கொண்டு வந்தனர். நினைவு வந்ததும் உடனடியாக ஸ்ரீகௌர சுந்தரர் தன் பக்தர்களுக்கு உபதேசிக்க ஆரம்பித்தார். அந்தக் கூட்டத்தில் மகாபிரபுவின் மிகவும் பிரியமான ஸ்ரீல ரூப கோஸ்வாமியும் இருந்ததால், மகாபிரபு போதித்த உபதேசங்களை அப்படியே அவர் சுலோகங்களாக எழுதினார். அதுவே இந்த அமிர்தமான ஸ்ரீஉபதேசாம்ருதம் என்ற பெயரில் பெரும் மகிமை பெற்றது. ஒரு பக்தி சாதகனுக்கு இந்த உபதேசாம்ருதம் தனது ஜீவனைப் போன்றது! இதை அவன் எப்போதும் தன் கழுத்தில் மாலையாகக் கட்டிக் கொண்டிருக்க வேண்டும்.

பிருந்தாவனத்திலிருக்கும் புகழ்பெற்ற ஸ்ரீராதா ரமண விக்கிரகத்தின் சேவகனான ஸ்ரீராதா ரமண தாஸ கோஸ்வாமி, இந்த உபதேசாம்ருதத்தின் பதினொரு சுலோகங்களுக்கும் உபதேச பிரகாஷீகா தீக்கா என்ற உயரிய விரிவுரையை எழுதினார். ஆனால் சில காலம் கழிந்ததும் கலியுலகத்தின் உக்கிரம் அதிகரித்ததால், கலி பிரேம பக்தியை மறைத்துக் கொண்டது. இதைக் கண்ட ஸ்ரீ சைதன்ய மகாபிரபு, தன் நித்ய பக்தரான ஸ்ரீ பக்தி விநோத தாக்கூராவை இந்த உலகுக்கு அனுப்பி வைத்தார். அவர், அனைவருக்கும் எளிதில் புரியும் படி, ஸ்ரீஉபதேசாம்ருதத்துக்கு சுருக்கமான கருத்துரையை வழங்கினார். அதுவே பின்னர் பீயூஷ வர்ஷிணி விருத்தி என்று புகழ் பெற்றது.

ஸ்ரீகௌர சுந்தரர் அப்ராக்ருத விப்ரலம்ப ரஸாவின் உருவம். அது ஸ்ரீகிருஷ்ணரிடமிருந்து பிரியும்போது உண்டாகும் துக்கமான பாவ பக்தி மன நிலையைப் பற்றியது. அந்த விப்ரலம்ப ரஸ பக்தியை அவர் ரசித்தது மட்டுமின்றி அதை எவ்வாறு பெறலாம் என்பதையும் பிறருக்கு உபதேசித்தார். இந்த விப்ரலம்ப ரஸ பக்தியே பின்னர் ஸ்ரீகிருஷ்ணரை அடையும் போது உண்டாகும் சம்போக ரஸ

பக்தியை ஊட்டி வளர்க்க உதவுகிறது. சிரத்தையுடன் பக்தியை வளர்க்கும் ஒவ்வொரு சாதகனுக்கும் இந்த உபதேசங்கள் மிகவும் முக்கியமானவைகளாதனால் அவற்றைக் கண்டிப்பாக ஏற்று அனுசரிக்க வேண்டும். இல்லாவிட்டால் கிருஷ்ண பிரேமையை அவர்கள் ஒருபோதும் அடைய இயலாது.

மிகவும் கேடுகள் கெட்டு இழிந்த இந்தக் கலியுகமான தற்போதைய நவீன காலத்தில், கலியின் மொத்த உருவமான கலி மகாராஜா ஸ்ரீகௌராவின் போலி பக்தனின் ரூபத்தை எடுத்துள்ளான். அவன் சில சமயங்களில் போலி நாடகமாடும் சஹஜ்யாக்களாகவும், ஆவுலா, பாவுலா, நேடா அல்லது நேடி என்ற வழிபாட்டு முறைகளாகவும் தோன்றுகிறான். தன் பெரும் முயற்சிகளால் இப்படிப்பட்ட தவறான தத்துவங்களையும், மாயாவாதம், கௌர நாகரி என்ற பக்திக்கு எதிரானவைகளையும் உண்டு பண்ணி மக்களுக்குப் போதிக்கிறான்.

ஐயகோ! பார் இந்த கலி மகாராஜாவின் ஆதிக்கத்தை! சிலர் தன்னை, "நான் தான் கௌர ஹரி" என்கின்றனர். இன்னும் சிலர் தங்களை குருக்கள் என்றும், மற்றும் சிலர் படைக்கும் கடவுளோ அல்லது சிவ பெருமானோ என்றும் கூறுகின்றனர். அவர்கள் அந்த கொடும் கலி மகாராஜா உபதேசித்த போலி தத்துவங்களை மிகவும் பிரயாசைகள் எடுத்துப் பரப்பி மக்களை ஏமாற்றுகிறார்கள்! அவர்களது போலி உபதேசத்தில் மகிழ்ந்து, கலி மகாராஜா அவர்களை ஆசீர்வதித்து வேண்டிய அளவு செல்வங்கள் (கனகா), பெண்கள் (காமினி) மற்றும் புகழ் (பிரதிஷ்தா) அனைத்தையும் வழங்குகிறான். அவர்களது போலித் தத்துவங்களில் மயங்கி, பாமர மக்கள் சுத்த பக்தி பகவத் பஜனை அனைத்தையும் விட்டுவிட்டு, பதிலாக உலக இன்பங்களை சுவைப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட தவறான தத்துவங்களைப் பின்பற்றுகிறார்கள். மேலும் அவர்கள் உலக இன்ப வெறியில் போதை கொண்டு, பேரழிவை இறுதியில் வழங்கும் மலையுச்சியை நோக்கி அவர்கள் முன்னேறுவதை அறியாமலிருக்கிறார்கள்.

ஓ! நம்பிக்கையுள்ள பக்தனே, நீ அந்த வழியில் சென்று விடாதே! மிகப் பெரும் மகாத்மாக்களான ஸ்ரீசொரூப தாமோதரா, ஸ்ரீல ரூப கோஸ்வாமி, ஸ்ரீரகுநாத தாஸ கோஸ்வாமி, ஸ்ரீநரோத்தம தாஸ தாக்கூரா போன்றவர்கள் நமக்குக் காட்டிய பக்தி மார்க்கத்தைப் பின்பற்றி எந்த ஒரு தடுமாற்றமுமில்லாமல் உறுதியாக முன்னேறுவாயாக! ஸ்ரீகௌர நித்யானந்தாவினால் பின்பற்றப் பட்டு அவர்களால் உபதேசிக்கப் பட்ட இந்தப் பக்தி மார்க்கமே ஒருவனைச் சுத்தமான கிருஷ்ண பிரேமையில் சேர்க்கிறது. எப்போதும் விரஜ பூமியில் வாழ்ந்து கொண்டு ஸ்ரீராதா கிருஷ்ணரின் நாமம், ரூபம், குணம், லீலை இவற்றை நினைத்துக் கொண்டே பஜனை செய். கௌர நாகரி என்ற சித்தாந்தம் பக்திக்கு எதிரான

ஒரு தத்துவம். இப்படிப்பட்டப் போலித் தத்துவங்களை விட்டு எப்போதும் விலகி இரு. பிரேம பக்தியின் வடிவமான ஸ்ரீவிஷ்ணு பிரியா, ஸ்ரீலட்சுமி பிரியா, மற்றும் புண்ணியத் தலங்களின் ரூபமான ஸ்ரீநீளா தேவி அனைவரும், ஸ்ரீராதாவும் ஸ்ரீகிருஷ்ணரும் ஒருங்கே சேர்ந்த ரூபமான ஸ்ரீகௌர சுந்தரருக்கு எப்போதும் பணிவிடை செய்கின்றனர். இந்த உண்மையை எப்போதும் மனதில் கொண்டு அவரிடம் சரணடைந்து, விரஜ கோபியர்களின் அடிச்சுவடுகளை இரவும் பகலும் பின்பற்றி மனதால் எப்போதும் சேவை செய். அவ்வாறு செய்தால் கிடைப்பதற்கு மிகவும் அரிதான ஸ்ரீராதா கிருஷ்ண பிரேம சேவை எளிதாக உனக்குக் கிடைத்து விடும்.

மகா பெரும் புண்ணியத் தலமான மாயாபூரை ஸ்ரீபக்தி விநோத தாக்கூராவே உலகுக்கு வெளிப்படுத்தினார். பின்னர் அங்கே அவர் ஸ்ரீகௌர நித்யானந்தா, ஸ்ரீகௌர கதாதாரா, ஸ்ரீகௌர விஷ்ணுப் பிரியா, ஸ்ரீகௌர லட்சுமிப் பிரியா முதலான விக்கிரங்களை ஸ்தாபித்து வழிபாடு முறைகளைத் துவக்கி வைத்தார். ஸ்ரீகௌர ஹரி மற்றும் ஸ்ரீகிருஷ்ணரின் புண்ணிய நாமங்களையும் சுத்த பக்தி என்ற தத்துவத்தையும் பரப்பினார். மேலும் அவர் சுத்த பக்தியைப் பற்றி பற்பல நூல்கள் எழுதியது மட்டுமின்றி அவர் பல பழங்கால பக்தி சாஸ்திரங்களை மொழி பெயர்க்கவும் செய்தார். அதுமட்டுமின்றி அவர் பக்தி தத்துவத்தைப் பற்றி பற்பல கருத்துரைகள், கட்டுரைகள் மற்றும் பொருளுரைகளும் எழுதியுள்ளார்.

தன் கடைசிக் காலத்தில், பக்தியற்ற ஜனங்களை அவர் தொடர்ந்து காப்பாற்ற முயலவில்லை. தனக்கு மிகவும் வயதாகி விட்டது என்ற சாக்குப் போக்கை வெளியுலகிற்குக் கூறி மௌன விரதம் கொண்டு, தன் மனதால் இடைவிடாமல் மானஸ சேவை செய்து கொண்டேயிருந்தார். ஆனால் இந்த உலகில் கட்டுண்டு அல்லல்படும் ஜீவன்களிடம் அவருக்கு உண்டான கருணையினால், தன் கண்களிலிருந்து கண்ணீர் வழிய என்னை நோக்கி ஸ்ரீசைதன்ய மகாபிரபுவும் அவரது நித்திய கூட்டாளிகளும் போதித்த சுத்த பக்தியைப் பற்றி உலகுக்குப் போதிக்குமாறு கட்டளையிட்டார். மேலும் அவர் ஸ்ரீஉபதேசாம்ருதத்துக்கு எழுதிய பீயூஷ வர்ஷிணி விருத்தி என்ற கருத்துரைக்கு விளக்கவுரை எழுதுமாறும் உத்தரவிட்டார். அவரது பாத தூளியை நான் என் தலை மேற் கொண்டு அந்தப் பணியைத் தொடர்ந்தேன். ஆனால் நான் ஸ்ரீஉபதேசாம்ருதத்தின் முதல் எட்டு சுலோகங்களை முடிக்கும் தருவாயிலேயே அவர் ஸ்ரீராதா குண்டத்திலுள்ள சுவானந்த சுக்கட குஞ்சத்திலிருந்து அவர் ஸ்ரீராதா கிருஷ்ணரின் நித்திய லீலைகளில் கலந்து விட்டார்.

ஓ, ஸ்ரீபக்தி விநோத தாக்கூரா! ஸ்ரீமதி ராதிகாவின் பிரிய பக்தரே! நான் இன்று ஸ்ரீஉபதேசாம்ருதத்தின் சுலோகங்களுக்கு என்

விளக்கவுரையை முடித்து, இந்த ஆதரவற்ற உமது சேவகன் அதை உமது தாமரைக் கரங்களில் வழங்குகிறேன். தயவு செய்து இதில் திருப்தி கொள்ள வேண்டும். உமக்கு எல்லா மகிமைகளும் உரித்தாகுக.

.......

ஸ்ரீ கௌர சந்திரரை நினைத்தவாறு, மாயாபுரியில் உள்ள சந்திர சேகர பவனத்தில் பாத்ர பாதா என்ற சந்திர மாசத்தில் இருபத்தி இரண்டாம் நாள் இந்த விளக்கவுரையை முடிக்கிறேன்.

# வினாக்கள்

1. ஸ்ரீ உபதேசஅமிர்தத்தை முதலில் 'போதித்தவர்' யார்?
   1. ஸ்ரீல ரூபகோஸ்வாமி
   2. வேத வியாசர்
   3. ஸ்ரீல ஜீவகோஸ்வாமி
   4. ஸ்ரீசைதன்ய மகாபிரபு

2. 'ஸ்ரீ உபதேசஅமிர்தம்' என்ற நூலை 'எழுதியவர்' யார்?
   1. வேத வியாசர்
   2. அத்வைத ஆச்சாரியார்
   3. ஸ்ரீல ரூபகோஸ்வாமி
   4. ஸ்ரீல சனாதன கோஸ்வாமி

3. ஸ்ரீல ரூபகோஸ்வாமிக்கு முகமதிய மன்னன் கொடுத்த பெயர்:
   1. தபீர தாஸா
   2. சாகர மல்லிகா
   3. அமரா
   4. சந்தோஷா

4. சைதன்ய மகாபிரபுவின் நேரடி சீடர்களான ரூப, சனாதன கோஸ்வாமிகள் செய்த பக்தி சேவைகள்:
   1. பிரஜ புண்ணிய தலங்களைப் புதுப்பித்தல்
   2. முறையான வழிபாட்டு முறைகளை ஏற்படுத்துதல்
   3. பக்தி சாஸ்திரங்களைப் படைத்தல்
   4. அனைத்தும்

5. ஏழாவது கோஸ்வாமி என அழைக்கப்படுபவர் யார்?
   1. ஸ்ரீல நரோத்தமதாஸ தாகூரா
   2. ஸ்ரீல பக்தி வினோத தாகூரா
   3. ஸ்ரீல கோபாலபட்ட கோஸ்வாமி
   4. ஸ்ரீல பக்தி வினோத தாகூரா

6. யாரால் இந்த உலகிற்கே குருவாக முடியும்?
   1. ஸ்ரீகிருஷ்ணரைத் தவிர வேறு எதையும் பேச எழும் ஆசையைக் கட்டுப்படுத்துபவன்
   2. மனதையும், கோபத்தையும் கட்டுப்படுத்துபவன்
   3. நாவையும், வயிற்றையும், இந்திரியங்களையும் கட்டுப்படுத்துபவன்
   4. அனைத்தும்

7. 'சிருங்கார ரஸம்' எனப்படுவது எது?

1. பகவானை குழந்தையாக நினைத்து வழிபடுதல்
2. பகவானை எஜமானனாக நினைத்து வழிபடுதல்
3. ஸ்ரீ ராதா கிருஷ்ணருக்கு பணிவிடை செய்வதில் மட்டுமே ஈடுபடுதல்
4. பகவானை சக நண்பனாக பாவித்து வழிபடுதல்

8. மனம், உடல் முதலியவற்றால் வரும் உந்துதல்களைக் கட்டுப்படுத்துபவன் எவ்வாறு அழைக்கப்படுகிறான்?

1. மகாஸ்வாமி
2. கோதாஸன்
3. சமூக தாஸன்
4. கோஸ்வாமி

9. 'அத்யாஹார' என்ற சொல்லின் பொருள் என்ன?

1. அளவுக்கு அதிகமாக உண்ணுதல்
2. அளவுக்கு அதிகமாக பொருள் சேர்த்தல்
3. எப்போதும் ஹரிநாமத்தை ஜெபித்தல்
4. ஒன்றும் இரண்டும்

10. பக்திக்கு அனுகூலமான சாதகங்கள்

1. குருவின் மீது நம்பிக்கை
2. சாஸ்திரங்களின் மீது நம்பிக்கை
3. மாயா வாதிகளுடன் தொடர்பு கொள்ளாமை
4. அனைத்தும்

11. 'உத்தம அதிகாரி ' எனப்படுபவர் யார்?

1. ஆரம்ப நிலையிலுள்ள பக்தர்
2. பக்தர்களுடன் மட்டும் சேர்க்கை வைப்பவர்
3. எப்போதும் கிருஷ்ண சேவையில் ஈடுபடுபவர்
4. மற்றவர்களுக்கு உபதேசிக்க ஆசைப்படுபவர்

12. ' பக்த சந்தர்பா' என்ற நூலின் ஆசிரியர்

1. ஸ்ரீல ரூபகோஸ்வாமி
2. ஸ்ரீல ஜீவகோஸ்வாமி
3. ஸ்ரீல ஜெயதேவகோஸ்வாமி
4. ஸ்ரீல சனாதன கோஸ்வாமி

13. சுத்த பக்தர்களை வெளித்தோற்றத்தைக் கொண்டு கணிக்கக்கூடாது என்பதற்கு எடுத்துக்காட்டு எது?

1. சமுத்திரம்
2. கங்கை நதி
3. காவேரி
4. எதுவுமில்லை

14. 'அவித்யா' (அறியாமை) எந்த நோயுடன் ஒப்பிடப்படுகிறது?
   1. காய்ச்சல்
   2. வாத நோய்
   3. மஞ்சள் காமாலை
   4. பித்த நோய்

15. எல்லா உபதேசங்களின் சாரம் எனப்படுவது
   1. சமூகத்துக்கு ஏராளமான சேவை செய்தல்
   2. பிரஜாவில் வசித்தல்
   3. பிரஜ பக்தர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றுதல்
   4. இரண்டும், மூன்றும்

16. வைத்தி பக்தி எனப்படுவது
   1. விதிகளைத் தாண்டி பிரேம பக்தி கொள்ளுதல்
   2. சாஸ்திர விதிமுறைகளைகளின் படி பக்தி செய்தல்
   3. அஷ்ட காலிய லீலைகளில் மூழ்கியிருத்தல்
   4. பிரம்ம ஐக்கியமாக ஞானயோகம் செய்தல்

17. ஒரு சாதகன் ஆன்மீக வாழ்வில் முதலில் கடைபிடிக்க வேண்டியது
   1. ஸ்மரணம்
   2. கீர்த்தனம்
   3. ஸ்ரவணம்
   4. அர்ச்சனம்

18. ஒரு சாதகனுக்கு எப்போது பக்தியில்'ருசி' வரும்
   1. தீவிரமாக தியான யோகம் செய்யும் போது
   2. சாஸ்திரங்கள், குரு, வைஷ்ணவ உபதேசங்களை கடைபிடிக்கும் போது
   3. கடுமையாக உழைக்கும் போது
   4. சமூக சேவைகள் செய்யும் போது

19. பிரஜ மண்டலத்தில் புல்லாக பிறக்க ஆசைப்பட்டவர் யார்?
   1. விதுரர்
   2. உத்தவர்
   3. பீஷ்மர்
   4. அர்ஜுனர்

20. பிருந்தாவனக் காடுகளை விட உயர்ந்தது எது?
   1. மதுரா புரி
   2. மேரு மலை
   3. கோவர்த்தன மலை
   4. இமய மலை

21. ‘பிரஜல்ப' என்ற வார்த்தைக்கு என்ன பொருள்?
1. ஸ்ரீகிருஷ்ணரைப் பற்றி பிரச்சாரம் செய்தல்
2. மற்றவர்களைப் பற்றி வீண் வம்பு பேசுதல்
3. பிரஜ வாசிகளைப் பின்பற்றுதல்
4. ஹரி நாமங்களை எப்போதும் ஜெபித்தல்

22. ஸ்ரீ கிருஷ்ணர் லீலைகள் நடத்திய அனைத்து புண்ணிய தலங்களிலும் தலை சிறந்தது எது?
1. பிருந்தாவனம்
2. மதுரா புரி
3. ராதா குண்டம்
4. கோவர்த்தன மலை

23. பகவான் லீலைகள் நடத்திய புண்ணிய தலங்கள், பகவானின் எந்த சக்தியால் உண்டாக்கப்பட்டது?
1. புற சக்தி (மாயா சக்தி)
2. அந்தரங்க சக்தி (சொரூப சக்தி)
3. தடஸ்த சக்தி (ஜீவ சக்தி)
4. பகிரங்க சக்தி

24. ஸ்ரீகிருஷ்ணரின் பக்தர்களில் மிகவும் உயர்ந்தவர் யார்?
1. கர்மயோகி
2. ஞான யோகி
3. நாரதர், உத்தவர் போன்ற பக்தி யோகிகள்
4. பிருந்தாவனக் கோபிகைகள்

25. ராதா குண்டத்தின் மகிமை எத்தகையது?
1. ஸ்ரீகிருஷ்ணருக்கு மிகவும் பிரியமானது
2. ஒரு முறை குளித்தாலே பிரேம பக்தியை அளிப்பது
3. ஸ்ரீராதா ராணியின் கருணையின் வடிவமானது
4. அனைத்தும்

"ஸ்ரீஉபதேஸாம்ருதத்தில் இரண்டு விதமான உபதேசங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதலாவது, பக்திக்குப் புறம்பான, அதாவது, பக்தியை வளர விடாதவைகளை விலக்குதல்; இரண்டாவது, பக்தியை வளர்க்க உதவுவதை அனுசரித்தல். இந்த இரண்டு விதங்களான உபதேசங்களை ஒரு சாதகன் கடைப்பிடிக்கவில்லையென்றால் அவனது இதயத்தில் "பாவ-பக்தி" உண்டாவதற்கு வாய்ப்பே இல்லை. பின்னர் வரும் "பிரேம பக்தி" யைப் பற்றியோ ஒருபோதும் நினைத்துக் கூட பார்க்க முடியாது! தற்சமயம் எத்தனையோ பேர், தங்களுக்கு உகந்தது போல் கட்டுக் கதைகளாக பக்தித் தத்துவங்களை உண்டு பண்ணி வெளிப்பகட்டான மதங்களை ஸ்தாபிக்கின்றனர். அவைகள் புனிதமான வேதங்களுக்கு முரண்படுவது மட்டுமின்றி பக்திக்கும் எதிரானவைகளே..."

"பக்தி மார்க்கத்தில் நுழைய விரும்பும் ஒரு சாதகன், ஆன்மீக வாழ்க்கைக்கு உதவாதவற்றையெல்லாம் முதலிலேயே விட்டுவிட வேண்டியது மிகவும் அவசியம். அவன் தன் கட்டுக்கடங்காத மனம், வேண்டாத வாக்கு, கோபம், நாக்கு, வயிறு மற்றும் புணர் இந்திரியங்களின் உந்துதல், அளவுக்கு மிஞ்சி உண்ணுதல், தேவையற்ற முயற்சிகள், வீண் வம்புப் பேச்சுக்கள், பக்தி மார்க்க விதிமுறைகளைச் சரியாகக் கடைப்பிடிக்காமலிருத்தல், கெட்ட சேர்க்கைகள், மாயாவாதம் போன்ற பிரயோஜனமற்ற கொள்கைகளில் மனதைச் செலுத்துதல் (அல்லது செலுத்த ஆசைப்படுதல்) - இவை அனைத்தையும் விட வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக, பக்தியை மேன்மேலும் வளர வைக்க உதவும் ஆர்வம், தீர்க்கம், பொறுமை, மற்றும் பக்தியைச் சார்ந்த நற்குணங்கள் அனைத்தையும் கொண்டு, சுத்த பக்தர்கள் விதித்த முறைகளைக் கடைப் பிடிக்க வேண்டும்..."

## விளக்க நூலாசிரியரைப் பற்றி

ஸ்ரீ ஸ்ரீமத் பக்தி வேதாந்த நாராயண மஹாராஜா உலக ஜீவன்களின் மேல் கருணை கொண்டு, இந்தியாவில் புனித கங்கை நதியோரமுள்ள தேவாரிபூர் என்ற கிராமத்தில் 1921-ஆம் ஆண்டு தோன்றினார்.

கிருஷ்ண பக்தர்களால் குருதேவர் அன்று அன்புடன் அழைக்கப்படும் ஸ்ரீநாராயண மஹாராஜா, ஸ்ரீகிருஷ்ணரிடமிருந்து தொடங்கி வழி வழியாக வரும் பரம்பரையைச் சார்ந்தவர். ஆன்மீகத்தில் மிகவும் உயர்ந்த நிலையை அடைந்து அனைத்து உண்மைகளையும் நேரடியாக உணர்ந்தவர். ஸ்ரீல பக்தி வேதாந்த சுவாமி ஸ்ரீல பிரபு பாதரின் சன்னியாச குருவான ஸ்ரீல பக்தி பிரஞ்ஞான கேசவ கோஸ்வாமி மஹாராஜாவிடம் தீக்ஷையும் சன்னியாசமும் எடுத்தவர். பின்னர் தன் மிகவும் நெருங்கிய சிக்ஷ குருவான ஸ்ரீல பக்தி வேதாந்த சுவாமி ஸ்ரீல பிரபு பாதருக்கு அவரது வேண்டுதலின் படி சமாதியும் கொடுத்தவர்.

அனைத்து வேதங்கள், உபநிஷத்துக்கள், புராணங்கள் மற்றும் அனைத்து ஆன்மீக சாஸ்திரங்களிலும் மிக நன்றாக தேர்ச்சி பெற்று ஏராளமான நூல்களையும் வியாக்கியானங்களையும் எழுதியவர். அவை அனைத்தும் ஆங்கிலத்திலும் மற்ற நிறைய மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

உலகெங்கிலும் உள்ள மக்கள் ஜாதி, மத, நிற வேறுபாடு இல்லாமல் ஸ்ரீமத் நாராயண மஹாராஜாவிடம் அடைக்கலம் அடைந்தனர். அவரது சுயநலமற்ற உண்மையான அன்பும், ஆதரவும், உன்னதமான ஆன்மீக சேவையும் இந்த உலகின் அனைத்து மக்களையும் எப்போதும் ஈர்க்கின்றன. ஏராளமான சேவாலயங்களையும் பக்தித் தொண்டு திருவனங்களையும் நடத்தி வந்ததுடன், உலகெங்கும் சென்று பக்தர்களின் தேவைகளை கனிவுடன் கவனித்தவர். உலகத்தை சுமார் 30 தடவையாவது வலம் வந்து கிருஷ்ண பக்தியை மக்களுக்கு ஊட்டியவர்.